# வனிதாலயம்

சகுந்தலாராஜன்
எழுதியது

UNIVERSITY
24 JUN 1971

பவானி பிரசுரம்
ராயவரம் :: புதுக்கோட்டை சமஸ்தானம்

முதல் பதிப்பு: டிசம்பர்—1946

உரிமை பதிவு
செய்யப்பெற்றது

ரூபாய் இரண்டு
(தபால் செலவு தனி)

அச்சிட்டோர்:
சக்தி பிரஸ் லிமிடெட்
ராயப்பேட்டை சென்னை—14

# பதிப்புரை

இந்நூலாசிரியர் ஸ்ரீமதி சகுந்தலாராஜன் பிரபலமான சஞ்சிகைகளில் சிறுகதை, நாவல், ஆகியவை எழுதி புகழடைந்தவர். அவருடைய இந்த 'வனிதாலயம்' எனும் நாவலும் தமிழ் மக்களின் மனதைப் பெரிதும் கவரக்கூடும் என்பதில் சந்தேகமில்லை.

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI

# வனிதாலயம்

## அத்தியாயம் 1

கோவில், குளம் என்று பேசும்போது, அழகிய கோபுரமுள்ள கோவிலும், அதற்குப் பக்கத்தில் பளிங்கு போன்ற நீருடன் கூறிய ஆறோ, குளமோதான் நம் மனக் கண்முன் வந்து நிற்கிறது. ஆனால், இது அந்தக் கோவிலுக்கும், குளத்திற்கும் போகுமுன்புதான். குளங்களில் பாசியில்லாத குளம் வெகு அபூர்வம். கோவிலுக்குள்ளும், நதி தீரத்திலுமோ வம்பே பிரதானம். வடக்கே போனல், பண்டாக்களின் விஷமம் என்கிருர்கள். எனவே, மாயவரம் காவிரி ஆற்றங்கரையில் வம்பே முக்கியத்துவம் வகித்ததை நாம் ஓர் அதிசயமாகச் சொல்வதற் கில்லை. குப்பிப் பாட்டி (ஊர் வம்புக் கெல்லாம் உற்பத்தி ஸ்தானமாக இருப்பவள்) புழுதியினுல் செக்கச் செவேலென்று சிவந்திருந்த தன் புடவையை விழுந்து விழுந்து தோய்த்து, ஒட்டப் பிழிந்து இடுப்பில் கட்டிக்கொண்டாள். நாற் புறமும் பார்த்துவிட்டு ஏதோ முணுமுணுத்தவாறு இரண்டு உத்திரணி தண்ணீரைக் குடித்து விட்டு ருத்திராக்ஷமாலையை உருட்டிக்கொண்டே ஜபிக்க ஆரம்பித்தாள். (ஜபமோ அல்லது யாருக்காவது சாபமோ, யார்கண்டார்கள்?). அப்பொழுது அங்கு ஜலம் மொண்டுபோக வந்த ஓர் யுவதியின் மீது பாட்டியின் கழுகுத் திருஷ்டி விழுந்தது. அப்பெண் அக்கம் பக்கம் பார்க்காமல், ஏதோ தீவிரமான சிந்தனையுடன், ஜலத்தை எடுத்துக்கொண்டு விறு விறுவெனத் திரும்பி நடந்தாள். அதைக் கண்ட பாட்டி,

அவள் பின்னழகைப் பார்த்து ஓர் ஏளனச் சிரிப்பு சிரித்துக் கொண்டே "பார்த்தாயாடீ, காமு" என்றாள், குனிந்து குடத்தைத் தேய்த்துக்கொண்டிருந்த ஒரு பழுத்த சுமங்கலியிடம். "என்னது?" என்ற கேள்வியுடன், நிமிர்ந்து அந்தப் பெண் போன திக்கை நோக்கினாள் காமு. "ஊம்! கிரகசாரம்!" என்று முனகிக் கொண்டாள் பாட்டி. பக்கத்திலிருந்த சிலர், இதில் சேர்ந்து கொண்டனர். "ஊருக்குப் புதிசோ? யார் அவள்?" என்று வெகு அக்கறையாக விசாரித்தாள் ஒருத்தி.

"ஆசாரமா ஸ்நானம் செய்யற இடத்திலேகூட இந்த மாதிரி பாபாத்மாக்கள் வந்து சேர்ந்துடறாளே, அதைச் சொல்லு" என்று மறுபடியும் அங்கலாய்த்தாள் பாட்டி. இதைக் கேட்டுக்கொண்டே வந்த ராஜம் என்னும் சிறுமி "ஏன், பாட்டி! கண்ணாலே கண்டாப்போலே சொல்லறேளே? அப்படி என்ன பாபத்தை அவள் செஞ்சுட்டா? கல்பகத்தை யார் அப்படிக் கெடுதலாகச் சொல்ல முடியும்?" என்று கேட்டதும் பாட்டிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "ஆமாண்டி, அம்மா! அவளுக்கு நீ வக்காலத்து வாங்கி யிருக்கயாக்கும்! போறும், எனக்கு! ஊர் சிரிக்கிறது!" என்றாள்.

"யாரைப் பார்த்து?" என்று குதர்க்கமாகக் கேட்டாள் அந்தப் பெண்.

"ஏண்டி! பிரமாதமாப் பரிஞ்சு பேச வந்துட்டயே? அவளும் இந்த ஊருக்கு வந்து மாசம் ஆறாகிறது. கல்யாணமானவளா, இல்லே, அறுத்துப் போனவளா என்று ஒண்ணுமே தெரியல்லே. மஞ்சளும் குங்குமமுமா வேறே இருக்கா."

"அதிலே இருந்துகூடத் தெரியலியா உங்களுக்கு, அவ கல்யாணமான சுமங்கலின்னு?"

"சீ, அஸத்து! அப்ப நான் சொல்றது புரளியா? வம்புக்

காரின்னு நினைச்சுண்டயா என்னை" என்று கண்டபடி இரையத் தொடங்கினாள் கிழவி.

"பேசாம இருங்கோ பாட்டி! நேத்துப் பொறந்தது ஏதாவது உளறினால் உங்களுக் கென்ன?" என்று காமு அம்மாமி பாட்டியைத் தேற்றினாள்.

"அதென்ன, அப்படிச் சொல்லறே? கையிலே ஜப மாலையோடே நான் சொல்றேன்! அதைப் பொய்யின்னு சொல்றவா நாக்கு..." என்று பாட்டி சஹஸ்ரநாம அர்ச்சனை செய்ய ஆரம்பித்தாள்.

ஆனால், ராஜம் இதை யெல்லாம் லட்சியம் செய்யவில்லை. கால் சிலம்பு 'ஜல்'லென்று ஒலிக்க, கம்பீரமாய் வீட்டைப் பார்க்க நடையைக் கட்டினாள் அவள்.

* * *

இத்தனை வம்புக்கும் இலக்கான கல்பகமோ, ஆற்றங் கரையிலிருந்து நேரே ஓர் சிறிய ஓட்டு வீட்டிற்குள் நுழைந்தாள். உள்ளே இருமலில் அவஸ்தைப் பட்டுக் கொண் டிருந்த அவளுடைய தாயார் அலமேலு அம்மாள், "யாரது? கற்பகமா?" என ஈனஸ்வரத்தில் கேட்டாள். "ஆமாம், அம்மா" என்று பரிவுடன் கூறிக்கொண்டே அருகில் வந்து உட்கார்ந்தாள் பெண்.

"கல்பகம்! இன்றைக்காவது கடிதம் வந்ததா?" என்று வெகு ஆவலாகக் கேட்டாள் தாயார்.

"அம்மா! உடம்பை ஏன் அலட்டிக் கொள்கிறாய்? வருகிறபோது வரட்டுமே?"

"நீ வயசிலே சின்னவள், கல்பகம்! மனோ திடத்தில் தான் நீ பெரியவள். என் மனசு கேட்கவில்லையே, அம்மா! கிளியை வளர்த்து..." முடிக்க மாட்டாமல் தேம்பினாள் பெற்றவள்.

கல்பகம் பொங்கிவரும் கண்ணீரை அடக்கிக்கொண்டு, "கஞ்சி போடட்டுமா, சொல்லேன்!" என்று பேச்சை

மாற்றினாள். வெளியிலிருந்து "அம்மாமி!" என்று கூப்பிட்டுக் கொண்டே அச் சமயம் உள்ளே வந்தாள் ராஜம். அவள் கையில் டம்ளர் நிறையப் பசும் பால் இருந்தது. "ராஜம்! உன்னுடைய இந்த உபகாரத்திற்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்! நடுக் காட்டில் விட்டவர்களுக்கு ஒரு வழி பிறந்தால், எப்படி அவர்கள் மனம் பூரிக்குமோ, அப்படித்தான் இருக்கு என் நிலைமையும்..." என்று கனிவுடன் கூறினாள் கல்பகம்.

"கல்பக மாமி! இப்படியெல்லாம் பேசினால், எனக்கு ரொம்ப மனசு கஷ்டப்படும் அப்புறம்....ஆமாம்..." என்று புன்சிரிப்புடன் கூறியவாறு தன் வீட்டிலிருந்து கறந்து கொண்டு வந்த அந்தப் பாலை கல்பகத்தின் கையில் கொடுத்தாள் ராஜம்.

கல்பகம் கஞ்சி வைத்துக்கொண்டிருக்கையில், ராஜம் அலமேலுவிடம் போய் உட்கார்ந்து "பாருங்கோ மாமீ! நம்ப கல்பகத்தைப்பற்றி இந்த ஊரில் கொஞ்ச வம்பு பேசவில்லை. காதுக்கே நாராசமாய் இருக்கு. நான் நன்றாய் சண்டை போட்டேன் அவாளிடம்" என்றாள். "கண்ணா! எங்களுக்காக நீ ஏன் உங்கள் ஊர் மனுஷாளைப் பகைச்சுக்கிறே அம்மா! அவள் தலையிலெழுத்து..." என்று சொல்லும் போதே இருமல் வந்து திணறினாள் அலமேலு.

கல்பகம், ராஜத்தைத் தனியே அழைத்துச் சென்று, "ராஜம்! இந்த விஷயமெல்லாம் அம்மாகிட்டே சொல்லாதேயம்மா! அவள் மனம் புழுங்கிச் செத்துடுவாள். யார் என்ன பேசினால் என்ன? நம் மட்டில் ஹ்ருதயபூர்வமாய் நமக்குத் தெரியும்..."

"இருந்தாலும் அந்தக் குப்பிப் பாட்டி ரொம்பக் கெட்டவள். எங்கம்மா கூட சொல்லுவா. இவள் ஏதோ பேசினதிலேதான் மனம் வெதும்பிப் போய் எங்கம்மா

செத்துப் போனாள், மாமி!" என்று கம்மிய குரலில் கூறி முடித்தாள் ராஜம்.

"அப்பா! இந்த விஷம் தீட்டிய நாக்குகளால் மனித உள்ளம் எப்படித் துன்புறு மென்பதை ஏன்தான் இவர்கள் அறியவில்லையோ!" என எண்ணிக்கொண்டாள் கல்பகம். "பன்னிரண்டு வயதுச் சிறுமியின் புத்திசாலித் தனமும், குணமும், அறுபது வயதைத் தாண்டியும்கூட இவர்களுக்கு இல்லையே! இதுவும் நமது பாபத்தின் பலன் தான்..." என்று தன்னையே ஒரு நிமிஷம் நொந்து கொள்ளவும் தோன்றிற்று அப் பேதைக்கு.

## அத்தியாயம் 2

"ஏண்டா, ராமு! நான் கேள்விப்படுவது நிஜந்தானா? ஏன் தலையைக் குனிந்துகொண்டாய்? பதில் சொல்லேன்!" என்று தன் நண்பனைப் பிடித்துக் குலுக்கினான் கண்ணன். இருவரும் சிறிது நேரம் மௌனமாயிருந்தனர்.

பின்பு ராமு, "கண்ணா! என்மீது தப்பு இல்லையடா! இவர்களெல்லாருமாகச் சேர்ந்து..." என்று ஏதோ ஆரம்பித்தான்.

"ஐயோ, பாவம்! நீ பச்சைக் குழந்தை. ஆட்டுவார் கைப்பொம்மை! அதுதானே?" என்று சிறிது பாத்யதையுடனேயே கோபித்துக்கொண்டான் கண்ணன்.

"கண்ணா! நான் அபராதிதான். ஒப்புக்கொள்கிறேன்! தண்டனை என்ன உண்டோ சொல்."

"இனிமேல் என்ன செய்ய முடியுமென்று திகைக்காதே...இரண்டு பேரையும் வைத்துக்கொண்டு குடித்தனம் நடத்து. இப்பொழுதே எழுதிப்போடு உன் மனைவிக்கு......"

"என்னவென்று?"

"அதுகூட நான் சொல்லணுமா? உனக்கு இங்கே பெங்களூரில் வேலையாகிவிட்டதென்றும், இனி,பெற்றோர்களுக்காக மனைவியைத் தள்ளும் உத்தேசமில்லையென்றும், ஒரு துணையுடன் புறப்பட்டு வரும்படியும் எழுதேன்."

"ஊம்!" என்றான் ராமு.

"ஊம் எதற்கு? அவர்கள் சென்னையில்தானே இருக்கிறார்கள்? விலாசம் தெரியுமோ இல்லையோ?" என்று கேட்டவாறே கண்ணன் காகிதமும் பேனாவும் கொண்டு

வந்து ராமுவின் எதிரில் வைத்தான். பிறகு தான் ஒரு புறமாகப்போய் உட்கார்ந்துகொண்டான்.

ராமு கடிதத்தை எழுதி முடித்தபின் அதை எடுத்துக் கொண்டு இருவருமாகத் தபாலாபீசுக்குச் சென்றார்கள். "கண்ணு! நீ சொன்னபடியே செய்து விட்டேன். முதல் மனைவி இரண்டாம் மனைவி இரண்டு பேருமாய் வீட்டில் யுத்த களத்தை ஆரம்பித்துவிட்டால், பிறகு நீதான் வந்து விலக்கணும்!" என்றான் ராமு, நண்பனின் முகத்தைக் கூர்ந்து நோக்கியவாறு.

"ஆகட்டும். ஆனால் உன் மனைவிகள் தங்களுக்குள் ஒற்றுமையாக இருப்பார்களென்றுதான் நான் நினைக்கிறேன்."

"ஹூம்! பெரிய ஜோஸ்யம் சொன்னாயே!"

"ஜோஸ்யம் தெரிந்தால் ஏன் இப்படி ஆகிறது? முன்னாடியே உன் கல்யாணத்தை ஜோஸ்யத்தின் உதவியால் தடுத்திருப்பேனே!" என்று சொல்லிச் சிரித்தான் கண்ணன்.

* * *

அலமேலு அம்மாளுக்கு மாயவரத்திலிருந்த அந்தச் சொந்த வீட்டைத் தவிர கொஞ்சம் ரொக்கமும் இருந்தது. அவள் கணவர் இறக்கும்போது கல்பகத்திற்குப் பதின் மூன்று வயது. அந்த ரொக்கத்தைக் கொண்டு கல்யாணம் செய்து, பற்றாமல் போகவே, மாயவரத்திலுள்ள வீட்டின் மீதும் கடன் வாங்கிக் கொடுத்தாள் தன் சம்பந்திகளுக்கு. அவ்வளவு செய்தும், அந்தச் சம்பந்திகள் திருப்தி பட்டதாகத் தெரியவில்லை. குறைந்தது இன்னும் ஒரு ஆயிரமாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அலமேலு அம்மாளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

கல்பகத்தினால் இந்த அட்டூழியத்தைச் சகிக்க முடியவில்லை. "அம்மா! இனி ஒரு காசுகூடக் கொடுக்கும்

எண்ணத்தை விட்டுவிடு. உனக்கு இருக்கிற ஒரே சொந்த வீடு அந்த ரங்கய்யன் கையில் அடகுபட்டது போதும். என் புக்ககத்து மனுஷர்களும், நம்மைப் போன்ற மனுஷர் கள்தான். பயப்பட வேண்டியதில்லை" என்றுள் வெகு துணிச்சலுடன்.

"அடி பைத்தியமே! உன்னை வாழாவெட்டியாக்கி விடுவார்களேடி!..." என்று அழுதாள் தாயார்.

"இன்னுமொரு ஆயிரம் கொடுத்தால் மட்டும், சீராக வைத்துக் கொள்வார்கள் என்பது என்ன நிச்சயம்?" என்று கேட்டாள் பெண்.

"பிள்ளைக்கு வேறு கல்யாணம்கூடப் பண்ணக்கூடிய வர்கள் அவர்கள்!"

"குஷாலாய்ச் செய்துகொள்ளட்டும்" என்று வெகு கண்டிப்பாய்ச் சொல்லி விட்டாள் கல்பகம்.

மாயவரம் வந்தபின் தாயாரின் தொல்லை தாங்காமல் தான் கணவனுக்குக் கடிதம் போட்டாள். பதிலே இல்லை. அலமேலு அம்மாள் தினந்தோறும் "கடிதம் வந்ததா? எனக் கேட்டுக்கொண்டிருந்ததுதான் மிச்சம்.

பாவம்! நடக்காத விஷயங்களெல்லாம்கூட நடக்கக் கூடாதா என்று ஏங்கும் மனப்பான்மை, மனிதனேடு கூடப்பிறந்த சுபாவமல்லவா?

கடிதம் வராத துன்பம் மட்டுமில்லை. அலமேலு அம் மாளுக்கு வியாதியும் அதிகமாகி, வட்டியும் முதலும் ஏறி, வீடும் கையைவிட்டுப் போகும் தருவாயில் இருந்தது. கொஞ்ச நாளைக்குக் கல்பகத்தின் நகைகளின் மூலம் ஜீவ னம் நடந்து வந்தது. ரங்கய்யனே மகா பொல்லாதவன். என்றைக்கு வீட்டை ஜப்தி செய்து எடுத்துக்கொண்டு விடுவானே? "ஈசா! நிற்க நிழல்கூட இல்லாமலா போக வேண்டும்?" என்று எண்ணி எண்ணி மனம் வெதும்பிப் போனுள் அலமேலு.

பண விஷயமாக அடிக்கடி ரங்கய்யன் அலமேலு அம்மாளைப் பார்க்க வரலானான். யௌவனம் நிறைந்து சோபிக்கும் கல்பகத்தை அவன் கண்கள் ஆவலுடன் நோக்கின. கல்பகமும் இதைக் கவனித்து அவன் வரும் போதெல்லாம் ஏதாவது சாக்கிட்டு வெளியே போய் விடுவாள். ஒரு நாள் அவன், தன் தோட்டத்தில் காய்த்த சில கறிகாய்களோடு ஒரு கூடை மாவடுவையும் கொடுத்தனுப்பினான். கல்பகம் அதை மரியாதையாகத் திருப்பி விட்டாள். அலமேலு அம்மாளுக்கு இதில் கொஞ்சம் வருத்தம். "இஷ்டப்பட்டால் அவன் இந்த நிமிஷத்திலே கூட வீட்டை எடுத்துக்கொண்டு விடலாம். கொஞ்சம் ஈவிரக்கமுள்ள மனிதன். ஏதோ கிழவி வாய்க்கு ருசியாகச் சாப்பிடட்டு மென்று அனுப்பினால் அதை ஏன் திருப்பி அனுப்பினாய்?" எனக் கடிந்து கொண்டாள் மகளை. மெல்லவும்மாட்டாமல் விழுங்கவும் மாட்டாமல் மௌனம் சாதித்தாள் பெண். அதற்குப் பிறகு தாயாருக்காக அவன் அனுப்பின பழங்களை வேண்டா வெறுப்பாக வாங்கி வைத்தாள். ஆனால், கொஞ்ச நாளில் கல்பகத்துக் கென்றே அவன் புடவை ரவிக்கை முதலியன கொடுத்தனுப்ப ஆரம்பித்தபோது கல்பகத்தால் தாங்க முடியாமல் போய்விட்டது. அதைத் திருப்பிவிட்டு, "அம்மா! இதுவரையிலும், உனக்காகக் காய்கறி, பழங்கள் அனுப்பிவந்ததாகச் சொன்னாயே? இந்தப் புடவையும், ரவிக்கையுங்கூட உனக்கா? இவ்வளவு வயசில் இதையெல்லாம் நீயறியாதது அதிசயம்தான். வீடு போனால் போகட்டும், அம்மா! அதற்காக, மரியாதை தப்பி அவன் நடப்பது எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது..." என்றாள்.

உண்மையில், அலமேலு அம்மாள் எண்ணவேயில்லை, ரங்கய்யன் இவ்வளவு கபடக்காரனென்று. அதனால்தான்

அன்று அவன், "அம்மா! வீட்டை எடுத்துக்கொள்ள எனக்கு ஒரு ஆசையும் கிடையாது. மனது வைத்தால், அந்தப் பத்திரத்தையே கிழித்துவிடக்கூடத் தயார்!" என்றானே?......சே, சே! அப்படிப்பட்ட பாபியா அவன்?

"கல்பகம்! நான் ஒரு முட்டாள்! அவன் வஞ்சக எண்ணம் தெரியவே யில்லையடி எனக்கு!" என்று பேசி முடிக்குமுன் ரங்கய்யனே வந்துவிட்டான் உள்ளே. அலமேலு அம்மாள் ஈனஸ்வரத்தில் சொன்ன பதில் அவன் காதில் விழவில்லை. ஆனால் கல்பகம் சொன்னதை நன்றாகக் கேட்டு விட்டுத்தான் வந்தான் அவன். "இருக்கட்டும் இவ்வளவு திமிர் இருக்கிறதா அவளுக்கு? இந்த ஊர் சிரிக்க அடிக்கிறேன் இவளை!" என்று மனத்திற்குள் கருவிக் கொண்டான். அதன் விளைவாகத்தான் ஊரார் கல்பகத்தை ஏளனமாகப் பேசத் தொடங்கினார்கள். அட பாவி! உன் சாமர்த்தியத்தை யெல்லாம் ஒரு பெண் பேதையிடம்தானா காட்டவேண்டும்?

* * *

சாதாரணமாகப் பெண்களைப் பேதை என்றும் பெண் தெய்வ மென்றும், வீரப் பெண்மணிகளென்றும் பலவித மாகச் சொல்வதைக் கேட்டும், படித்துமிருக்கிறோம். இவர்கள் எந்தக் கஷ்டத்தையும் தாங்களாகவே ஏற்றுத் தியாகிகளாகத் திகழ்பவர்கள். ஆனால் இன்னொரு வர்க்க மிருக்கிறது. ஆம், தாடகை, சூர்ப்பனகை இவர்களின் சந்ததிகளைத்தான் குறிப்பிடுகிறேன்.

பிறரை ஹிம்ஸைக் குள்ளாக்குவதே இவர்களுடைய தொழில் என்று சொல்லலாம். அப்படிப்பட்ட கிராதக வர்க்கத்தைச் சேர்ந்தவள் குப்பிப் பாட்டி. கல்பகம் அந்த ஊருக்கு வந்த புதிதில் நிரம்ப நல்லவள்போல அப் பெண்ணிடமும், அவள் தாயிடமும் நடந்து கொண்டாள் பாட்டி.

ரங்கய்யனுக்கு இந்தப் பாட்டியிடம் செல்வாக்கு உண்டு. அதாவது ரங்கய்யனின் காரியங்களில் பாட்டி 'ஐந்தாம் படை'ப் பகுதியை ஏற்றுக்கொள்வாள். தனக்குப்பிடித்த மில்லாதவர்களை ஊரை விட்டே ஓட்டிவிடும் திறமை தனக்குப் பூரணமாக உண்டென்பது பாட்டியின் சித்தாந்தம். ரங்கய்யனுக்காகப் பாட்டி கல்பகத்தினிடம் போன தூது கொஞ்சமல்ல. கல்பகம் கைக்கு எட்டாமற் போகவே, அவளைப் பற்றி வாய் கூசாமல் பேசத் தொடங்கினாள் அப் புண்ணியவதி!

# அத்தியாயம் 3

புரசைவாக்கத்தில், ஓர் அழகிய சிறு பங்களாவின் வாயில் தாழ்வாரத்திற்கும் உள்ளுக்குமாக நடந்துகொண் டிருந் தாள் ஒரு பழுத்த சுமங்கலி அம்மாள். "ரயில் தப்பிவிட் டதா, என்ன? இன்னும் வரவில்லையே?" என்று அவள் வாய் முணுமுணுத்துக்கொண் டிருந்தது. இடை இடை யில் "அடி, ஜானகி! காப்பியைப் 'பிளாஸ்'கிலே போட்டுவை....விசுவத்திற்கு மசாலா போட்ட கறிதான் பிடிக்கும். முட்டை கோஸ், மசாலா இதிலெல்லாம் போட்ட கரண்டியை, என் சாப்பாட்டிலேயும் சேர்த்து விடாதே!" என்று இரைந்து சொல்லிக்கொண்டே உள்ளே போவாள். மறுபடி, "நன்ருயிருக்கு!...ரயில் தப்பிவிட் டதோ? இல்லே, 'லேட்'டோ தெரியவில்லையே?" என்று முனகிக்கொண்டே வர்சலுக்கு வருவாள் அம்மணியம் மாள். இப்படி அவள் தவித்துக்கொண் டிருக்கும்போது, வாசலில் ஒரு 'டாக்ஸி' வந்து நின்றது. விசுவம், முன்ஞல் இறங்க, பின்ஞல் அவன் தங்கை சரோஜா இறங்கிஞள். டிரைவருக்குப் பக்கத்திலிருந்து அம்மணியம்மாளின் புருஷன் பரமசிவ அய்யர் கைத்தடியுடன் இறங்கிஞர்.

புன்சிரிப்புடன் எல்லாரையும் நோக்கிய அம்மணி யம்மாள், பின்ஞல் இறங்கிய ஓர் யுவதியைக் கண்டதும், முகத்தில் கேள்விக் குறி தோன்ற விசுவத்தைப் பார்த் தாள். "அப்புறம் சாவகாசமாய் சொல்றேன், பாட்டீ!..." என்ருன் அவன்.

"சரோஜா! அந்தப் பெண் கூச்சப் படுகிருள், பார்! உள்ளே அழைத்துக் கொண்டு போ!" என்ருர் கிழவர். உண்மையில் அம்மணியம்மாள் தன்னைப் பார்த்த

பார்வையைக் கண்டு அந்த யுவதி பயந்துவிட்டாளென்று தான் கூற வேண்டும். அம்மணியால் விஷயத்தைத் தெரிந்து கொள்ளாமல் வெகு நேரம் இருக்க முடியவில்லை. தனியாகச் சரோஜாவை அழைத்து... "ஏண்டீ! உங்க பக்கத்து மனுஷியா அவள்?" என்று கேட்டாள்.

சரோஜா கல கல வென்று நகைத்துக் கொண்டே "அதெல்லா மில்லை. நாங்கள் திருச்சிறுப்பள்ளிக்கு, ரமாவின் கல்யாணத்துக்குப் போனேமில்லையா? திரும்பி வரும்போது ரயிலில் இந்தப் பெண்ணைப் பார்த்தோம். இவள் அதிகமாகப் பேசவேயில்லை. நடு ராத்திரி ஒரு மணி இருக்கும்—இவள் ரயில் கதவைத் திறந்துகொண்டு வெளியே குதிக்கப்போனுள். நல்ல வேளையாக அதே சமயம் நான் விழித்துக் கொண்டதால், கர கர வென்று பிடித்து இழுத்து உள்ளே தள்ளினேன். அப்பொழுது எனக்கு அவ்வளவு பலம் எங்கிருந்துதான் வந்ததோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம்! பிறகு, அண்ணு, தாத்தா, எல்லாருமாய்ச் சேர்ந்து மூர்ச்சை யடைந்திருந்த அவளை தெளிய வைத்தோம். யாரும் இல்லாத அனுதையாம், பாவம்! 'என்னை ஏன் சாகக்கூட விடமாட்டேன் என்கிறீர்கள்?' என்று கேட்கிருள் பாட்டி! வயிற்றெரிச்சலாயில்லை? சரி, நீ எங்களுடன் வந்துவிடு என்று நாங்கள் மூன்று பேருமாய் ரொம்ப சொல்லி அழைச்சு வந்துட்டோம்..."

"அழகாய்த்தான் இருக்கு உங்கள் காரிய மெல்லாம்!" என்று கூறி, அவர்கள் செய்த காரியம் தனக்குப் பிடிக்கவில்லை யென்பதைக் காண்பித்துக் கொண்டாள் அம்மணியம்மாள். 'முன்னடி பாட்டி இப்படித்தான் சொல்லுவாள், எல்லாம் போகப் போக அவளுக்கும் சரியாகிவிடும்' என்று எண்ணிக்கொண்டாள் சரோஜா. ஆனல், வெளியே யிருந்து வந்த யாரோ ஒரு யௌவனப் பெண்ணை

வீட்டில் சேர்க்கத் தன் பாட்டி யோசனைதான் செய்வாள் என்பது விசுவத்துக்குத் தெரியும். பாட்டி தட தட வென்று தன் அறைக்கு வந்ததுமே அவன் அறிந்து கொண்டான், கட்டாயம் இது விஷயமாகப் பேசத்தான் வந்திருக்கிறு ளென்று.

"என்னடா, விசுவம்?..." என்று ஆரம்பித்தாள் பாட்டி.

"ஊம்!..."

"இல்லே, இது என்ன காரியம், என்கிறேன்! எங் கெங்கே, யார், யார் சாகத் துணிகிருளோ அவர்களை யெல் லாம் அழைத்து வந்து வீட்டில் வைத்துக்கொண்டு விட முடியுமா? அந்தக் கிழப் பிராமணன் கூடவா இதை உனக்கு சொல்லலே?"

"பாட்டீ!...நானும் ரொம்ப யோசித்தேன். பிறகு உனக்கும் ஒத்தாசையாக இருக்கட்டுமே யென்று..."

"என்னடா கதை சொல்லுகிருய்? ஜானகிதான் ஒருத்தி இருக்கிருளே, குத்து உலக்கை மாதிரி? ஒத்தாசைக்கு அழைச்சுண்டு வந்தானும், ஒத்தாசைக்கு! சரி...நடந்தது நடந்தாச்சு! நாளைக்கே அவளை அனுப்பவழியைப் பார்!"

விசுவுக்குத் திகில் பிடித்து விட்டது. "ஐயையோ... என்ன பாட்டீ இது...? அவளுக்கு யாருமே கிடையாதாம், திக்கற்றவள், பாவம்! எங்கேயாவது அனதை விடுதியில் சேர்க்க ஏற்பாடு பண்ணும் வரையில் இங்கேயே இருக் கட்டுமே அவள்..." என்ருன் மெதுவாக.

பாட்டிக்குக் கோபம் வந்து விட்டது. "ஊம்...! யாரோ ஊர் பெயர் தெரியாதவளுக்குப் பரிஞ்சுண்டு, நான் சொன்னதை மதிக்க மாட்டாயா நீ" என்று கேட் டாள் அவள்.

"பாட்டீ...உன் மனசு எனக்குத் தெரியும். ஒரு பொம்மனுட்டி. அவள் வயசோ பொல்லாத இளமை...

இப்பொழுது அவளை வெளியில் துரத்துவது நீதியா, சொல்லு..."

உண்மையில் பாட்டியின் மனம் இளகிவிட்டது. "பார்த்துக்கொள்வோம்...ஆனல், சீக்கிரத்தில் அவளை வெளியே அனுப்பிவிட நீ ஏற்பாடு செய்துடணும்..." என்ருள். "ஆகட்டும்" என்ருன் விசு, நன்றி யறிதலுடன்.

அம்மணியம்மாள் மிச்சமுள்ள சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள அப் பெண்ணையே கேட்க எண்ணி சமைய லறைப் பக்கம் வந்தாள். ஜானகி அதற்குள் அவளைக் காய் கறி நறுக்க உட்கார்த்திவிட் டிருக்கவே, எஜமானி யம்மாளைக் கண்டதும் எழுந்தாள் அம் மங்கை. இந்த மரியாதையில், ஏற்கெனவே இளகி யிருந்த அம்மணியம்மாளின் உள்ளம் இன்னும் சிறிது தளர்ந்து கொடுத்தது. "உட்காரு! காபி சாப்பிட்டாயா?" என அன்புடன் கேட்டு, அவள் அருகில் தானும் அமர்ந்தாள். பின்பு, "ஏண்டியம்மா! உன் பெயர் என்ன?" என்று வினவவும். "கமலு" எனச் சுருக்கமாய்ப் பதில் கூறினுள் அவள். ஏதேதோ கேட்க எண்ணி வந்த அம்மணியம்மாளுக்குப் பரிதாபகரமான அப் பெண்ணின் முகத்தைக் கண்டதும் ஒன்றுமே கேட்கத் தோன்றவில்லை.

அந்தச் சமயம் அங்கு வந்த சரோஜா "கமலு...! இதோ ஒரு பழைய புடவை இருக்கு! குளிச்சுட்டு உடுத்திக்கோ!" என்ருள். கமலு எஜமானியின் முகத்தைப் பீதியுடன் பார்த்தவாறே "ஏன்? இதையே உலர்த்திக் கட்டிக்கிறேனே?" என்ருள். அம்மணியம்மாள் "ஏண்டி யம்மா! அவள் ஆசையாக் கொடுப்பதை எடுத்துக் கொள்ளேன்" என்று சொல்லிக்கொண்டே ஹால் பக்கம் எழுந்து சென்ருள்.

* * *

கமலு வந்தது ஜானகிக்கு உதவியாகத்தான் இருந்தது. ஜானகி சிறு வயதிலேயே விதவையானவள். அம்மணியம்மாளுக்குத் தூரத்து உறவு. அவளை 'விதவைகள் விடுதி'யில் சேர்த்துப் படிப்பிக்க அம்மணியம்மாள் முயன்றாள். இரண்டு வருஷங்கள் விடுதியில் இருந்துங்கூட ஜானகியின் மண்டையில் படிப்பு ஏறவேயில்லை. வீட்டிலும் ஒத்தாசைக்கு ஒருவரும் இல்லாததினால், அம்மணியம்மாள் ஜானகியை விடுதியிலிருந்து தருவித்துக் கொண்டாள். கமலு கட்டிக்கொள்ளத் தன்னுடைய பழம் புடவையைக் கொடுக்கலா மென்று எண்ணியிருந்தாள் ஜானகி. அவள் விதவைக் கோலம் ஒன்றும் பூணவில்லை. அம்மணியம்மாள், சரோஜா இவர்கள் உடுத்திய பழைய புடவைகளை யெல்லாம் ஜானகிதான் உடுத்துவாள். ஆகவே, வந்ததும் வாராததுமாகச் சரோஜா, கமலுவுக்குத் தன் புடவையைக் கொடுத்தது ஜானகிக்குப் பிடிக்கவில்லை. ஆயினும் வேறு வழியில்லாமல் வாளாவிருந்தாள். சுற்றுக் காரியம் செய்ய ஒரு ஆள் கிடைத்ததே என்று ஆரம்பத்தில் சந்தோஷப்பட்ட ஜானகிக்குப் போகப் போகக் கமலுவிடம் வெறுப்பே உண்டாயிற்று. அம்மணியம்மாள் முதற்கொண்டு விசுவம் வரையிலும் அவள்மீது பிரியமாக இருப்பதைக் காண அவளுக்குச் சகிக்கவில்லை. ஆகவே, சில்லரை விஷயங்களி லெல்லாம் சமயலறையில் தகராறு உண்டாகத் தொடங்கியது.

ஒரு நாள், ஜானகிக்கு உடம்பு நலமில்லாமற் போகவே கமலு சமைத்தாள். வீட்டிலுள்ள அனைவரும் "அடே அப்பா! இந்த மாதிரிச் சமையல் சாப்பிட்டதே யில்லை" என்று வெகுவாகக் கொண்டாடினர். பக்கத்து அறையில் படுத்திருந்த ஜானகிக்கு, அதே சமயம் கமலத்தின் கழுத்தை நெரித்து விடலாமா என்றுகூட இருந்தது. அந்தக் கோபத்தில் "ஏன் அக்கா! கஞ்சி கொண்டு

வாட்டுமா?'' எனக் கபடமற்றுக் கேட்ட கமலுவின் மீது ஆத்திரம்தான் வந்தது அவளுக்கு. "வேண்டாமடி அம்மா, வேண்டாம். இந்தக் கட்டைக்குக் கஞ்சி என்ன?'' என்று அலுப்புடன் கூறி முகத்தை திருப்பிக் கொண்டு படுத்தாள்.

# அத்தியாயம் 4

ராமு தன் மனைவிக்கு எழுதின கடிதத்திற்குப் பதிலே இல்லை. இது விஷயத்தில் ராமு பேசாமலிருந்தபோதி லும், கண்ணன் விடுபவனாகத் தோன்றவில்லை. "என் னடா! இன்னுமா 'மேம்ஸாஹப்' பதில் போடவில்லை? நீ பண்ணின அநியாயத்திற்காக கோபித்துக் கொண்டு இருக்கிறாளோ, என்னவோ?" என்று அவனை நச்சரித் துக்கொண்டே இருந்தான். கடைசியில் ஒருநாள் சென்னை முத்திரையிட்ட கடிதம் வந்தது. ஆவலுடன் பிரித்தான் ராமு. அவன் முகம் முதல் வரியைப் படித்ததுமே சுணுங்கி யது கடிதத்தைக் கண்ணனிடம் கொடுத்தான். அதில்,

"ஐயா, முதலில், தெரியாமல் தங்கள் கடிதத்தைப் பிரித்ததற்கு வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். தாங் கள் எழுதிய விலாசத்திலுள்ள பெயரே என் பெண்ணிற் கும் இட்டிருக்கிறேனாதலால், அவள் அதை பிரித்துவிட் டாள். கல்யாணமாகாத அவளுக்குக் கணவன் என்ற முறையில் கடிதம் வந்திருப்பதைக் கண்டு, ஏதோ போக்கி ரித்தனமென்று எண்ணி அழுதாள். பின்பு, என்னிடம் விஷயத்தைக் கூறிக் கடிதத்தையும் கொடுத்தாள். எனக் கும் முதலில் கோபம்தான் வந்தது. பின்பு, அந்த மாதிரி காலித்தனமான கடிதமானால், கடிதத்தின் தலைப்பில் தன் விலாசத்தை யாரும் கொடுக்கமாட்டார்களே என்ற சிந் தனையும் பிறந்தது. பிறகு விசாரித்ததில், சில மாதங்களுக்கு முன்பு இதே வீட்டில், கல்பகம் என்ற ஒரு கல்யாணமான பெண் தன் தாயாருடன் வசித்ததாகவும், தாயாரும் பெண் ணும் ஒருநாள் எங்கேயோ புறப்பட்டுப் போய்விட்டார்க ளென்றும் தெரியவந்தது. அவர்களைப்பற்றி வேறு எது

வும் தெரியவில்லை. ஆகவே அனுவசியமாகத் தங்களைச் சிரமப்படுத்தக் கூடாதென்று இக் கடிதம் எழுதலானேன், என்று எழுதப்பட் டிருந்தது. குப்புசாமி"

"தெய்வம் வரங்கொடுத்தாலும், பூசாரி வரங் கொடுக்கவில்லை என்ற மாதிரிதான் இருக்கிறது இந்தக் கதை" எனச் சிந்தனையுடன் கூறினான் கண்ணன். பிறகு அவனாகவே "சரி, அடுத்த வாரம் நான் சுற்றுப் பிரயாணம் போகப்போகிறே னல்லவா? அப்பொழுது விசாரிக்கிறேன். அதிலும் காரியம் நடக்காவிட்டால் பேப் பரில் விளம்பரம் செய்ய வேண்டியதுதான்" என்றான்.

"சேச்சே! பேப்பரில் போடுகிறதாவது, நான் சென்ஸ்!" என்றான் ராமு.

"ஆமாம்! 'முன்னடி விட்டு விட்டுப் பின்னடி துரத் திப் போகிறான்' என்று நாலுபேர் பரிகசிப்பார்கள், அது தானே?"

"அதுமட்டுமில்லை. என் புதிய வேட்டகத்தார் ரொம்பப் பொல்லாதவர்கள். முன்னடியே ஒரு பெண் டாட்டி இருக்கும் சமாசாரத்தை அவர்களிடம் என் அம்மா சொல்லவே யில்லையாம். இப்பொழுது, திடீரென்று பேப்பர் மூலம் தண்டோரா போட்டால் கேட்க வேண் டாம்."

"ஊம்! இவ்வளவு பயமுள்ளவன் கல்பகத்தை அழைத்து வந்து தைரியமாக எப்படி வைத்துக் கொள் வாய்?" என்று சந்தேகம் தோன்றக் கேட்டான் கண்ணன்.

"அது வேறு விஷயம். என் மனைவி வயதில் இளையவ ளானாலும் நல்ல பெருந்தன்மை. அதை நான் கண்டு கொண்டேன்."

"சரி, எப்படியாவது செய்து கொள்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான் கண்ணன். 'கண்டு

கொண்டானும், கண்டு! முன்னுடியே கல்பகத்தின் விஷயத்தில் இந்தப் புத்தியைக் காணேம். பாவம்! அந்தப் பெண்ணின் தலைவிதி இப்படி இருக்கிறது'' என நினைத்துக் கொண்டான் அவன்.

இங்கு நாம் கண்ணனைப் பற்றிய சில வரலாறுகளை அறிவது நல்லது. கண்ணனைப் பொதுவாக 'ஆபத் சகாயன்' எனக் கூறினல் போதும். ராமு தன் முதல் மனைவியைப் பற்றி கண்ணனிடம் கூறிய பொழுது, 'நீ வேறு கலியாணம் செய்து கொண்டால் பிறகு அந்தப் பாவத்திற்கு விமோசனமே கிடையாது' என்று அவனுக்கு எவ்வளவோ புத்திமதிகள் சொன்னன். சபலசித்தனை ராமு கண்ணன் வெளியூர் போயிருக்கையில், தாய் தந்தையர் வசப்பட்டு மறு மணம் புரிந்துகொண்டான். கண்ணனுக்கு இது விஷயத்தில் மிகுந்த கோபம்தான். ஆயினும் என்ன செய்வது? அனியாயமாய் ஒரு பெண்ணின் வாழ்க்கை கெடாமலிருக்கும்படி ஏதாவது செய்ய வேண்டியதுதான் இனி. 'ராமுவுக்கும் நல்ல வேலை கிடைத்து விட்டது. இனி அவனல், கொஞ்சமாவது சுயேச்சையாக நடக்க முடியும்' என்று தீர்மானித்துத் தான் நண்பனைக் கடிதமெழுதும்படி வற்புறுத்தினன் அவன். சுமார் இருபது வயதுள்ள ஒரு மங்கை, கதியற்று நிற்பதைக் கற்பனை செய்து பார்க்கக்கூட அவனல் முடியவில்லை. அதை நினைக்கும் போதே உடல் துடித்தது அவனுக்கு. 'ஐயோ! அவள் உள்ளம் எப்படித் தவிக்குமோ? கல்யாணம் செய்துகொண்டு பிறகு நடுக் காட்டில் விட்டுவிட்ட கணவனை அவள் சபித்தாளானல் அதில் என்ன தப்பு?' என நினைக்கையில் ராமுவின் மீது வெறுப்புக்கூட ஏற்பட்டது.

ராமுவின் வீட்டை விட்டுப் புறப்படும்போது அவனுடைய எண்ணம் எல்லாம் கல்பகத்தையும் அவளுடைய

தற்பொழுதைய இருப்பிடத்தைப் பற்றியுமே இருந்தது. கல்பகத்தின் புகைப்படம் ஒன்றைத் தன் தகப்பனர் கிழித்துப் போட்டு விட்டாரென்று ராமு கூறியிருக்கிருன். ஆமாம் ஒருமுறை அந்தச் சிறுசிறு துண்டுகளைச் சேர்த்து வைத்து முழுப் படமாக ராமு அவனிடம் காட்டியுமிருக்கிருன். 'ஹும்! துப்பறிபவர்களால்தான் முடியும் அவளைக் கண்டுபிடிக்க. ஆனலும் அவளைக் கண்டுபிடிக்காமல் மட்டும் இருப்பதில்லை' என்று நிச்சயம் செய்து கொண்டுதான் கிளம்பினன். குப்புஸாமியின் கடிதமும், விலாசமும் அவன் கையில்தான் இருந்தது. சென்னையில், அவளைக் கொண்டு ஏதாவது தகவல் அகப்படுமோ என்று பார்க்க நேரே அங்கு சென்ருன்.

* * *

கமலுவுக்கு அம்மணியம்மாள் வீட்டில் எல்லாச் சௌகர்யங்கள் இருந்தும், மன அமைதி இல்லை. சரோஜா, அவள் மீது உயிராக இருந்தாள். விசுவம் அடிக்கடி சரோஜாவின் மூலம் நல்ல புத்தகங்கள் படிக்கத் தருவான். ஜானகியைப் போலின்றிக் கமலு சுறுசுறுப்பாய் வேலைசெய்வதைக்கண்டு அம்மணியம்மாளுக்கும் ஆனந்தம் தான். "அதென்னவோ அந்தப் பெண், யந்திரம் மாதிரி தான் வேலை செய்கிறது; பாவம் அதிர்ஷ்டம்தான் கட்டை!" என்பாள் அம்மணிஅம்மாள். தன் பெண்ணிடம்.

"ஒருநாள் பெண் சொன்னள்: பாவம், அம்மா! கேட்டால் அவள் மனசுக்குக் கஷ்டமா யிருக்குமே யென்றுதான் கேட்பதேயில்லை. ஒருநாள் அதிகாலையில் மூன்று மணிக்கு விழித்துக் கொண்டு விளக்கைப் போட்டேன். பக்கத்தில் கமலு படுத்திருந்தாள். 'தீர்த்தம் இங்கே இருக்கிறதா' என்று கேட்க அவள் பக்கம் திரும்பினேன். ஐயோ! அப்பொழுது அவள் முகத்தைப் பார்த்ததும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. பகல்

முழுவதும் எல்லோரிடமும் சகஜமாய் இருக்கிறவள். ராத்திரி முழுவதும் அழுகிறு ளென்பதை அப்பொழுது தான் தெரிந்து கொண்டேன். 'கமலு!' என்னை உன் சகோதரியாக நினைப்பது வாஸ்தவமானால் நீ இப்படி வருத்தப்படுவது சரியல்ல... என்று சொல்லிச் சமாதானம் செய்தேன் "யார் கண்டார்கள். அதன் மனசில் என்ன குறையோ, என்னவோ?" என்ருள் பாட்டி. அங்கு ஒரு பக்கமாகப் புடவை உலர்த்திக்கொண் டிருந்த ஜானகியின் காதில் இந்தப் பேச்சுக்கள் விழாமலா இருக்கும்?

ஜானகியின் மூலம் வெளியே பலர் பலவிதமாய்ப் பேசத் தொடங்கினர். அம்மணியம்மாளின் ஒன்றுவிட்ட தங்கை யொருத்தி "என்னடி, அக்கா! ஊரெல்லாம் பேச்சாய் இருக்கிறது" ராஜா மாதிரி இருக்கிற உன் பேரனுக்குப் பெண் அகப்படவில்லையா? எங்கிருந்தோ எவளையோ இழுத்துக்கொண்டு வந்திருக்கிருள் என்று ஏதேதோ சொல்லுகிருர்களே?" என்று தமக்கையைக் கேட்டாள்.

"இது என்னடி அபாண்டம்? சொன்னவர்கள் யார் சொல்லு!" என்று இரைந்தாள் அம்மணி.

"யார் என்று யாரைப் போய்ச் சொல்ல முடியும்? ஊர்வாயை மூட முடியுமா?" என்ருள் அவள். அம்மணி அம்மாளுக்கு உள்ளுக்குள் பீதிதான். 'இத்தனை நாளாக இந்த ஊரில் நல்ல பெயரோடு இருந்துவிட்டு, இப்பொழுது நமக் கெதற்கு அனுவசிய அபவாதம்?" என்று எண்ணிளுள் அவள். அன்று பிற்பகல் விசுவைக் கூப்பிட்டு "நாளைக்கே விதவைகள் விடுதியிலாவது ஸேவா ஸதனத்திலாவது கமலுவை நானே கொண்டுபோய்ச் சேர்த்துவிடப் போகிறேன்" என்று தீர்மானமாகக் கூறிவிட்டாள். விசுவத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது. பிறர் சொல்வது ஒரு பக்கம் இருக்க உண்மையிலேயே அவன் கமலு

வைக் காதலிக்கத் தொடங்கி விட்டான்! ஆனால், பாட்டியின் கண்டிப்பான மொழிக்கு எதிர் மொழி சொல்ல அவனால் முடியவில்லை. அவனது பெற்றோர் இறந்ததிலிருந்து, அவனையும் சரோஜாவையும், ஒரேமாதிரி வளர்த்து வருகிறாளே, பாட்டி வேறு யார் அப்படி தன் பேத்தியையும் பிறர் பிள்ளையையும் ஒரே தராசில் நிறுத்துப் பார்ப்பார்கள்? விசுவம் பரமசிவய்யரின் பேரன் அல்ல என்பது வெளியார்களில் அனேகமாகப் பலருக்குத் தெரியாதே! ஊம்! எப்படியும் கமலு இந்த ஊரில் தானே இருக்கப் போகிறாள், பார்த்துக் கொள்வோம்! இப்படி யெல்லாம் மனத்தைச் சமாதானம் செய்து கொண்டான் விசுவம்.

கமலு...ஆமாம், அவளுக்கு என்று அபிப்பிராயம் ஏது? அவள் அங்கிருந்து போக விரும்புகிறாளா, இல்லையா என்று அவளை யார் கேட்கப் போகிறார்கள்? இங்குதான் இருப்பேன் என்று சொல்ல அவளுக்குச் சுதந்திரம் உண்டா இந்த ஜன்மத்தில்? ஊர் பெயர் தெரியாத அனாதையைச் சம்ரட்சித்தவர்களுக்கு அந்தப் பொறுப்பை விட்டு விட்டாள் கமலு, இருந்த போதிலும், ஸேவா ஸதனத்தில் அம்மணியம்மாள் அவளைக் கொண்டு விட்டுத் திரும்புகையில் கமலு அழுதேவிட்டாள். அம்மணியம்மாளுக்கும் அவள் மீது பாசம் உண்டாகி யிருந்ததால், "விடுமுறை நாட்களில், வீட்டிற்கு வந்து போய்க்கொண் டிருக்கலாம், கவலைப்படாதே!" என்று ஆறுதல் மொழி கூறி ஸேவா ஸதனத் தலைவியிடமும் கமலுவைப்பற்றி வெகுவாய்க் கூறிவிட்டு வந்தாள்.

# அத்தியாயம் 5

பட்ட காலிலேயே படும் என்பார்கள். மற்றவர்கள் விஷயத்தில் அது எப்படி யிருந்தாலும், கல்பகத்தின் விஷயத்தில், அது உண்மையாகத்தான் இருந்தது. தாயாரின் உடல் நலம் ஒரு பக்கம் குன்றிக்கொண்டு வர, ரங்கய்யனின் ஹிம்சையோ சொல்லத்தரமில்லாது அதிகமாகிக் கொண்டு வந்தது. ராஜம் தன் மாமா வீட்டிற்குப் போய் விடவே, தற்சமயம் ஏன் என்று கேட்பாரில்லாமல்தான் இருந்தாள் கல்பகம். அந்த ஊரில் ஒரு சிலர் அவளுக்காக அங்கலாய்ப்புக் காட்டியபோதிலும், அனேகர் அவளுக்கு விரோதமாகப் பேசுவதைக் கண்டு, பலர் ஒத்தாசைக்கு வரக்கூடப் பயந்து வாளாவிருந்தனர்.

கடைசியில் கல்பகத்தின் தாய் இறந்த அன்று பிணம் தூக்கக்கூட ஆள் கிடைக்காமல் அவள் தவித்த தவிப்பு வர்ணிக்கத் தரமன்று. இது வரையிலும், தன் விதியையே நொந்துவந்த கல்பகம் அன்றுதான் சபத மிட்டாள்: "இவ்வளவு கடிதம் போட்டும் ஏன் என்று கேட்காமல் தன்னை இந் நிலைமையில் விட்டு விட்ட கணவன் ஒருகால் என்ருவது ஒரு நாள் தன்னைக் கூப்பிட்டாலும் அவனுடன் போவதில்லை" என்று, ஒரு வழியாய்ப் புரோகிதர்களுக்கு ஆசைகாட்டி, தன் கழுத்துச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்து, தாயாரின் கிரியைகளைச் செய்தாள் அவ் வீரப் பெண்மணி. அது வரையிலும், கடமையை எண்ணித் தைரியத்துட னிருந்த கல்பகத்திற்கு அன்னையின் கிரியைகள் ஆனபின்பே தனது நிராதரவான நிலைமை புலப்பட்டது. தனியே உட்கார்ந்து பைத்தியக்காரிபோல் புலம்பலானுள் அவள். "ஈசுவரா! இதென்ன கொடுமை!

உலகில் பெண்ணென்ருல் பேயும் இரங்கும் என்பார்களே? இந்த மனிதர்கள் பேயைவிடக் கொடூரமானவர்களா? 'வேறொன்றும் வேண்டாம் தங்கள் காலடியில் வந்து வேலைக்காரிபோல் உழைக்கவாவது சம்மதமளியுங்கள்' என்று என் சுயமரியாதையை விட்டுக் கணவனுக்குக் கடிதம் எழுதினேனே! சே! இவ்வளவு கல் நெஞ்சா! பாழும் பெண் ஜன்மம்! அனுதையான பெண்ணிற்கு அழகும், இளமையும் கொடும் தீமை யிழைப்பவை யல்லவா? 'கணவன் விட்டுவிட்டான், இவள் வாழாவெட்டி' என்ற தைரியத்தில்தானே ரங்கய்யனுக்கு இவ்வளவு துணிச்சல் ஏற்பட்டது? ஆதியில் அவன் நல்லவன்போல் அடிக்கடி வந்து பழகினபோது, அம்மா கபடில்லாமல், தன் குடும்ப விஷயங்களை அவனிடம் கூறினதால்தானே அப் பாபி அறிந்துகொண்டான், எனக்கு, கதி யேதுமில்லை யென்று...ஈசுவரா! என்ருல் உன்னைப் பழிக்காமல் இருக்க முடியவில்லை. உண்மையில் நீ இருப்பது நிஜமாளுல், என் அநியாயங்கள் நடப்பதை பார்த்துக்கொண் டிருக்கிருய்? என்ன வென்று நோவது? யாரைப்போய் தஞ்சம் அடைவது?" என வாய்விட்டுக் கதறினுள்.

"கல்பகம்! ஏன் இப்படி வருந்துகிருய்? ஆதியிலிருந்து நான் சொல்லி வருகிறேன். இன்றும், இப்பொழுதும், இதைவிட உயர்த்தியான பல வீடுகளுக்கு உன்னைச் சொந்தக்காரியாக்க நான் காத்திருக்கிறேன்." என்ற குரல் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் கல்பகம். நகை முகத்துடன் வாசற்படி யருகே நின்றிருந்தான் ரங்கய்யன்.

கல்பகம் பெண் புலிபோல் சீறினுள். "பாவி! திக்கற்ற ஒரு பெண்ணை ஏன் இப்படி ஹிம்சிக்கிருய்? சேச்சே! அற்பப் பதரே! என் கண் எதிரில் நிற்காதே..." என்று கத்தினுள் அவள்.

கெஞ்சலாகப் பேசிய ரங்கய்யன் மிஞ்சத் தொடங்கி ஞன்: "ஓ ஹோ! கோபம் வருகிறதோ? சரி, சரி. ஏதோ கடைசி முறையாகக் கேட்டேன். நாளையிலிருந்து வீடு என்னுடையது. சாயந்திரம் வருகிறேன். யோசித் துச் சொல்." பதிலுக்குக்கூடக் காத்திராமல் ரங்கய்யன் வெற்றி வீரன்போல் வெளியே நடந்தான்.

"பார்ப்போம். ஊரையே அவளுக்கு விரோதமாக்கி யிருக்கிறேன். கிளி கூண்டைவிட்டு எங்கேதான் செல் லும், பார்க்கலாம்!" என எண்ணிக்கொண்டான் அவன்.

ஆனல், மாலையில் அவன் வந்து பார்க்கையில், அவளை வீட்டில் காணேம். கடைத் தெருவுக்குப் போயிருப்பாள் என்றெண்ணிக் காத்திருந்தான். ஊ ஹூம்! ஒரு வார மாகியும் கல்பகம் யார் கண்ணிலும் படவேயில்லை. கல் பகம் திடீரென்று ஊரைவிட்டுப் போனது, அவ் வூரில் வெறும் வாயை மெல்லுபவர்களுக்கு, அவல் கிடைத்தது போலாயிற்று.

இதே சமயம்தான் கண்ணன் சென்னையில் எப் படியோ தகவல் விசாரித்துக்கொண்டு, கல்பகம் மாயவரத் தில் இருப்பதாக அறிந்து, ராமுவுடன்கூட மாயவரம் வந்தான். முதன் முதல் அந்த ஊரில், அவன் கண்ணில் பட்டது ரங்கய்யன்தான். "ஏன் ஸார்! இந்த ஊரில், அலமேலு அம்மாள், கல்பகம் என்று தாயும், பெண்ணும், சென்னையிலிருந்து வந்து குடியேறினர்களா? என அவ னைத்தான் விசாரித்தான்.

"ரங்கய்யன் நீங்கள் யார்?" என்று கேட்டுக்கொண் டிருக்கும்போதே குப்பிப் பாட்டியும் அங்கு வந்து சேர்ந் தாள். "அப்பா! ரங்கய்யா! பொம்மனட்டி விஷயம்.பிறத் தியாரிடம் ஒன்றையும் சொல்லாதே." என்ருள் அவள். ராமுவுக்கு ஒருவித ஆவல் பிறந்தது. "அப்படி என்ன சொல்லத் தகாத விஷயம், பாட்டி"? என்று கேட்டான்.

"இல்லே! ரங்கய்யன் வெகுளி. எதையும், நமக்கென்ன என்று விட்டுவிட்டுப் போகமாட்டான். யார் எப்படிப் போனால் நமக்கென்ன என்று இனிமேலாவது இரு. ஒருத்தியைத் திருத்த நாம் பார்த்தால் முடியுமா? அவரவர்கள் பிறந்த வழி..." என்று ஏதோ சம்பந்தமில்லாமல் பேசினாள் அவள்.

ராமுவின் ஆவல் வளர்ந்தது. "கண்ணா! அங்கே எங்கேயாவது விசாரிக்கலாம், வா!" என்று கண்ணனை இழுத்துக்கொண்டு கிளம்பினான். அவர்கள் போனபின் ரங்கய்யன் "பாட்டி! ரொம்ப நன்றாக நடித்தீர்கள்" என்றான்.

"நடிப்பு பிரமாதமா? எத்தனையோபேர் சினிமாவிலே நடிக்க வில்லையா? ஆமாம், அந்தப் பிள்ளையாண்டான் யாரென்று நினைக்கிறாய்?" என்று ஒரு கேள்வியைப் போட்டாள் அவள்.

"அதுதான்...கற்பகத்தின் அகமுடையானாய்த்தான் இருக்கும்..." அவனேதான். நல்லவேளை, அவன் வருவதற்குள் அவளும் ஒழிந்தாள். ஆமாம்! நான் வீட்டுக்குப் போகிறேன். நாளைக்குத் துவாதசி, சமையலுக்கு நல்ல கறி காயாக ஏதாவது அனுப்பிவை" என்றாள் பாட்டி. "ஊம், ஆகட்டும்" என்றான் அவன். பாட்டி தலை மறைந்ததும் "கிழச் சனியன்! பெரிய வேலை செய்கிறாற் போலே, கூலியைக் கேட்காமல் கேட்கிறது!" என்று முணகியது அவன் வாய்.

* * *

கல்பகத்தைப்பற்றி ஊர் முழுவதும் தூற்றலாய் இருப்பதைக் கண்டு ராமு பொறுமையை இழந்து விட்டான். "கண்ணா! பார்! உன் காதாலேயே கேள். இனி என்னைப் பழிக்காதே! அப்பொழுதே எங்க அம்மாள் சொன்னாள். இப்போது அது நிஜமாகி விட்டது!"

" ராமு! எதையும் உடனே நம்பிவிடுதல் புத்திசாலிக்கு அழகல்ல!" என்ருன் கண்ணன் ஆழ்ந்த சிந்தனையுடன்.

கண்ணு! உனக்கு இன்னும் கல்யாணமாகவில்லை. ஒரு கணவனது ஸ்தானத்தில் நீ இருந்து உன் மனைவியைப் பற்றி நாலுபேர் இப்படிச் சொன்ஞல், அப்பொழுது தெரியும், உன் மனம் படும் வேதனை..."

கண்ணன் பதில் ஒன்றும் கூறவில்லை. வீட்டை விட்டுப் புறப்பட்ட கல்பகம் எங்கு போகிருேம், என்ன செய்கிருேம், என்ற உணர்வே யின்றிக் கால்போன போக்கில் நடந்துகொண் டிருந்தாள். குறைந்தது பத்து மைல் நடந்திருப்பாள். ஏற்கெனவே தாயாரோடு இரவுகளிலெல்லாம் கண் விழித்து, அசந்து போயிருந்தது அவள் தேகம். அத்துடன்கூட மீறிக்கொண்டு வரும் அடக்க முடியாத துக்கம் ஒருபுறம் தலை ஒரு புறம் சுழன்றது. சுற்றிலுமுள்ள மரம் செடி எல்லாம் ஆடுவதுபோல் தோன்றின. அவ்வளவுதான், அப்படியே மயங்கி விழுந்து விட்டாள்.

கல்பகம் கண் விழித்தபோது, தான் ஓர் உயர்ந்த பஞ்சணையில் கிடத்தப்பட் டிருப்பதை அறிந்தாள். மெல்ல எழுந்திருக்க முயற்சித்தாள். முடியவில்லை. "நான்... எங்கிருக்கிறேன்" என்று ஈனஸ்வரத்தில் வினவிஞள். "சரியான இடத்தில்தான் இருக்கிருய். கவலைப்படாதே, கமலு! உன்னிடம் நான் தவருய் பேசியதற்கு நல்ல தண்டனை கிடைத்தது. என்னை விட்டே போய்விட்டாயே, என் கண்ணே!" என்றது ஒரு பெண் குரல்.

யார் அது? புதுக் குரலாகப் படுகிறதே! என்ஞல் கண்ணை விழித்துப் பார்க்க முடியவில்லையே?" எனக் கேட்டாள் கல்பகம்.

" கண்ணை விழித்தால் தாஞ என்னை யறிய முடியும்? உன்னைத் தாயாரைவிடப் பன்மடங்கு அருமையாக

வளர்ந்த வனஜாக்ஷியை நீ மறந்தே விட்டாயா?'' எனக் கம்மிய குரலில் மறுபடியும் கேட்டாள் அம்முதியவள். "என்ன நான் காண்பது கனவா? இல்லை, எனக்கு ஏதாவது புத்திக் கோளாறினால் விஷயங்கள் வேறு விதமாகக் கேட்கின்றனவா? என்ற சந்தேகம் உண்டாகிவிட்டது கல்பகத்திற்கு. அப்பொழுதைக்குப் பேசாமலிருப்பதே நலம் என்று எண்ணி மௌனம் சாதித்தாள் அவள்.

ஆனால், உடம்பு நன்றாகக் குணமான பிறகும் வனஜாக்ஷி என்பவள் தன்னைக் 'கமலு' என்றே கூப்பிடுவதைக் காணச் சகிக்கவில்லை கல்பகத்திற்கு. "அம்மா! உண்மையில் நீங்கள் யார் என்பதை நான் அறியேன். நான் ஓர் அனாதை. நீங்கள் என்னை யமன் வாயிலிருந்து மீட்டிருப்பதாகத் தெரிகிறது. அதற்கு உண்மையில் நான் வந்தனம் தெரிவிக்க வேண்டியவளே. ஆனாலும் என்னை இறக்க விட்டிருந்தால் உங்களுக்கு எவ்வளவோ புண்ணியமாகி யிருக்கும். தற்சமயம் எனக்கு விடை கொடுங்கள்'' என்று அவளிடம் ஒருநாள் தெரிவித்தாள்.

"கமலு! இப்படி உன்புத்தி பேதிக்குமென்று நான் எண்ணவில்லையே? உன்னையே நீ அறிந்து கொள்ளாத போது, என்னை எங்கே அறியப்போகிறாய்? இதோ, பார்! உனது நகைப்பெட்டி. உனது புடவை பீரோ. இதோ நீ ஓடிப்போவதற்கு முதல் நாள் வாங்கிய உன் வீணை. இப்பொழுதாவது நினைவு வருகிறதா, சொல். ஐயோ! உன்னைப்போன்ற புத்திசாலிப் பெண் புத்தி ஸ்திரமில்லாமற் போகும்படி ஆனது, பாவி நான் சொன்ன வார்த்தையின் பலனோ? கமலு, இதோ, பார்! நான் கூப்பிடுகிற பெயர்தான் உன் பெயர். நீ கமலுதான்'' என்று கூறி தேம்பித் தேம்பி அழ வாரம்பித்தாள் வனஜாக்ஷி.

கல்பகத்திற்கு இப்போது வனஜாக்ஷியின் புத்தி ஸ்வாதீனத்தைப் பற்றிச் சந்தேகம் வந்துவிட்டது. "அம்மா!

நீங்கள் ஏதோ தப்பு செய்கிறீர்கள். என்னை மன்னிக்க வேண்டும். என் பெயர் கமலு இல்லை."

வனஜாக்ஷி ஆச்சரியத்துடன் "அடி, விமலா! இங்கே வா! நீ வந்து சொல்லு இவளுக்கு!" என்று அழைக்கவும் அடுப்பங்கரையில் வேலையாக இருந்த விமலா ஓடிவந்து, கமலுவிடம் "அம்மா! என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு? அன்றைக்கு நாம் இரண்டுபேரும்......" என்று ஆரம்பித்தாள்.

போதும், போதும்! நீங்களெல்லாம் விளையாடுகிறீர்களா அல்லது இது பைத்தியக்கார ஆஸ்பத்திரியா?" எனப் பொறுமை யிழந்து கத்தினாள் கல்பகம். விமலாவோ தன் எஜமானியை ஜாடை காட்டி அழைத்து "அம்மா, இங்கே வாருங்கள்! அவளை இன்னும் கொஞ்ச நாளைக்கு அவள் போக்கிலேயே விட்டு விடுவது நல்லது. ஏதோ கீழே விழுந்த அதிர்ச்சியில், புத்தி பேதித்திருக்கிறது" என்றாள்.

வனஜாக்ஷி ஒரு நெடிய பெருமூச்சு விட்டாள்.

# அத்தியாயம் 6

கமலு ஸேவா ஸதனத்திற்குப் போனதிலிருந்து,விசுவிற்கு வீட்டில் ஒன்றுமே பிடிக்கவில்லை......"நான் ஊருக்குப் போகிற வரையிலும், நீ அவளை நம் அகத்திலேயே வைத்துக்கொண் டிருக்கலாம், பாட்டி. யார் யார் பேச்சை யெல்லாமோ கேட்டுக்கொண்டு குடு குடு வென்று அவளை அனுப்பிவிட்டாயே?" என்று சரோஜா பாட்டியைக் கடிந்தாள்.

"இருக்கட்டுமே? நன்றாக படிப்பு, பாட்டெல்லாம் வரும்." என்றாள் பாட்டி.

"ஆமாம். அன்று நான் ஸேவாஸதனத் தலைவியைக் கண்டு பேசினேனே? 'வீணை நன்றாய் வாசிக்கிறாளே, கமலு. அவளுக்குத் தெரியாத வித்தை என்ன வென்று எனக்குத் தெரியவில்லை. உங்கள் பாட்டி உத்திரவு கொடுத்தால், அவளை இங்கே படிக்கச் செய்வதைவிட பிறத்தியாருக்குச் சொல்லிக் கொடுக்கச் செய்வது உசிதம் என்று எண்ணுகிறேன்' என்றார் புன்சிரிப்புடன். நிஜமாக, அவளுக்குச் சொல்லிக் கொடுக்கக்கூடிய சாமர்த்தியம் இருக்கும்போது, நம்மிடம் ஏன் சொல்லவில்லை என்று நானே ஆச்சரியப் பட்டேன்" என்றாள் சரோஜா. எல்லாம் மர்மமாய் இருக்கு. இவ்வளவு வித்தை தெரிந்த பெண் ரயிலிலிருந்து குதிக்க நினைப்பானேன்? இல்லை, தன் விருத்தாந்தத்தை நம்மிடமாவது கூறியிருந்தாலும் தேவலை. அனாதை என்கிறாள். அனாதைக்குப் பாட்டு, படிப்பெல்லாம் யார் கற்றுக் கொடுத்தார்களோ?" என்று ஆச்சரியத்துடன், கன்னத்தில் கைவைத்துக்கொண்டு கூறினாள் அம்மணியம்மாள்.

இடையில் ஒருநாள் கமலு வீட்டிற்கு வந்தாள். அன்று முழுவதும் எல்லாரும் குதூகலத்தி லாழ்ந்திருந்த னர். மறுநாள், சரோஜாவைக் கொணர்ந்து விடும்படி, அவள் புருஷனிடமிருந்து கடிதம் வரவே, தாத்தா பேத்தி யுடன் கிளம்பினர்.

கல்பகத்தின் மாமனர் மாமியார் இவர்களைப்பற்றி நாம் இதுவரையில் ஒன்றும் கூறவில்லை யல்லவா? கல்பகத் தின் புக்ககம் மதுரை. கல்பகத்தின் கல்யாணத்தின் போது, அவள் புருஷன் ராமகிருஷ்ணனுக்கு வேலை யாக வில்லை. மறு கல்யாணமான பிறகு மாமனர் தயவில் வேலை யாகியது. அவர்கள் மூலம் வேலை யாகிவிட்டதால், இந் தப் பெண்டாட்டிக்கு உள்பட்டு அவன் தன்னிடம் எப் படி நடந்து கொள்வானே என்று அவன் தாயார் மீனக்ஷி பயந்தாள். பிள்ளையின் சபல சித்தத்தை அவள் அறிவாள். ஆட்டு வித்தார் கைப்பொம்மை அவன். வேலையான பிறகு சரியாகக் கடிதமே போடவில்லை தனக்கு என்று மீனக்ஷிக் குப் பிள்ளைமீது வருத்தம். புது நாட்டுப் பெண்ணே கல்யாணமான பின்பக்கம் வரவேயில்லை. சென்னையி லிருந்து வருகிறவர்கள் மூலமாய் பெண் வீட்டார் நேரே மாப்பிள்ளையிடம் பெண்ணை அனுப்பப் போவதை மீனக்ஷி அறிந்து கொண்டாள். "ஹூம்! அவ்வளவு ஆயிற்ற?" என உறுமினள். புது நாட்டுப் பெண்ணைத் தன்னிடம் கொணர்ந்து விடும்படி சம்பந்திக்கும் எழுதி, ராமுவுக்கும் அவன் மனைவியைத்தான் அழைக்கப் போவதாக கடிதம் எழுதிவிட்டாள். ஆனல் இதற்கு ராமுவிடமிருந்து வந்த பதில் அவளை ஒரு கலக்குக் கலக்கியது.

"அம்மாவுக்கு, நமஸ்காரம். உன் கடிதம் கிடைத் தது. உன் கடிதம் வருமுன்பே, இங்கு ஹோட்டல் சாப் பாடு ஒத்துக்கொள்ளாததால், என் மனைவியை வரவழைத் துக் கொண்டு விட்டேன். சௌக்கியம், ராமு."

இந்தக் கடிதத்தைப் பார்த்ததும் மீனாக்ஷிக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் பிள்ளை, தன்னை இவ்வளவு தூரத்துக்கு மீறிப் போவானென்று அவள் கனவிலும் கருதவில்லை. தன் முதல் நாட்டுப் பெண்ணுக்குத் தான் செய்த துரோகத்தை யெல்லாம் எண்ணிப் பார்த்து வருத்தப்பட்டாள். நாட்டுப் பெண்ணிடமிருந்து பிள்ளைக்கு வரும் கடிதங்களை யெல்லாம் அவனிடம் சேர்ப்பிக்காமல் நெருப்பில் போட்டதை நினையாமல் இருக்க முடியவில்லை அவளால். "மாமியாரின் கொடுமைத்தனம் முழுவதையும் காட்டி விட்டேனே, அவளிடம்? பாவம்! அந்தத் திக்கற்ற பெண்ணும், அவளது விதவைத் தாயாரும் என்ன ஆனார்களோ என்று ஒரு நிமிஷம் நல்ல மனது வந்து, சிந்தனை ஓடிற்று அவளுக்கு. ஆனால், என்ன பிரயோஜனம்? சில மாதங்கள் முன்பே இந்தப் புத்தி தோன்றவில்லையே?

* * *

ராமுவின் இரண்டாவது மனைவி யார் என்பதை இனியும் சந்தேகத்தில் வைத்து வாசக நேயர்களைக் காக்க வைக்க நான் விரும்பவில்லை. அவள்தான் சரோஜா. சரோஜா தற்காலப் பெண். அருமை பெருமையுடன் வளர்ந்தவள். தன் கணவனுக்கு முதல் மனைவி யிருந்ததும், மாமியாரின் போதனையால் கணவன் அவளைத் தள்ளி வைத்ததும், அவளுக்குத் தெரியாது. அவள் சர்வ சாதாரணமாகவே கணவனுடன் குடித்தனம் செய்யலானாள். பிறந்த வீட்டில் சமையல் செய்து பழக்க மில்லாததினால் இங்கு அவ்வப்பொழுது ராமுவும் அவளுக்கு ஒத்தாசை செய்ய வேண்டி வந்தது. 'ஐயோ! கமலுவைக் கூட அழைத்து வந்திருந்தால், எவ்வளவு ஒத்தாசையாக இருக்கும்' என்று அவள் எண்ணினாள். குமுட்டி அடுப்பை விசிறுவது, இலை போடுவது, சில சமயம் காப்பி

யும் போடுவது ஆகிய எல்லாக் காரியங்களும் ராமு தலையில் தான். பெங்களூரில் குளிர் அதிகமானதால் சரோஜா காலையில் எழுந்திருக்க மாட்டாள். முக்கால்வாசி தினம் காலைக் காப்பி ராமுவினுடையதா யிருக்கும்.

ஒரு நாள் ராமு காப்பி அடுப்பைப் பற்றவைத்துக் கொண் டிருக்கையில், வாசலில் வண்டி வந்து நின்றது. தான் வருவதை முன்கூட்டி அறிவிக்காமலேயே மீனாக்ஷியம் மாள் வந்துவிட்டாள். முதல் அறைக் கதவு சாத்தி யிருக் கவே மெள்ள எட்டிப் பார்த்தாள் மீனாக்ஷி. இழுத்துப் போர்த்துக்கொண்டு நாட்டுப் பெண் தூங்கிக் கொண் டிருந்தாள். மீனாக்ஷி அதிலேயே கண்டுகொண்டாள் விஷயத்தை. பர பரவென்று உள்ளே வந்தாள்.

பிள்ளை, பால் காய்ச்சிக்கொண் டிருந்தான். சர்வ சாதாரணமாக "என்னம்மா! ஒரு லெட்டர்கூட போட வில்லையே?" என்றான்.

"லெட்டர் போட்டுவிட்டு வந்தால் இப்படி நீ காப்பி போடுவதைக் காண முடியுமா அப்பா!" என்றாள் அவள் ஏளனமாய்.

"ஏன் தினசரி நான் காப்பி போடும் சமயம்தானே இது?" என்று அமைதியாகக் கேட்டான் அவன். "சரி தான் இங்கே விஷயங்கள் முற்றிப் போயிருக்கிறது!" என்றெண்ணிக்கொண்டு "சமையலாவது அவள் சமைப் பளோ, அல்லது அதுவும் நீதானோ?" என்றாள் தாயார். சிரித்துக்கொண்டு பேசாம லிருந்தான் புதல்வன்.

சரோஜா மெள்ள எழுந்து வந்தாள். "வாங்கோ அம்மா!" என்றாள். அவ்வளவுதான், ஒரு நமஸ்காரமா, இழவா ஒன்றும் கிடையாது! கல்யாணம் ஆன புதிதில் கல்பகம் இருந்த மரியாதையை எண்ணிப் பார்த்தாள் மீனாக்ஷி. கணவனால் 'பிளாஸ்'கில் போடப்பட் டிருந்த காப்பியைச் சாப்பிட்டுவிட்டு சரோஜா சமைக்கலானாள்.

ஆமாம், குளிக்காமல்தான்! "ஒரு செம்பு ஜலத்தை விட்டுக்கொண்டு குளிக்கக்கூடாதோ? " என்று கேட்டாள் அவள் நாட்டுப் பெண்ணை. அவள் பதில் சொல்வதற்குள் "அம்மா! அவளுக்குக் குளிரில் குளித்தால் உடம்புக்கு ஆக வில்லையாம்" எனக் கூறியவாறு அங்கு வந்தான் ராமு. மீனாக்ஷியால் இதற்குமேல் பொறுக்க முடியவில்லை. "அழகாக இருக்கிறது! என்னவோ சொல்வாளே, அப்படித்தான் இருக்கிறது. அவளால் அது முடியாது, இது முடியாது என்று நீயே சால்ஜாப்பு சொல்லிவிடு. இதையெல்லாம் பார்த்தால், கல்பகத்தை ராஜாத்தி என்றுதான், சொல்ல வேண்டும். அதற்கு அவளைத் தள்ளிவைத்துவிட்டு, இன்னொன்றைப் பண்ணிக்கொள்வானேன்?"

மாமியார் இரைவதைக் கேட்டு திகைத்துப்போன சரோஜா தன் கணவனுக்கு மற்றுமொரு மனைவி யிருப்பதாக அவள் கூறினதும் ஒன்றும் புரியாது நின்று விட்டாள். "இது என்ன நிஜமா?" என்ற கேள்வி தொனிக்கக் கணவனைப் பார்த்தாள் அவள். மீனாக்ஷியம்மாள் சாப்பிடக்கூட இல்லை. அடுத்த ரயிலுக்கு வந்த சுருக்கைப் போலவே கிளம்பி விட்டாள் ஊருக்கு. ஆனால், அவள் கிளப்பி விட்டுப்போன புயல் அவ்வளவு சீக்கிரம் அடங்கவில்லை. சரோஜாவுக்கும் ராமகிருஷ்ணனுக்கும் பெரிய வாக்கு யுத்தம் தொடங்கி விட்டது. "சாதுபோல் தோன்றும் சரோஜா இவ்வளவு பேச்சுக்காரியா?" என்றெண்ணி ஆச்சரியப்பட்டான் ராமு.

# அத்தியாயம் 7

ஒருவிதத்தில் வனஜாக்ஷியுடன் இருப்பதே நலமென்று கல்பகம் எண்ணினாள். பழகப் பழக, வனஜாக்ஷி ஒரு சமயத்தில் பிரபல சினிமா நக்ஷத்திரமாக இருந்தவள் என்பதைக் கல்பகம் தெரிந்துகொண்டாள். அவளால், கமலு என்ற பெண் வளர்க்கப்பட்டு வந்ததாகவும், அந்தப் பெண் சினிமாவில் நடிப்பதையும் பிறருடன் தாராளமாகப் பேசுவதையும் விரும்பாமல் ஓடிவிட்டதாகவும், அவர்கள் பேச்சு மூலம் அறிந்துகொண்டாள். கமலுவைப் போலவேதான் இருக்கிறோமென்பதையும் கமலு அறையிலிருந்த போட்டோவிலிருந்து கண்டுகொண்டாள். "அம்மா இறப்பதற்கு முந்தி சொன்ன ஒரு விஷயத்திற்கும் இதற்கும் சம்பந்த மிருக்குமோ? அப்படிச் சம்பந்தமிருக்கும் பக்ஷத்தில் நாம் பல இடங்களுக்கு வனஜாக்ஷியுடன் போனால், கமலுவைக் கண்டு பிடிக்கலாமல்லவா?" என்ற சிந்தனை ஓடிற்று அவள் மனதில். முன்பெல்லாம் வனஜாக்ஷியுடன் வெளியே போக மறுத்தவள் இப்பொழுது, அடிக்கடி அவளுடன் வெளியே சென்றாள். "நான் ஆண்களுடன் சிரித்துப் பேசமாட்டேன்!" எனக் கண்டிப்பாய்க் கூறி விட்டாள் வனஜாக்ஷியிடம். வனஜாக்ஷிக்கோ, அவள் எப்படியாவது தன்னைவிட்டுப் போகாமல் இருந்தால் சரியென்று எண்ணம். "இது விஷயங்களில் சிறிது சொன்னதைக் கேட்கும் கமலு ஏன் வீணை மட்டும் வாசிக்க மாட்டேன் என்கிறாள்? வீணை என்றால் உயிராயிற்றே அவளுக்கு? உம்! புத்தி முழு ஸ்வாதீனமடைந்தால்தானே? அவள் புத்தி மாறுட்ட மடைந்ததற்கு நான்தானே காரணம். புகழுக்கும் பணத்திற்கும் ஆசைப்

பட்டு அவளை நான் சினிமாவில் நடிக்கச் சொல்லி வற்புறுத்தியதினால் அல்லவா அவள் ஓடவும், கீழே விழவும். புத்தி கெடவு மாயிற்று, என மறுபடி தன்னையே நொந்து கொண்டாள் வனஜாக்ஷி.

* * *

வனஜாக்ஷி அடிக்கடி வெளியூர் போவாள். அப்படிப் போகையில் கூடவே கல்பகமும் போகலானாள். கல்பகம் எங்கு போனாலும், தன்னை யறியாது அவள் கண்கள் எதையோ தேடலாயின. ஒரு சமயம் வனஜாக்ஷி ஒரு கடைக்குள் நுழைய, கல்பகம் இன்னொரு கடைக்குள் நுழைந்தாள். வாசலில் வனஜாக்ஷியின் கார் நின்றது. ஏதோ சாமான்களைப் பார்வை யிட்டுக்கொண் டிருந்த கல்பகத்தை யாரோ தோளை உலுக்கி "கமலு! இந்த ஊருக்கா வந்தாய்? எப்பொழுது வந்தாய்?" என விசாரிக்கவும், கல்பகம் திடுக்கிட்டு "யார் நீங்கள்?" எனக் கேட்டாள்.

"அடாடா! எப்படி என்னை மறந்தாய் நீ, கமலு? உன் சரோஜாவையே மறந்து விட்டாயே? கூட யாரும் வரவில்லையா? ஆமாம், கட்டாயம் அகத்திற்குவா! விசு போன லெட்டரில்கூட உன்னைப் பற்றியே எழுதி இருக்கிறான்... அதோ பார் எங்கள் வீட்டுக் காரர். அதோ எதிர்க் கடையில்...". கல்பகத்தின் திருஷ்டி அந்த ஆடவனின் மீது விழுந்தது.

நல்ல வேளையாக, ராமுவைப் பார்த்த கல்பகம், 'ஆ' வென்று கத்தாமல் பிழைத்தாள். ராமுவும் இவளைப் பார்க்கவில்லை. "நேரமாயிற்று! நான் போகட்டுமா?" என்று சரோஜா கேட்டதைக் கல்பகம் பொருட்படுத்தவே யில்லை. "தன் சக்களத்தி இந்தப் பெண், தன் கணவனைத் தன்னிட மிருந்து அபகரித்தவள்" என்ற ஒரு எண்ணமே, மேலோங்கி நிற்க, தான் கமலுவைத் தேட எண்ணினது,

வனஜாக்ஷியுடன் கடைக்கு வந்திருப்பது எல்லாவற்றையும் மறந்தாள். "சே...அவருடன் நமக்கு என்ன பந்தம்? அழைத்தால் கூட இனி அவருடன் போவதில்லையென்று செய்த சபதம் எங்கே?'' என்று மனத்தைத் திடப்படுத்திக் கொள்ள முயன்றது வீணாயிற்று. 'நன்றாக ஒரு முறை அவரைப் பார்க்காமல் போனேனே!' என்று உள்ளம் குறை கூறிற்று. பின்பு வனஜாக்ஷி வந்து ஏதோ கூறியதற்குப் பொம்மை போல் தலையாட்டினாள் அவள்.

இரவு நித்திரையிலும், ராமுவே வந்தான். "எங்கே? அவர் எங்கே?'' என்று அலறி எழுந்து உட்கார்ந்தாள் படுக்கையில். "அம்மா, அம்மா! கமலு ஏதோ பிதற்றுகிறாள் வாருங்கள்!'' எனக் கத்தினாள் பக்கத்தில் படுத்திருந்த விமலா. கல்பகம் வெட்கப்பட்டு, "ஏதோ பயங்கர ஸ்வப்பனம் கண்டேன். வேறு ஒன்றுமில்லை'' எனக் கூறிப் படுத்து விட்டாள். ஆனால் நித்திரை ஏது?

* * *

'கமலு என்று ஒருவள் இருப்பதும், அவள் தன் ஜாடையாகவே இருப்பதும் நிச்சயமாகத் தெரிகிறது. ஆனால், அவள் வனஜாக்ஷிக்கு மட்டும் வேண்டியவளல்ல; நம் சக்காளத்திக்கும் வேண்டியவள். ஒருகால், அம்மா சொன்னபடி இல்லாது, அவள் வேறு யாராகிலுமாயிருந்தால், நாம் அவளைத் தேடுவது வியர்த்தம் தானே?'' என்று பலவாறு எண்ணினாள் கல்பகம். தன் வாழ்க்கைப் பாதை எப்படி எப்படியோ ஆரம்பித்து, எப்படி எப்படியோ போவதைக் காண அது எந்தவிதம் முடியுமோ என அவளுக்கே புரியவில்லை. வனஜாக்ஷியுடன் ஆயுள் முழுவதும் இருப்பது என்னவோ முடியாத காரியம். கமலு என்ற பெண்மீது அவள் உண்மை அன்பு வைத்திருந்தாளென்பது கல்பகத்தைக் கமலுவாக எண்ணி அவள் பேசுகையில் தெரிகிறது. இருந்தாலும், இந்த வனஜாக்ஷியும், அவள்

நடவடிக்கைகளும் ஒன்றும் பிடிக்கவில்லை கல்பகத்திற்கு. உண்மையில், பஞ்சணை மெத்தை போட்டுப் படுத்தாலும், அது பாறாங்கல்லாகத் தோன்றியது அவளுக்கு. தான் எவ்வளவு சொன்னாலும் கேட்காமல் "நீதான் கமலு..." என்று வற்புறுத்துவதோடு, 'புத்தி சரியில்லை' என்ற பெயரையும் வைத்து விட்டாளே! இவளை விட்டு எங்காவது தொலைந்து போய்விடலா மென்றாலோ, இந்தப் பாழும் திருச்சியில், ரங்கய்யனைபோல் இன்னும் எவ்வளவு குண்டர்கள் இருப்பார்களோ! எனக்கொன்றும் புரியவில்லையே? என் ஸ்தானத்தில் வேறொரு பெண் ஆனந்தமாய் இருக்க, நான் இப்படிச் சீர்கெட வைத்தாயே கடவுளே!" எனப் பலவிதச் சிந்தனையில் இரவைக் கழித்தாள் கல்பகம்.

* * *

கல்பகத்தைத் தேடுவதைக் கண்ணன் நிறுத்தவில்லை. கல்பகத்தின் கிழிந்த புகைப்படம் அவன் கையில் பத்திரமாக இருந்தது. யாராவது அந்த ஜாடையா யிருந்தால், உடனே புகைப்படத்தை எடுத்துப் பார்ப்பான்.

ஒரு நாள் அவன் சென்னையில் ஒரு சினிமாக் கொட்டகையில், கல்பகத்தைப் போன்ற ஒரு பெண்மணியைப் பார்த்தான். ஸேவாஸதனத் தலைவியை அவன் அறிவான். இடை வேளையின்போது, அவளிடம் பேசி பெண்ணின் வரலாற்றை அறியும் பொருட்டு அவர்களுக்குப் பின் இருந்த ஆசனத்தில் போய் உட்கார்ந்தான். தலைவி எழுந்து போனவள் வரவேயில்லை. வெளிச்சத்தில் அப் பெண்தான் கல்பகம் எனப் பட்டது கண்ணன் மனதில். இச் சமயத்தை நழுவ விடக்கூடா தென்று, அவன் காலியாகி யிருந்த அவள் பக்கத்து ஸீட்டில் அமர, அந்தப் பெண், "இது எங்கள் தலைவியினுடையது. அவர்களுக்குத் தலை சுற்றியதால், வெளியே போயிருக்கிறார்கள். இப்போது வந்து விடுவார்கள்" என்றாள்.

கண்ணன் மரியாதையாக, "அம்மா! உங்கள் தலைவியை நானறிவேன். ஒரு மிக முக்கியமான விஷயமாக நான் இங்கு வந்தேன். தாங்கள் யார்? தங்கள் பெயரென்ன?" என்றான்.

கமலுவிற்குச் சந்தேகம் தட்டியது. கடைசியில் அவள் பயந்தது சரியாகி விட்டது. 'வனஜாக்ஷி' எப்படியோ அறிந்து விட்டாள் தன்னிருப் பிடத்தை. அவளுடைய வேவுகாரன்தான் இவன் என்ற எண்ணத்தில் பயத்தைக் காட்டாது கோபக் குறியுடன் "ஐயா! நீங்கள் கேட்க வேண்டியதைத் தலைவியிடமே கேட்டல் நலம். என்னை ஏன் தொல்லைப் படுத்துகிறீர்கள்? ஒரு ஸ்திரீயின் பக்கத்து ஸீட்டில் அமர்வது மரியாதை உள்ளவர்களுக்கு அழகல்லவே!" என்றாள்.

"அம்மா! எனக்குக் கெடுதலான சிந்தனையே கிடையாது. உண்மையில் உங்களுக்கு இதம் செய்பவன் நான் என்று சத்தியம் வேண்டுமானால் செய்கிறேன். தங்கள் பெயர் கல்பகம்தானே?"

ஏற இறங்க ஒரு முறை கண்ணனின் முகத்தைப் பார்த்தாள் கமலு. ஆள் கெட்டவனாகத் தெரியவில்லை. ஆயினும், வெளியாரிடம் தான் கல்பகம் அல்ல, கமலு என்று தெரிவிப்பது அவளுக்குப் புத்திசாலித்தனமாகப் படவில்லை. அதற்குள் கண்ணன் மறுபடியும், தயவு செய்து தங்கள் பெயர் கல்பகம் தானா என்பதைச் சொல்லி விட்டால், மிகுந்த நன்றியுள்ளவனாக இருப்பேன் நான்!' என்றான்.

"ஆமாம் என்றே வைத்துக் கொள்ளுங்கள்!" என்றாள் கமலு, பட்டுக் கொள்ளாமல்.

மறுபடி விளக்குகள் அணைக்கப்பட்டு, ஆட்டம் தொடங்கவே இருவரும் பேச்சை நிறுத்திவிட்டனர். தலைவி வராதது, கமலுவின் கவலையை அதிகரிக்கச் செய்தது

ஆட்டம் முடிந்ததும், அவள் தன்னந் தனியாகத் தவிப்பதைக் கண்ட கண்ணன் "அம்மா! நான் உங்களை ஸேவாஸதனத்தில் கொண்டு போய் விடட்டுமா? என்னை நம்பி என்னுடன் வருவீர்களா?" எனவும், இருட்டில் தனியே போகப் பயந்த கமலு, "ஆகட்டும்" என்றாள். கண்ணன் ஒரு டாக்ஸியைக் கூப்பிட, அதில் இருவரும் ஏறிக்கொண்டனர்.

அவர்கள் ஏறிக் கொண்ட அதே சமயத்தில், அவர்களை யறியாமல் ஒரு விசேஷம் நடந்தது. அதைக் கமலுவோ, கண்ணனோ அறியவில்லை.

துரதிருஷ்ட வசமாய் அச்சமயம் அந்தப் பக்கம் வந்த விசு இவ்வளவையும் பார்த்துவிட்டான். 'கமலு'வுக்கு இந்த ஊரில் ஆண் பிள்ளை சிநேகம் எப்படி உண்டாயிற்று? அதுவும் ஸேவாஸதனத்தில் இருக்கும்போது? தனியே யாரையும் அங்கிருந்து வெளியே அனுப்புவதில்லையே? அப்படியானால், கமலு நம்பிக்கைக்குப் பாத்திர மில்லாதவளா?' என்று பலவாறு யோசனை செய்யலானான் அவன்.

## அத்தியாயம் 8

நமது கவனம், இப்பொழுது மறுபடியும் குப்பிப் பாட்டி, ரங்கய்யன் ஆகியோரிடம் செல்லவேண்டி இருக்கிறது. ஊர் முழுவதும், கல்பகம் 'ஓடிவிட்டாள்' என்ற பேச்சு சிறிது காலம் பலமாய் முழங்கி வந்தது. "அடீ! அந்த குட்டி ஓடினாற் போலே ஏதாவது இவளும் செய்துவிடப் போகிறாள்..." என்று, பேச்சுக்கிடையே அவ் விஷயத்தைக் கூறி அவரவர்கள் வீட்டுப் பெரியவர்கள், தங்கள் தங்கள் பெண்களை 'காப்பாற்ற'லானார்கள்! ஆனால், நாள் செல்லச் செல்லப் பழைய சமாசாரங்களுக்கு மதிப்புக் குறைவதுபோல், ஊரில் எல்லோரும் கல்பகத்தை மறந்தே விட்டார்கள்.

குப்பிப் பாட்டி வெறும் வம்புப் பேச்சில் சிறந்தவள் என்பது மட்டுமல்ல தேள் கடிக்கு மந்திரித்தல், சுளுக்கு எடுத்தல், வீபூதி போடுதல், குழந்தைகளுக்கு வரும் 'சங்கா தோஷ'த்திற்கு வைத்தியம் இவையெல்லாம் செய்வதனால் வேறு தனிப் பிரசித்தி பெற்றிருந்தாள். அவள் செய்து வந்த இன்னொரு ரகஸியக் காரியம் 'வசிய மருந்து' தயாரித்தல். ஆகவே, பாட்டி செலவிற்குக் கஷ்டப்படவில்லை. தாத்தா செத்துப் பல நாள் ஆகியும், பாட்டி தந்திரத்தினாலேயே ஜீவனம் நடத்தி வந்தாள். இவைகளெல்லாம் அவளுக்குப் பயன்பட்டன. ஆனால், இதனால் எவ்வளவு குடும்பங்கள் நிர்மூலமாயின என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம்! இத்தனை குடும்பங்களின் சாபமும் வீண் போகவில்லை. பாட்டிக்கு அதை அனுபவிக்கும் காலம் கிட்டினாற் போலவே தென்பட்டது. அதுவும் அவளுக்கு எவ்வளவோ விஷயங்களில் கூட்டாளியா

யிருந்த ரங்கய்யன் மூலமே. ரங்கய்யனுக்குக் கூடப் பாட்டி வசிய மருந்து தயாரிப்பது தெரியாது. அவன் பிரம்மச்சாரி. உலகத்தில் உண்மையாக யார் மேலாவது அவன் அன்பு வைத்திருந்தான் என்ருல் அந்தப் பேர்வழி அவன் தம்பிதான். அவன் வடக்கே வேலையாக, குடும்பத்துடன் வசித்தவன், ஒருமாதம் லீவில் மாயவரம் வந்தான். அவன் மனைவிக்குத் தன் கணவன் தன்னிடம் சரியாக இல்லை யென்ற நினைப்பு. வடக்கே இருக்கிறவர்கள் எவ்வளவோ ஜோராய் நடந்துகொள்ள, இவன் மட்டும் வைதீகமாயிருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. இங்கு சிலர் மூலம் கேள்விப்பட்டாள், குப்பிப் பாட்டி வசிய மருந்து செய்வதில் கெட்டிக்காரி என்று. மறுபடி வடக்கே போவதற்குள், எப்படியாவது தன் கணவனுக்கு அம் மருந்தைச் செலுத்திவிட வேண்டுமென்ற ஆவல் உண்டாகிவிட்டது அவளுக்கு. பாட்டியை அடிக்கடி தனியே சந்தித்துப் பேசினுள். குப்பிப் பாட்டி, தன்னிடம் 'வசிய மருந்தும் கிடையாது, ஒன்றும் கிடையாது' என்று சாதித்தாள். அவளோ விடுபவளாகத் தெரியவில்லை. அவளிடமிருந்து பாட்டி கைக்குத் தாராளமாய்ப் பணம் கிடைத்து வந்தது. கடைசியில் பாட்டி "இதோ பார் கோமதி! ரங்கய்யன் எனக்கு ரொம்ப வேண்டியவன். அவன் தம்பிக்கு நான் மருந்து கொடுப்பதென்பது சரியில்லை. நான் உனக்காக அங்கலாய்ப்புப் பட்டாலும், அவனைப் பற்றித்தான் யோசனையாய் இருக்கு" என்று மழுப்பினுள்.

"பாட்டி! இந்த ஒரு உபகாரம் பண்ணினுல் உங்களுக்கு எவ்வளவோ புண்ணியமுண்டு. கனகத்தின் அகமுடையான் முன்பு ரொம்ப முரடனுய் இருந்தானும். இப்போது உங்களால்தான் திருந்தி யிருக்கானும். நேற்று அவள் சொன்னுள்..."

பாட்டி சிறிது நேரம் மௌனமாயிருந்து பின் குடு குடு வென்று உள்ளே போய் ஒரு சிறிய சிமிழை எடுத்து வந்தாள். "இதோ பார்! இதை மூன்று தரம் பாலில் கலந்து கொடு! பிறகு என்னிடம் வா! ஆனால், ஒன்று. இந்த விஷயம் ரங்கய்யனுக்குத் தெரிந்ததோ, போச்சு! ஆமாம்" என்று எச்சரித்தாள். "பாட்டி! எனக்கென்ன புத்தியில்லையா? அதெல்லாம் ஜாக்கிரதையாய் இருப்பேன், கொடுங்கள்!" என்று வாங்கிப் போனாள் கோமதி.

கோமதிக்குக் கொடுத்த மருந்து விபரீத பலனை உண்டாக்குமென்று பாட்டி நினைக்கவேயில்லை. கோமதியின் கணவனுக்குப் பைத்தியமே பிடித்துவிட்டது! இந்த விஷயம் கோமதியின் நான்கு வயதுக் குழந்தை மூலம் வெளியாகிவிட்டது. அது பெரியப்பாவிடம் வந்து "பேப்பா... அம்மா...இந்த மருந்து கொடுத்தா, அப்பாக்கு, அப்பா குடிச்சுட்டா. இதோ பாரு!" என்று ஒரு சிமிழைக் கொண்டு வந்து ரங்கய்யனிடம் கொடுத்தது. ரங்கய்யனுக்கு ஏதோ சந்தேகம் தோன்றவே கனகத்தைக் கூப்பிட்டு விசாரித்தான். நல்லதனமாய்ப் பதில் வராமற் போகவே மிரட்டினான். கனகம் விஷயத்தை கக்கினதோடு, பாட்டியின் போதனையால் தான், இந்த மாதிரிக் காரியம் தான் செய்ததாகவும் கூறிவிட்டாள். ரங்கய்யனுடைய கோபத்திற்குக் கேட்க வேண்டுமா! ஊர் முழுவதும் தம்பட்டமடித்தாற்போல் ஆகிவிட்டது. பாட்டிக்குத் தலையை வெளியே கிளப்ப முடியவில்லை. "சும்மா விடறேனா பாரு இவளை! என்னிடமேயா தன் கை வரிசையைக் காட்டுகிறாள்?" என்று உறுமினான் ரங்கய்யன்.

ஏற்கெனவே சிறிது நாளாய்ப் பாட்டியின் நடவடிக்கைகள் ஒன்றும் ரங்கய்யனுக்குப் பிடிக்கவில்லை. எடுத்ததற்கெல்லாம் 'கமிஷன்' கேட்கும் இந்தப் பாட்டியை

எப்படியாவது, தொலைத்துவிட வேண்டுமென்று அவன் எண்ணி யிருந்தான். இப்பொழுது சமயம் வாய்த்தது. ஒரு போக்கிரி ஆண் பிள்ளையின் பிரசாரத்திற்கு முன் ஓர் கிழப் பாட்டி எம்மாத்திரம்? பாட்டி அவமானம் தாங் காது ஊரை விட்டுக் கிளம்பி விட்டாள். மனச்சாட்சி என்று எதுவும் இல்லாதிருந்த அவளுக்குக்கூட 'கல்பகத் திற் கிழைத்த கொடுமைக்கு இது பலன்! இது பலன்!' என்று ஏதோ ஒன்று உள்ளுக்குள் சொல்லத்தான் செய் தது. கிழப் பிராணன் எங்கு போய்ச் செத்தாலும் பாதக மில்லை. ஊரை விட்டுத் தன்னைத் துரத்தி விட்டார்கள் என் னும்போது தனக்கே எப்படி இருக்கிறது? அப்படி யிருக்க சின்னஞ் சிறு பெண்...அந்தக் கல்பகம்! "அடி யம்மா! உன் மனசு என்னபாடு பட்டதோ!" என்று ஒரு நிமிஷம் நினைக்கத்தான் செய்தாள் அவள். தனக்கு வந்தால்தானே தெரியும் தலை வலியும் காய்ச் சலும்?

* * *

யாரோ ஒரு புதுப் பேர்வழியுடன் கமலு பேசிக் கொண்டு போவதைக் கண்ட விசுவிற்கு மனம் இன்னும் சமாதானமடையவில்லை. ஒவ்வொரு தடவை விடுமுறை நாட்களுக்குச் செல்லும்போதும் "பாட்டி! கமலுவை அழைத்து வரவில்லையா?" என்று கேட்கும் வழக்கமுடை யவன் இந்தத் தடவை விடுமுறையில் அந்தப் பிரஸ்தாபமே எடுக்கவில்லை. தாத்தாவும், பாட்டியுமோ, விசுவத்தின் கல்யாணத்தை முடிக்கும் அவசரத்தில், எங்கெங்கிருந்தோ வரும் ஜாதகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தனர். அவர் கள் காரியத்தில் கமலுவை மறந்திருந்தார்கள் என்றே கூற வேண்டும். விசுவத்தைப் பார்க்க யாராவது வந்தால், 'இந்தப் பெண்ணையா விசு அழைத்து வந்தான்' என்று நினைக்க ஏதுவில்லாமல், ஒரு விதத்தில் அவள் இங்கு வராம

விருப்பதே நலம் என்ற எண்ணமும் அம்மணியம்மாளுக்கு இல்லாமல் போகவில்லை.

கல்யாண விஷயத்தில் இதுவரையிலும் அசிரத்தையாய் இருந்த விசுவமோ, 'பாட்டி, சொற்படிக் கேட்பதே உசிதம். யார் என்ன வென்று அறியாமல், கமலுவின் மீது நட்புக் கொள்ளத் துணிந்தோமே?' என்று ஒரு சமயமும், 'ஒருகால் அவள் குற்றமற்றவளானால், வீண் சந்தேகம் கொண்டதாகவல்லவா முடியும்?' என்று மற்றொரு சமயமும் நினைக்கலானான். இந்தச் சமயம் சரோஜா இல்லாதது அவனுக்குப் பெரும் குறையாகத் தோன்றிற்று. அவள் இருந்தால் ஏதாவது யோசனை சொல்வாள். "முன்பே 'அண்ணா! கமலுவைப் பிரிந்திருப்பது உனக்குத்தான் கஷ்டம்!' என்று கண்ணைச் சிமிட்டியவாறு கூறினாளே! அதில்தான் எவ்வளவு அர்த்த புஷ்டி?" என்றெல்லாம் ஏங்குவான்.

அன்று தபாலில் பங்களூரி லிருந்து சரோஜா அவனுக்கு ஒரு கடிதம் எழுதி யிருந்தாள்.

"அன்புள்ள அண்ணாவுக்கு,

நமஸ்காரம். இங்கு நடப்பது ஒன்றொன்றும் ஆச்சரியமாயிருக்கிறது. முதலாவது வெடி குண்டு, என் கணவர் ஏற்கெனவே கல்யாணமானவராம், முதல் மனைவி இருக்கிறாளாம்! இதை என் மாமியாரே வந்து சொல்லிவிட்டுப் போனார்! ஆமாம், தாயாருக்கும் பிள்ளைக்கும் இருவருக்கும் நடந்த வாக்குவாதத்தில் இந்தவிஷயம் வெளியாயிற்று! இரண்டாவது, இங்கு ஒரு கடையில் நான் கமலுவைப் பார்த்தேன். என்னிடம் முகம் கொடுத்துப் பேசாததோடு "யார் நீங்கள்?" என்று வேற்று மனுஷி மாதிரி பேசினாள். எதிர்க் கடையில் அவர் காத்திருந்தபடியால், நின்று பேசாமல் போய் விட்டேன். இருந்தாலும், நம்மிடம் அப்படிப் பழகினவள் இப்படி மாறிய

காரணம் எனக்குப் புலப்படவே யில்லை. நமது வீட்டார் ஏதாவது அவளிடம் மனஸ்தாபப்பட்டு விட்டார்களா? எல்லாம் விவரமாய் எழுது. ஆவலாய் உன்பதிலை எதிர் பார்க்கும்,

உன் தங்கை,
"சரோஜா"

இந்தக் கடிதத்தை வாசித்த விசு "எல்லாம் ஆச்சரிய மாகவும், மர்மமாகவும்தான் இருக்கிறது!" என்று வாய் விட்டுக் கூறினன். என்ன கடிதம் என்று தெரிந்து கொள்ள அச்சமயம் உள்ளே வந்த அம்மணியம்மாள் "என்னடா, ஆச்சரியம்?" என்று வினவினள். "இல்லை, பாட்டி! சரோஜாவின் அகத்துக்காரருக்கு ஏற்கெனவே கல்யாணமாகி யிருக்கிறதாம். இவள் இளையாளாம். இந்த அழகில் மூத்தாள் உயிரோடு இருக்கிருளாம்" என்ருன் விசு.

"அட, பாவி கெடுத்தானே காரியத்தை!" என்று இரைந்தாள் அம்மணி.

"மெள்ளப் பேசு, பாட்டி! ஜானகி அடுத்த அறையி லிருக்கிருள். அவளால் நம் விஷயம் ஒன்றுக்கு நாலாய் வெளியே போகிறது" என்ருன் விசு. முதல் நாள்தான் விசுவும் தன் சிநேகிதன் மூலமாய்க் கேள்விப்பட்டான், ஜானகி அவர்கள் தாயாரிடம் வந்து இந்த வீட்டு விஷ யங்களைப் பற்றிக் கூறியதை யெல்லாம். பிறகு பாட்டியும் பேரனும், 'குசு குசு' வென்று பேசாலானர்கள்.

## அத்தியாயம் 9

'ஏற்கெனவே கல்யாணமாகி யிருக்கையில், தன்னிடம் அவன் சொல்லவில்லை, பார்த்தாயா' என்ற கோபம் சரோஜாவிற்குக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தணிந்தது. புத்திசாலியான அவள் அறிந்து கொண்டாள், அகமுடையான் எப்படிப்பட்ட சபல சித்தன் என்பதை.

முதல் முதல் தனக்கு ஓர் எதிரி இருக்கிருளென்பதைக் கேட்கையில் ஆத்திரம்தான் வந்தது அவளுக்கு. ஆனால் போகப் போக அந்த எதிரியின் மீது அனுதாபமும், கணவனின் மீது மனத்தாங்கலுமாக மாறிற்று அக் கோபம். 'யௌவனப் பெண். வேறு கதியற்றவள். கேவலம் ஓர் ஆயிரம் ரூபாய் காசுக்காக அவள் மீது தப்பு ஒன்றுமில்லாத போது தள்ளி வைப்பதாம்! நானே அந்த முதல் மனைவியாக இருக்கவேண்டும்! அப்பொழுது தெரியும், படுத்திவைக்கும் பாடு! ஆணுக்கொரு நியாயம்! பெண்ணுக்கொரு நியாயம்! அவளைத் தள்ளி வைத்து ஜோராய் வேறு கல்யாணம் செய்து கொண்டீர்களே, அவளும் அப்படியே செய்து கொண்டாளானால் எப்படி யிருக்கும்! ஆனால், பெண்களின் குணம் அது அல்ல!" என்று ராமுவிடம் சண்டை பிடித்தாள்.

இதைக் கேட்ட ராமு கலகல வென்று சிரித்தான். பின்பு தன் நண்பன் கண்ணனின் தூண்டுதலால் தான் அவளை யழைக்கப் போனதையும், அங்கு கேள்விப்பட்டதையும் கூறினான். "ஹூம்! அதை உடனே சத்திய வாக்காய் நம்பி விட்டீர்கள், இல்லையா? நாளைக்கு நான்

பிறந்தகம் போனால், என்னைப் பற்றியும் அப்படித்தானே எண்ணுவீர்கள்?''

"அது இல்லை சரோஜா! முன்னாடியே என் தாயார் அந்தப் பெண்ணின் துர்க்குணங்களைக் கேள்விப்பட்ட தாகக் கூறினாள். அதற்கு அனுகுணமாக அங்கிருந்தவர் கள் எல்லோரும் ஒரு முகமாய்க் கல்பகத்தைக் கெட்ட நடத்தையுள்ளவளென்றே சாதித்தார்கள்.''

"ஹூம்! அவள் தலையெழுத்து அப்படிப் பட்டம் வாங்க இருந்திருக்கும். இருந்தாலும் நான் சொல்கிறேன், அவள் கெட்டவளில்லை யென்று.''

"அப்படித்தான் வீருப்புப் பேசிப் போயிருக்கிறான், கண்ணன். அதிருக்கட்டும், சரோஜா! ஒருகால் கல்பகம் நல்லவளாகவே யிருந்து, கிடைத்தும் விட்டாளானால், என்ன செய்கிறது?''

"என்ன செய்கிறது, சொல்லட்டுமா? என் எதிரில், அவளிடம் நீங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும். பிறகு என் சகோதரிபோல் எண்ணி அவளை இங்கு வைத்துக் கொள்வது.''

சரோஜாவின் சாமர்த்தியமான பேச்சில் பூரித்துப் போனான் ராமு. அது சமயம் "ஸார், தபால்!'' என்று கூவிய குரலும், அடுத்தாற்போல் சில தபால்களும் ஜன் னல் வழியே விழுந்தன. ஒன்று சரோஜாவிற்கு. இன் னொன்று ராமுவின் தகப்பனார் எழுதியது. மூன்றாவது கண்ணனின் கடிதம். சரோஜாவிற்குப் பாட்டி எழுதிய கடிதத்தில் விசுவிற்குக் கல்யாணம் நிச்சயமாகி யிருப்ப தாகவும், மாப்பிள்ளையுடன் வரும்படியும் எழுதி யிருந்தது. ராமுவின் தகப்பனாரோ அவனைக் கண்டபடி வைது எழுதி யிருந்தார். தாயாரை உதாசீனம் செய்த அவன் முகத்தில் இனி விழிப்பதில்லை யெனக் கண்டிருந்தது அக் கடிதத்தில். கடைசியில் கண்ணன் கடிதத்தைப் பிரித்தான். ராமு, அதில்,

"நண்பா,!

கல்பகத்தைக் கண்டு பிடித்துவிட்டேன். உடனே புறப்பட்டு வா; நான் வழக்கமாய்த் தங்கும் அறையில் தான் தங்கி யிருக்கிறேன்.

சென்னை. கண்ணன்"

"என்ன? உன் இஷ்டப்படியே ஆயிற்று, இல்லையா"? எனக் கேட்டான் ராமு மனைவியை. சரோஜா புன்சிரிப் புடன் கடைக் கண்ணால் நோக்கினாள் அவனை.

* * *

ஸேவாஸதனத் தலைவிக்கு எப்பொழுதும் வருகிற மயக்கம்தான் அன்று சினிமாக் கொட்டகையிலும் வந்தது. வெளிக் காற்று பட்டால் குணமாகுமென அவள் வெளியே வந்தாள். சிறிது தூரம் நடப்பதற்குள் மயங்கி விழுந்துவிட்டாள். அங்கிருந்த சிலர் அவளை ஆஸ்பத்திரிக்கு அப்புறப்படுத்தினர். மறு நாள்தான் ஆவலுடன் காத்திருந்த மாணவிகள் அறிந்தார்கள், தங்கள் தலைவி ஆஸ்பத்திரியில் இருக்கும் விஷயத்தை. முதல் நாள் முழுவதும், அவள் பிரக்ஞை யின்றிக் கிடந்தபடியால், ஸேவாஸதனத்திற்கு ஆஸ்பத்திரியிலிருந்து ஆள் வரவில்லை. கமலு தற்சமயம் அங்கு மாணவியாய் இல்லை. தலைவிக்கு அடுத்த பதவியில் இருக்கிறாள் அவள். தலைவிக்கு உடம்பு குணமாகும் வரையில் கமலு தன்னை யாரோ வந்து விசாரித்த விஷயங்களை அவளிடம் கூறவேயில்லை. இப்பொழுது அவள் அநேகமாய் விடுமுறை நாட்களைத் தலைவியின் வீட்டிலேயே கழிக்கலானாள்.

ஒரு விடுமுறைத் தினத்தன்று தலைவி தங்கம்மாளின் வீட்டில் கமலுவும், தங்கம்மாளும் உட்கார்ந்து 'கேரம்' ஆடிக்கொண் டிருக்கையில் "யாரோ வந்திருக்கிறார்கள் அம்மா!" என்று வேலையாள் வந்து கூறி ஒரு 'விசிடிங்

கார்டை'யும் கொடுத்தான். "வரச்சொல்" என்றாள் தலைவி. கமலு எழுந்து உள்ளே போய்விட்டாள்.

"வா, வா, கண்ணு! ஏது இவ்வளவு தூரம்?" என்று விசாரித்துவிட்டுக் கூடவந்த மனிதரை நோக்கினாள் தலைவி. "இவர் என் அத்யந்த நண்பர், ராமகிருஷ்ணன்" என்று அறிமுகப் படுத்தினான் கண்ணன். சிறிது நேரம் லோகாபிராமமாய்ப் பேசி யிருந்தபின் கண்ணன் "உங்களை ஒரு விஷயம் கேட்க ஆவலுடன் வந்தேன். கேட்கட்டுமா?" என்றான்.

"ஆஹா, கேளேன்!"

"தங்களிடம் கல்பகம் என்ற பெண் ஒருத்தி இருக்கிறாளா?"

"ஒன்றென்ன? நாலு கல்பகம் இருக்கிறார்கள். எதற்கு?"

"எங்கள் உறவில் கல்பகம் என்ற பெண்ணைத் தேடி வந்தோம்......"

"உங்கள் உறவா? அதெப்படி? இங்கு ஒவ்வொரு பெண்ணையும், உறவினர்களோ நண்பர்களோதான் கொண்டுவந்து சேர்க்கிறார்கள். இரண்டு கல்பகத்தை அவள் அண்ணாமார்கள் சேர்த்துப் போனார்கள். மூன்றாவது கல்பகத்தைக் கணவனே படிப்பிற்காகச் சேர்த்தான். நாலாவதுதான், பாவம், பதினான்குவயது விதவை. அவளுடைய அக்கா வந்து சேர்த்துவிட்டுப் போனாள். இவர்களில் நீங்கள் யாரைப் பார்க்க வேண்டும்" சொல்லுங்கள். நீங்கள் யார் என்பதையும் அவர்களிடம் கூறி, அவர்கள் சம்மதித்தால் என் எதிரில் பேசலாம். ஆனால், இப்பொழுதைக்கு என்னை மன்னிக்கவேண்டும், மிஸ்டர் கண்ணன்! பெண்களை ஏற்றுக்கொண்டு நடத்தும் பொறுப்பு எப்படிப்பட்ட தென்பதை உங்களுக்கு நான் தெரிவிக்க வேண்டியதில்லை. இரண்டு நாள் கழித்து வந்

தீர்களானல், நீங்கள் சொன்ன விஷயத்தை அவர்களிடம் கூறுவேன்."

"கல்பகத்தின் கணவன் ராமு நேரில் வந்ததாக கூறுங்கள்" என வேண்டினன் கண்ணன். "ஆகட்டும்!" என்ருள் அவள். திரை மறைவிலிருந்து எல்லாவற்றையும் நோக்கின கமலு "அப்பாடா!" எனவொரு பெருமூச்சு விட்டாள். "சினிமாவில் கண்ட ஆசாமிதான் இந்தக் கண்ணன். இவர்கள் யாரைத் தேடுகிருர்கள்? நல்ல வேளை! வனஜாக்ஷியின் ஆட்கள் இல்லை" என்று திருப்தி யடைந்தாள் அவள்.

* * *

கண்ணனும் ராமுவும் அதிருப்தியுடன் வீடு நோக்கி நடந்தனர். ராமுவிற்கு இடையில் ஓர் சந்தேகம் உண்டாகி விட்டது. "என் கண்ணு! ஓர் வேளை உனக்கு ஆள் மாருட்டமாகி விட்டதோ? வெறும் படம்தானே உன்னிடம் இருக்கிறது? அதை வைத்துக்கொண்டு உன்னல் எப்படி கண்டு பிடிக்க முடியும்? என வினவினன் அவன்.

"என்ன, ராமு! அவ்வளவு சிந்தனை யில்லாதவஞ நான்? சந்தேகித்துத்தான், பெயர் என்னவென்றுகூட விசாரித்தேன். படத்திலுள்ள வயதைவிடச் சிறிது பெரியவளாகத் தோன்றினள். மற்றபடி அதே ஜாடை, அதே பெயர். எப்படி வித்யாச மிருக்கும்? கட்டாயம் கல்பகம் ஸோவாஸதனத்தில்தான் இருக்கிருள். இரண்டு நாள் கழித்துப் போனல் விஷயம் தெரிகிறது, பார்!"

"என்னவோ அப்பா! எனக்கு நம்பிக்கையாய் இல்லை" என்ருன் ராமு.

கண்ணனும் ராமுவும் நேரே ராமுவின் மாமனர் வீட்டை அடைந்தனர். கண்ணனைச் சரோஜாவிற்கு நன்ருகத் தெரியும். ஆகவே, கண்ணன் எதிரிலேயே

சரோஜாவை அழைத்தான் ராமு. "எங்கே கல்பகம்? அவளை அழைத்து வரவில்லையா" என வினவினாள் சரோஜா, உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாய்.

"சரோ! நான் நேராக இங்கிருந்து கண்ணன் அறைக்குச் சென்றேன். அவன் கல்பகத்தைப் பார்த்து பேசினானும். அவள் ஸேவாஸதனத்தில் இருக்கிறாளாம்......"

"ஓ! ஸேவாஸதனத் தலைவி எனக்கு மிக வேண்டியவள் ஆயிற்றே! என் சிநேகிதி கூட ஒருத்தி யிருக்காள் அங்கே" என்றாள் சரோஜா.

"இருக்கலாம்! அந்தத் தலைவி கல்பகத்தை நாங்கள் காண்பதற்கு ஆயிரம் சால்ஜாப்பு சொல்லுகிறாள். ஒரு கால் நீ போனால்......"

"கட்டாயம் நானும் உங்களுடன் வருகிறேன். என் தோழியையும் விசுவந்தின் கல்யாணத்திற்கு அழைக்க வேண்டும்" என்றாள் சரோஜா.

ராமுவும் கண்ணனும் மறுபடியும் வெளியில் போனார்கள். சற்று நேரத்திற்கெல்லாம், விசுவம் வந்தான்.

"என்ன அண்ணா! கல்யாணம் ஆகப்போகிறவன் மாதிரியே இல்லையே உன்னைப் பார்த்தால்! அழுது வடிகிறாயே?" என்று பரிகசித்தாள் சரோஜா.

"சரோஜா! உனக்குச் சிரிப்பாயிருக்கிறது என்னைப் பார்த்தால், இல்லையா? என் மனது படும் வேதனை தெரியுமா உனக்கு? உனக்கு நன்றாகத் தெரியும், நான் கமலுவை விரும்புகிறேனென்று" என்றான் விசு.

"ஊம்......பிறகு ஏன் சம்மதித்தாய் இந்தக் கலியாணத்திற்கு? கொஞ்ச நாட்களாய் நீ கமலுவைப் பார்க்காததன் காரணம் என்ன?"

"சரோ ஒரு நாள் சினிமாக் கொட்டகை வாசல் வழியாக கமலு வேறொரு ஆண் பிள்ளையுடன் டாக்ஸியில் போவதைக் கண்டேன். என் மனது குழம்பியது......"

"உம்! அண்ணு! நீ கூடவா சந்தேகத்திற்கு இடம் கொடுக்கிருய்? கமலு நல்லவளோ கெட்டவளோ எனக்குத் தெரியாது. ஆனுலும், ஏதோ ஒரு ஆபத்து என்ருல் கூட ஒருவருடன் வெளியே போகக்கூடாது என்று நீ எப்படி நினைக்கலாம்? அப்படிச் சந்தேகம் இருக்கும் பட்சத்தில் நீ அதை நேரில் தீர்த்துக்கொள்ள வல்லவா முற்படவேண்டும்? என் கணவர் தன் முதல் மனைவியைச் சந்தேகித்துத்தான் பிரிந்துவிட்டாராம். இப்போது அவளைத் தேடி, அவர், நான் எங்கள் நண்பர் கண்ணன் மூன்றுபேருமாக அலைகிருேம். சற்று முன்புதான் கண்ணன் வந்து போனுர். நீ எங்கே சென்றிருந்தாய் அப்போது? இருக்கட்டும் நாளையதினம் அவர்கள் புறப்பட்டு முன்னே ஸேவாஸதனம் போகட்டும். நாமும் பின்னுடி போகலாம். எனது கணவரின் முதல்தாரம் அங்கிருப்பதாகக் கேள்விப்பட்டாராம் கண்ணன். நாமும் அப்படியே போய்க் கமலுவைப் பார்ப்போம்" என்ருள் சரோஜா.

"சரோ...! உன் புத்திக்கு இணையில்லைதான்" என்று ஒப்புக் கொண்டான் விசுவம்.

# அத்தியாயம் 10

கல்பகம் இன்னும் பெங்களூரில்தான் இருந்தாள். நாள் செல்லச் செல்ல, அவளுக்குத் தன் கணவனை எப்படி யாவது, ஒரு முறை காண வேண்டுமென்ற ஆவல் வலுத் தது. வீட்டில் மோட்டார் இருந்தபடியால், கடைக்குப் போவதாகக் கூறிவிட்டு வெளியே கிளம்பினுள் அவள்.

தன் கணவன் பெங்களூரில் இருப்பானேன் என்று அவளுக்கு விளங்கவில்லை. இங்கு வேலை ஏதேனும் ஆகி விட்டதா, இன்னும் தன்னைப்பற்றி அவனது அபிப்பிராயம் எப்படியிருக்கிறது, என்றெல்லாம் விசாரிக்கும் ஆவலில் கிளம்பினுள் அவள். முன்னே பின்னேதெரியாத இடத்தில் என்னவென்று விசாரிப்பது? 'ஆமாம், அன்று நின்று பேசியிருந்தாரே, தான் நின்ற புடவைக் கடைக்கெதிர்க் கடையில். கடைக்காரருடன் நகை முகத்துடன் பேசி ஞர். ஒருகால் கடைக்காரர் தெரிந்தவரோ என்னவோ? எதற்கும் விசாரிப்பதில் என்ன தப்பு?' என்று எண்ணிக் கொண்டு அந்தக் கடைக்கு மோட்டாரை விடச் சொன் ஞள் கல்பகம்.

கடையில் ஏதோ சாமான் வாங்கிவிட்டு, "ராம கிருஷ்ணன் என்பவர் இந்தக் கடையில்தானே வாடிக்கை யாகச் சாமான் வாங்குவது வழக்கம்?" எனக் கேட் டாள். கடைக்காரர் மரியாதையாக "எந்த ராமகிருஷ் ணன்?" என்று சிறிது யோசித்துவிட்டு "ஓ, அவரா! ஆம், அம்மா, இதுதான் அவர் வாடிக்கைக் கடை. ஏன் தங்கள் உறவினரா அவர்?" என்று கேட்டார்.

இந்தக் கேள்விக்குக் கல்பகம் என்ன பதில் சொல்லு வாள்? அவமானம்! தன் கணவனைப் பற்றிப் பிறரிடம்

விசாரித்துத் தெரிந்து கொள்வதாவது? இதைவிட வெட்கக்கேடான விஷயம் உண்டா? உம். வழியில்லாத போது சிந்திப்பதில் என்ன பயன்? "ஆமாம்! அவர் விலாசம் மறந்துவிட்டது. தங்களால் அறிவிக்க முடியுமா?" என்ருள்.

"இதோ எழுதித் தருகிறேன்" என்று ஒரு சிறிய துண்டில் ராமகிருஷ்ணன் வீட்டு விலாசத்தை எழுதினுர் அவர். "ஆபீஸ் அட்ரஸ்?" என அவள் வினவவும், அதையும் எழுதிக் கொடுத்தார். "அப்பாடா! காரியம் லகுவில் தீர்ந்தது" என்று எண்ணியவளாய் "மிகவும் வந்தனம்" என்று கூறிவிட்டு புறப்பட்டாள்.

கல்பகம் சுவபாவத்தில் பயந்த குணமுள்ளவளாயிற்றே, அவளுக்கு ஏது இவ்வளவு தைரியம் என நேயர்கள் சிந்திக்கலாம். மனிதர்கள் தைரியமாய் இருப்பதற்கும், பயந்து போவதற்கும், மூலகாரணம் அவர்கள் வசிக்கும் இடத்தை பொறுத்ததே. சிவன் தலையில் உட்கார்ந்து "சௌக்கியமா?" எனக் கருடாழ்வாரைக் கேட்ட நாகத்தை நோக்கி "எல்லாம், இருக்கும் இடத்தில் இருந்தால் சௌக்கியம்தான்!" என இருவித அர்த்தத்தில் பதிலளித்தாராம் கருடன்! கருடனைக் கண்டு நடுங்கும் நாகம்கூட சிவன் தலைமீதில் அமர்ந்திருந்த தைரியத்தில் தானே தன் பகைவனையே குசலம் விசாரித்தது? ஏழை அலமேலுவிடம் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கையில், கல்பகத்திற்குத் தொட்டதற் கெல்லாம் பயம் உண்டாயிற்று. இன்று நல்ல ஸ்திதியில இருக்கையில், தன்னைப் பாடுபடுத்தி வைத்தவர்கள் எந்த ஸ்திதியில் இருக்கிருர்கள் என பார்க்க அவள் ஆசைப்படுவது சகஜம்தானே?

கற்பகம் நேரே அந்த விலாசத்திலுள்ள வீட்டிற்குத் தான் போனுள். வீடு பூட்டிக் கிடந்தது. பக்கத்து வீட்டில் ஓர் பெண் நின்றிருந்தாள். தைரியமாகப் போனவ

ளுக்கு என்னவோ அந்தத் தெரு வந்ததும் மனம் திக் திக்கென்று அடித்துக்கொண்டது. அதற் கேற்ருற்போல் டிரைவர் "அம்மா! அந்த வீடு பூட்டி யிருக்கிறது" என்ருன். "கமலு அம்மாள் இப்படி யெல்லாம் சுற்ற மாட்டார்களே! என்னவோ தெரியவில்லை. பாவம், வனஜாக்ஷி யம்மாள் கூறுவதுபோல் கமலு அம்மாளுக்குப் புத்தி பிசகித்தான் இருக்கிறது!" என்பது, வனஜாக்ஷியிடம் வெகு நாளாய் இருந்துவருகிற அந்த டிரைவரின் எண்ணம்.

"யாரைத் தேடுகிறீர்கள்?" எனக் கேட்டாள் அந்தப் பக்கத்து வீட்டுப் பெண்மணி. "பூட்டியிருக்கும் வீட்டுக்காரர்யார்?" என்ருள் கல்பகம். "அதுவா? ராமகிருஷ்ணனின் வீடு. அவர்கள் இரண்டுபேரும் ஊரில் இல்லை. அவர்கள் மைத்துனர் கல்யாணத்திற்குப் போயிருக்கிருர்கள். வாருங்களேன், உள்ளே!" என்று அழைத்தாள் அப்பெண். "நல்லதுதான், இந்தப் பெண் மூலம் ஏதாவது விஷயம் அறியலாம். முதல் பெண்டாட்டியைத் தள்ளி வைத்த மனுஷன் இப்பொழுது வேட்டகம் கொண்டாடுகிருரா? உம்! ஒரே மனிதனுக்கு இருவித புத்தி" என்றெண்ணியவளாய்க் கீழே இறங்கினுள் கல்பகம். பக்கத்து வீட்டுக்காரி கல்பகத்தை உள்ளே யழைத்துப்போய் உட்காரவைத்து, நீங்கள் யார், சொல்லிவிட்டுப் போனல் சரோஜா வந்ததும் சொல்லுகிறேன்" என்ருள்.

"கட்டாயம் சொல்லிவிட்டுப் போகிறேன். ஆமாம், சரோஜாவின் மாமியார் எங்கே?"

"உங்களுக்குத் தெரியாதா? எனக்கு அவர்கள் வீட்டு விஷயமெல்லாம் தெரியும். இந்த ராமகிருஷ்ணனுக்கு முதல் பெண்டாட்டி பாவம், யாரோ கல்பகமாம், அவளை அநியாயமாய்த் தாயார் பேச்சை கேட்டுக்கொண்டு அவர் தள்ளிவைத்து விட்டாராம்...இதெல்லாம் சரோஜா

விற்கு முதலிலேயே தெரியாது. இப்போது அந்தப் பெண் எப்படியாவது கல்பகத்தைக் கண்டுபிடிக்கணும் என்று குதியாய்க் குதிக்கிருள்.'' என்று விவரமாகச் சொன்னுள் அந்தப் பெண்.

"அப்படியா? இதெல்லாம் கொஞ்சம் கேள்விப் பட்டேன், அவ்வளவுதான். அப்படியானல், அவள் மாமியார் இங்கே வரவேயில்லையா?''

"பார்த்தீர்களா! சொல்ல வந்ததை முடிக்கவில்லையே, நான்'' எனக் கூறி, மாமியார் வந்ததையும், இருவருக்கும் நடந்த சண்டையையும் ஒன்றுவிடாமல் சொன்னுள் அப் பெண்.

"உங்களுக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?'' என்று கேட்டாள் கல்பகம்.

"சரோஜா என் சிநேகிதியாயிற்றே! அவர்கள் வீட்டில் நடப்பது எனக்கும், என் வீட்டில் நடப்பது அவளுக்கும் நன்ருகத் தெரியும்'' என்று பெருமிதத்துடன் கூறினுள் அப் பெண்.

"சரி! நான் இன்னொருதரம் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பிய கல்பகம் வண்டியிலிருந்து ஓர் விலையுயர்ந்த சால்வையை எடுத்து அப் பெண்ணுக்கு அளித்தாள். அந்தப் பெண் கல்பகத்தை யாரோ லக்ஷாதிபதியின் சம்சாரம் என்று எண்ணிக்கொண்டாள்! கல்பகம் போனபிறகே, "ஐயோ பெயர் என்னவென்று கூடத் தெரிஞ்சுக்காமல் போனேமே!'' என்பது புலப்பட்டது அவளுக்கு.

கண்ணனும், ராமுவும் போவதற்கு முன்பே, விசுவும் சரோஜாவும் போய்ச் சேர்ந்தார்கள், தங்கம்மாவின் வீட்டிற்கு. கல்பகம் என்ற பெயர் கொண்ட நாலு பெண்களையும் அன்று தன் வீட்டில் அழைத்திருந்தாள் தலைவி. கமலு "நானும் வருகிறேன்!'' என்றபொழுது

தலைவிக்கு ஆச்சரியமாய் இருந்தது. "இன்று ஸேவா ஸதனத்தில் உனக்கு வேலையிருக்கிறதே, கமலு! என்னுடன் நீயும் வந்துவிட்டால் எப்படி?" என்றாள் "இல்லையம்மா! உடம்பு நலமில்லை யென்று என் வகுப்பிற்கு லீவு கொடுத்துவிட்டேன்" என்று சொல்லித் தப்பித்துக் கொண்டாள் கமலு.

தங்கம்மாள் மற்ற மாணவிகளுடனும், கமலுவுடனும், தன் வீட்டிற்குள் நுழைகையில், வாசலில் தயாராகக் காத்திருந்த சரோஜாவையும், விசுவையும் கண்டாள். "வாருங்கள்! வாருங்கள்!" என்று அவர்களை உள்ளே யழைத்தாள். அன்று கடையில் கண்டபோது முகம் கொடுத்துப் பேசாத கமலு இன்று மலர்ந்த முகத்தோடு தன்னிடம் பேசுவதைக் காண உண்மையில் சரோஜாவிற்கு வியப்பாகவே இருந்தது. தலைவியின் உத்திரவின்மீது ஒவ்வொருவருக்கும், காபி கொண்டு வந்தாள் கமலு. அதே சமயம் ஹாலுக்குள் நுழைந்தனர் கண்ணனும் ராமுவும். கண்ணனைக் கண்டதும், அன்று கமலுவோடு டாக்ஸியில் சென்ற யுவன் இவனே என்பதைத் தெரிந்து கொண்டான் விசு. அவன் முகம் சுணங்கிற்று.

ராமுவும் வைத்த கண் வாங்காமல் கமலுவைப் பார்த்தான். தலை நிமிர்ந்த கமலு, கண்ணனைக் கண்டு புன்னகை புரிந்தாள். ராமுவை நிமிர்ந்துகூட நோக்கவில்லை. பிறகு உள்ளே போனவள் வெளியே வரவு மில்லை. தலைவி கண்ணனை நோக்கி "கல்பகம் என்ற நாலு பெண்களுக்கும், ராமு என்பவரையாவது, கண்ணன் என்பவரையாவது தெரியாதாம். எதற்கும் உங்கள் சந்தேகத்தைத் தீர்க்க அவர்களை இங்கே வரவழைத்திருக்கிறேன்" என்றாள்.

"இப்பொழுது இங்கிருந்து சென்ற பெண் யார்" என்று கேட்டான் கண்ணன். "அவள் பெயர் கமலு-

...URAI UNIVERSITY LIB...

தாங்கள் ஏதோ பிசகு செய்கிறீர்கள்" என்றாள் தலைவி. "ஆமாம் அவள்தான் கமலு என் சிநேகிதி" எனக்கூடவே கூறினாள் சரோஜா. "என்ன மிஸ்டர் ராமு?" என்று கேட்டான் கண்ணன். "அவள் தன்னைக் கமலு என்று கூறிக்கொள்ளும் காரணம் புலப்படவில்லை. ஆனால் நிச்சயமாய் அவள் கல்பகம்தான்" என்றான் ராமு.

இதுவரையிலும் பேசாமலிருந்த விசு "அப்படியானால் கமலுவை உங்கள் முதல் மனைவி கல்பகமென்று எண்ணுகிறீர்கள், மாப்பிள்ளை?" எனக் கேட்டான்.

"ஆம்! சந்தேக மிருப்பவர்களுக்குக் கல்பகத்தின் போட்டோவைக் காட்டு கண்ணு!" என்றான் ராமு சிறிது கோபத்துடன்.

கண்ணன் சட்டைப் பையிலிருந்து எடுத்த புகைப் படத்தை யாவரும் ஆவலுடன் பிடுங்கிப் பார்த்தார்கள். விசுவுக்கோ கொஞ்சம் நஞ்சம் இருந்த நம்பிக்கையும் போய்விட்டது. அவன் காதல் கொண்ட நங்கை கல்யாணமான பெண். அதுவும் தன் தங்கையின் சக்களத்தி! அவளை மணந்துகொள்ள வேண்டுமென்று மனசால் எண்ணியதுகூடப் பாவமென்று நினைத்தானவன். சரோஜா கூட இப்போது தன்னைப் பற்றி என்ன எண்ணுகிறாளோ என்று நினைக்கையில் அவனால் தலைநிமிர முடியவில்லை. "சிறிது நேரம் வெளியே போய்வருகிறேன்" என்று கூறிப்போய்விட்டான்.

தங்கம்மாள் எதையும் பொறுப்பாள். ஆனால் பொய், பித்தலாட்டத்தை அவளால் பொறுக்கமுடியாது. கல்பகம் என்ற பெண்ணைத் தேடிக் கண்ணனும், ராமுவும் அலைவது அவளுக்குத் தெரிந்தும், தானே அந்தக் கல்பகம் என்று ஏன் அவள் தலைவியிடம் கூறவில்லை? அங்கு போகத் தனக்கு இஷ்டமில்லை யென்பதை ஏன் அவள் தலைவிக்கு ரகசியமாய் அறிவிக்கவில்லை? வீணாகக் கல்பகம் என்ற

பெயருள்ள பெண்களை யெல்லாம் தான் இழுத்துக் கொண்டுவந்து இந்த நாடகம் நடத்தும்படி விடுவானேன்? கோபத்தை யடக்கிக்கொண்டு "கமலூ..." என்றழைத் தாள் தலைவி. கமலு வந்துநின்றாள். "கமலூ! இது யார் படம், பார்!" என அவள் கையில் படத்தைக் கொடுத் தாள் தங்கம்மாள்.

"என்னைப் போலவேதான் இருக்கிறது. ஆனால், சத்தியமாய் இந்தப் படம் என்னுடையது அல்ல." என்று கம்பீரமாய் மொழிந்தாள் கமலு. ராமுவோ, "கல்பகம்! நான் உனக்கு இழைத்த தீமைக்கு நீ இந்தவிதம் வஞ்சம் தீர்த்துக்கொள்கிறாய் என்றே நான் எண்ணுகிறேன். கைப் புண்ணிற்குக் கண்ணாடி ஏன்? என்னுடன் வா இஷ்டமில்லாவிட்டால் கூறிவிடு. ஆனால், நான் உன் கண வன் என்பதை, எப்படி நீ என் மனைவி என்று நான் அறிவேனோ அப்படி நீயும் அறிவாய். அதை இல்லை யென்று மறுதலிக்க உன்னால் முடியாது.

கமலுவால் பொறுக்கமுடியவில்லை. "ஐயா! நீர் யாராய் இருந்தாலும் எனக்கு அதைப்பற்றி அக்கரை யில்லை. நான் உமது மனைவி கல்பகம் அல்லவென்று கூறும் போது, மறுபடியும், மறுபடியும், நீங்கள் அதையே வற்புறுத்துவது உண்மையில் வேடிக்கையாய்த்தான் இருக்கிறது! இதுவரையில் நான் உங்களைக் கண்டதே யில்லை. இதுவே முதல்தடவை, நான் உங்களைப் பார்ப்பது. நான் கமலு என்பதற்கு அத்தாட்சி என் தோழி சரோஜா தான்." இதுவரையிலும் பேசாதிருந்த சரோஜா "ஆம்! எனக்குத் தெரிந்தமட்டில் அவள் பெயர் கமலுதான்" எனக் கூறி அவள் ரயிலிலிருந்து குதிக்க முயன்றதையும் தான் அவளைக் காப்பாற்றியதையும் சுருக்கமாய் கூறினாள்.

"இந்தச் சமாசாரங்களால், அவள் கல்பகம்தானென் பது இன்னும் உறுதிப்படுகிறது. அதுவும் அவள் சரோஜா

வின் தோழியாய் விட்டபடியால், இனிச் சிறிதும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் இதுவரையிலும், நானே சரோஜாவின் கணவன் என்பதை அவள் அறியாள்'' என்று முகத்தில் வெற்றிக்குறி தோன்றக் கூறினான் ராமகிருஷ்ணன். இதைக் கேட்ட கமலுவிற்குச் சிரிப்பு வந்துவிட்டது. "நீங்கள் சரோஜாவின் கணவ ரென்பதை இப்போதே அறிந்தேனாதலால், நான் சிறிது மரியாதைக் குறைவாய் பேசினதற்கு மன்னிப்புக் கேட் கிறேன். ஆனால், அதற்காக நான் கல்பகமாய் மாறிவிட முடியாது. இன்னொரு விஷயம் எனக்கு இன்னும் கல்யாணமு மாகவில்லை......'' இந்தச் சமயம் எல்லோரது கண்களும் அவள் கழுத்தை நோக்கின. ராமுவுக்கோ இதில் ஏதோ சூதிருப்பதாகவே பட்டது. "சரோ! நீ வேணுமானால், அவளைத் தனியே அழைத்துக் கேள்! சிநேகிதி முறையின்றிச் சக்களத்தி முறையில் இருக்க இஷ்டமில்லாமல் கூறுகிறாளோ, என்னவோ?'' என்றான் ராமு. கமலுவைத் தனியே கூப்பிட்டு எவ்வளவோ கூறிப் பார்த்தாள் சரோஜா. ஊஹூம்! முன் சொன்ன தையே தான் சொன்னாள் அவள். சிறிது நேரம் எல்லோ ரும் ஒன்றும் புரியாமல் உட்கார்ந்திருந்தனர். பிறகு ஏதோ நினைத்துக்கொண்டவள் போல் "ஆமாம்! சில வாரங்களுக்கு முன்பு பெங்களூரில், உன்னை ஒரு கடையில் கண்டேனே கமலு! ஏன் என்னிடம் சரிவரப் பேசவே யில்லை நீ?'' என்று கேட்டாள் சரோஜா.

"பெங்களூரிலா?.........என்னம்மா இது?'' எனத் தலைவியைப் பார்த்துக் கூறினாள் கமலு. "ஒன்றைவிட ஒன்று வேடிக்கையாய் இருக்கிறது, சரோஜா! கமலு ஒரு நிமிஷங்கூட இந்த ஊரையும் என்னையும் விட்டு அகன்றவ ளல்ல. ஆம்! ஒருநாள் சினிமாவில் நான் மயங்கி விழுந்துவிட்டேன். அப்போது ஒரேநாள் கமலு

நான் இன்றி ஸேவாஸதனத்தில் தனித்திருந்தாள்'' என்றாள் தலைவி.

"ஆமாம்! அதே சமயம்தான் நான் இப்போது தன்னைக் கமலு வென்று கூறிக்கொள்ளும் இந்தப் பெண் மணியைக் கண்டேன். படத்திலுள்ள ஜாடை தென்படவே 'தங்கள் பெயர் கல்பகமா?' என்று கேட்டேன். 'அப்படித்தான் வைத்துக்கொள்ளுங்கள்' என்று இவர்கள் கூறவே நான் ராமுவிற்குத் தகவல் தெரிவித்தேன் என்றுரைத்தான் கண்ணன். மறுபடியும் எல்லோருக்கும் கமலுவின் மீது சந்தேகம் தட்டிவிட்டது. "அப்போதே நீ சொல்லியிருக்கலாமே, நான் இல்லை அந்த ஆசாமியென்று'' எனக் கேட்டாள் தலைவி.

"ஆம்! அந்த ஒரு பிசகு செய்ததை நான் ஒப்புக் கொள்கிறேன். அதனால் வந்த விளைவுகள்தான் இவை.''

"ஊம்! நீ அப்படிச் சொல்லவேண்டிய காரணம்?'' எனக் கேட்டாள் தலைவி. கமலுவின்மீது அவள் கொண்டிருந்த நம்பிக்கை குறையலாயிற்று. "அம்மா! அது வேறு விஷயம். சில காரணங்களை முன்னிட்டு வெளியிலிருந்து வருபவர்களிடம் கமலுதான் நான் என்று அறிவிக்க எனக் கிஷ்டமில்லை. யாரையோ தேடுகிறார்கள், ஆமாம். என்று சொல்வதில் தப்பு என்ன என்று நான் நினைத்தது முட்டாள் தனம். அதற்காக மன்னிப்புக் கேட்க நான்தயார்.''

"விந்தையிலும் விந்தை! சரி, வா, சரோஜ்! இனி உன் கல்பகத்தைத் தேடும் யோசனையை விட்டு விடு!'' எனக் கசப்புடன் கூறினான் ராமு. கடைசியில் இத்தனை அமர்க்களத்திலும், விசுவிற்குக் கல்யாணம் நிச்சயமாகியிருப்பதை, தலைவியிடம் கூறிவிட்டே சென்றாள் சரோஜா.

கமலு அருகே நின்றிருந்தும் ஏனோ சரோஜா அவளை அழைக்கவில்லை, கல்யாணத்திற்கு!............எல்லோரும்

பேசிக்கொண் டிருக்கையில், நடுவே எழுந்து சென்ற விசுவம் நேரே வீட்டிற்குச் சென்ருன். மன நிம்மதியை இழந்திருந்தானவன். கமலுவை அவன் விரும்புகிருனென்பது சரோஜாவிற்குத் தெரியும். கமலுதான் கல்பகம் என்று அறிந்தபின் அவனுக்கு உயிரையே விட்டு விடலாமா என்றுகூட இருந்தது. ராமகிருஷ்ணனின் முகத்தில் எப்படி விழிப்பான் அவன்? முன்பே ஒருகால் சரோஜா அவரிடம் கூறியிருக்கிருளோ என்னவோ? சிறிது நாள் எங்கேயாவது போய் இருந்துவிட்டு வருவதே நல்லது என்று பட்டது அவன் மனதிற்கு. தன்னறைக்குச் சென்று, ஒரு கடிதம் எழுதினுன். சரோஜாவின் மேல் விலாச மிட்டு அதை அவள் மேஜைமீது வைத்தான். பாட்டி, நல்லவேளையாகக் கோவிலுக்குப் போயிருந்தாள். தாத்தா, பாராயணம் பண்ணிக்கொண் டிருந்தார். கையில் செலவுக்குச் சிறிது பணம் எடுத்துக்கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பினுன் விசு.........

# அத்தியாயம் 11

கல்பகம் மறுபடியும், ராமகிருஷ்ணனைப் போய்ப் பார்க்கவே எண்ணியிருந்தாள். ஆனால், அந்த குளிர் ஒத்துக் கொள்ளாமற் போகவே வனஜாக்ஷிக்கு ஜுரம் வந்து, அவள் திரும்பும்படி யாயிற்று. "சொந்த வீடு வாசலை விட்டு விட்டு, இங்கு ஏன் இருக்கவேண்டும்? கிளம்புவதே நல்லது" என்றாள் வனஜாக்ஷி. வேறு வழியின்றிக் கல்பகம் ஊருக்கு கிளம்பும்படி யாயிற்று. ஊருக்குச் சென்றபின்கூட நாளுக்கு நாள் வனஜாக்ஷியின் உடல் நிலைமை மோசமாகிக் கொண்டுதான் வந்தது. ஒருநாள் அவள் கல்பகத்தைத் தனியே யழைத்து "கமலு! இனி நான் பிழைக்கமாட்டேன். உனக்கு நான் சொல்ல வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அதில் முக்கியமானவற்றை நீ அறிந்து கொள்ளும் பொருட்டு அதற்கு வேண்டிய தஸ்தாவேஜிகளை இதோ இப்பெட்டியில் வைத்திருக்கிறேன். என் சொத்துக்கெல்லாம் நீயே அதிகாரி, ரொக்கமாக உள்ளதற்கும் சரி, மற்றவைகளுக்கும் சரி நான் ஏதாவது உன் மனம் புண் படப் பேசியிருந்தால் என்னை மன்னித்துவிடு..." கல்பகத்தின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. இந்தச் சொற்ப காலத்தில் வனஜாக்ஷியை சிநேகிக்கத் தொடங்கிவிட்டாள் அவள். "அம்மா! இந்தமாதிரி எல்லாம் பேசாதீர்கள் தங்கள் உடம்பு சொஸ்தமாகிவிடும். உங்களுக்குப் பாட்டென்றால் பிடிக்குமே? ரேடியோவைத் திருப்பட்டுமா?" எனப் பேச்சை மாற்றினாள் கல்பகம்.

"உம்! உன் வீணைகானத்தை விடவா ஒரு பாட்டு!" என முனகினாள் வனஜாக்ஷி. தன்னைக் கமலு என்

றெண்ணி வனஜாக்ஷி சொல்லும் வார்த்தைகளைக் கண்டு கல்பகம் மனம் புழுங்கினாள். உடல் நலம் இல்லாதிருக்கும் அவளிடம் மறுபடியும் தன் வரலாற்றைக் கூறி இம்சிக்க வேண்டாமென்று, பேசாமல் திரும்பிப்போய் ரேடியோவைத் திருப்பினாள். நல்ல வேளை, யாரோ வீணைதான் வாசித்தார்கள். அத்துடன் இழைந்து கேட்கும் அந்தக் குரலில்தான் என்ன இனிமை! கல்பகம் பாட்டில் மயங்கி இருக்கும் சமயம், "கமலு, கமலு! என் கண்ணே! நீ இந்தப் பாட்டைப் பாடிக் கேட்டு எவ்வளவு நாளாகிறது! இப்பொழுதாவது இதைப் பாடிக் காட்ட வேண்டுமென்று தோன்றிற்றே உனக்கு!" எனப் படுக்கையில் இருந்தபடி கத்தினாள் வனஜாக்ஷி. "அம்மா, அம்மா!" எனக் கூவிய வண்ணம் கல்பகம் அவளருகே ஓடினாள். ஜுரத்தில் அடிபட்டுக் கிடந்த வனஜாக்ஷிக்கு இப்படிப் பெரிய குரலில் எப்படிக் கத்தமுடிந்தது என்பதே கல்பகத்திற்குப் புரியவில்லை. வனஜாக்ஷி மூச்சைப் பிடித்துக்கொண்டு இரைந்து பேசினாள் போலும். கல்பகம் கூப்பிட்டதற்குப் பதிலே இல்லை! "ஐயோ! விமலா! அம்மாவை வந்து பாரேன்!" என அழுதாள் கல்பகம். யார் வந்து என்ன? வனஜாக்ஷி கமலுவின் கானத்தை கேட்டவாறே இப் பூவுலகை விட்டு விட்டாள்.

* * *

வனஜாக்ஷி இறந்து பதினைந்து நாட்கள் ஆகிவிட்டன. வீடே வெறிச்சென்று கிடந்தது. அவள் இருந்தது வீட்டிற்கே பலமாக இருந்தது. கல்பகம் தன் அறையை விட்டு வெளிவராமல், வருத்தத்தில் மூழ்கிக்கிடந்தாள். வனஜாக்ஷியை மட்டுமல்ல, அவளது வாழ்க்கைச் சம்பவம் ஒவ்வொன்றையும் நினைத்துத் தான் இன்று, ஒரு சீமாட்டிக்குரிய சொத்து அவளுக்கு இருக்கிறது. கேவலம் ஓர் ஆயிரம் ரூபாய்க்காசு இல்லாததினால், அவள் வாழா

வெட்டி யாகும்படியாகப் போயிற்று ஒரு சமயம். அன்றைய நிலைமைக்கும், இன்றைய நிலைமைக்கும் எவ்வளவு வித்தியாசம்! அருமந்தத் தாயார் அலமேலு அம்மாளுக்கு, நல்ல மருந்து வாங்கிக் கொடுக்கவும் யோக்யதை யற்று அன்று தான் இருந்ததையும், சிறுமி ராஜம் தனக்குச் செய்த உதவிகளையும் எண்ணி எண்ணி உருகினாள் கல்பகம். "மறுபடி ராஜத்தை நாம் எங்கு காணப்போகிறோம்? பணம், காசு இல்லாததினால் தானே நாம் இந்த நிலைமையில் இருக்கிறோம் என்று நான் எண்ணியதுபோக, வைத்திருக்கும் பணத்திற்குச் செலவில்லாமல், மனத்திற்கும் சந்துஷ்டியில்லாமல், இப்படி ஒரு காலம் வந்து விட்டதே? நியாயமாய் இத்தனை பணமும் கமலுவைச் சேர்ந்தது. அதைத் தொடவும் எனக்குப் பாத்தியதை கிடையாது. ஆனால் அந்தக் கமலு எங்கே இருக்கிறாளோ? உயிருடன் இருக்கிறாளோ, இல்லையோ? வனஜாக்ஷியின் மொழிகளிலிருந்து கமலு இந்த ஆடம்பர வாழ்க்கையில் வெறுப்படைந்து ஓடிவிட்டதாகத் தெரிகிறது. அப்படிப் பட்டவளை நாம் பேப்பரில் விளம்பரம் செய்து கண்டு பிடிக்கமுடியாது. மேலும் வனஜாக்ஷியின் பெட்டிக்குள் இருந்த கடிதக்கட்டின் மூலம் பல சங்கதிகள் வெளியாகின்றன. ஆகவே, இனிக் கமலுவைக் கண்டு பிடித்தால் மட்டும் போதாது. பழைய வைரியான ரங்கய்யனையும் பழிதீர்க்க வேண்டும். ஹூம்! யாரைப் பழி தீர்த்து என்ன லாபம்? என்மட்டில் நான் வெறும் வாழாவெட்டி கல்பகம் தானே! ஆமாம், வனஜாக்ஷி இறக்கும் அன்று ரேடியோவில் வீணையைக் கேட்டு, கமலுதான் வாசிக்கிறாள் என்றாளே? அது வெறும் பிதற்றலா? இல்லை, உண்மையிலேயே அன்று வாசித்தது கமலுதானோ? அன்று 'ஸேவாஸதன உபாத்தியாயினி, தன் மாணவிகளுடன் வீணை, வாய்ப்பாட்டு' என்று ரேடியோ நிகழ்ச்

சிக் குறிப்பில் போட்டிருந்தது. அப்படியானல் கமலு ஸேவாஸதனத்தில் சேர்ந்து விட்டாளா?" இப்படியாகப் பலவிதச் சிந்தனையில் ஆழ்ந்து மனத்தைக் குழப்பிக் கொண்டிருந்தாள் கல்பகம்.

ஸேவாஸதனத்திலிருந்து நேரே வீட்டிற்குப்போன சரோஜா "பாட்டி! விசு இன்னும் வரவில்லையா?" எனக் கேட்டாள் அம்மணியம்மாளை. "நான் கோயிலுக்குப் போயிருந்தேன். ஜானகி வீட்டைவிட்டுப் போனாலும் போனாள், சமையலுக்குச் சரியானபடி ஆள் கிடைக்கவில்லையே. பழய லக்ஷ்மிப் பாட்டி இருக்கிறாளா என்று விசாரிக்கவே கோவில் பக்கம் போனேன். வந்து விடுவான், எங்கே போகப்போகிறான்? தாம், தூம் என்று இவன் ஜானகியிடம் இரைந்தான். அதனால் அவள் வீட்டைவிட்டே போய்விட்டாள். ஜானகிமாதிரி இருப்பவர்கள் வம்பு அளப்பது சகஜம்தான். கமலுவை இவன் அழைத்துக்கொண்டு வந்ததைப்பற்றி ஜானகி யார் யாரிடமோ என்னென்னமோ சொன்னதாக என் காதிலும் பட்டது. நான் அதை வெளியே காண்பித்துக் கொள்ளாமல் இருந்தேன். இவன் என்னடா என்றால் ஜானகியைக் கன்னாபின்னாவென்று பேசினான். அவள் நீ ஊரிலிருந்து வருவதற்கு முதல் நாள் கிளம்பிவிட்டாள். இப்போது திடீரென்று அவளுக்கு எங்கே போவது? என்னால் வேலை செய்ய முடிகிறதா? இதையெல்லாம் அவன் என் யோசிக்கிறான்? நம் பிள்ளை வயிற்றுப் போனா பெண்வயிற்றுப் போனா பாழ்போகிறது.?" என்று பெரிதாக ஆரம்பித்தாள் பாட்டி.

சரோஜா இந்தச் சமாசாரம் கேட்டது முதல் தடவையாதலால் "என்ன பாட்டி, அப்படி என்றால் விசு என் சொந்த அண்ணா இல்லையா? அவன் செய்கையைப் பார்த்தால், யாரும் அப்படிச் சொல்லமாட்டார்களே?" என்றாள்.

" உன்மீது உயிராகத்தான் இருக்கிறான். யார் இல்லை என்றார்? "

" ஏன், பாட்டி! உனக்காகவும், தாத்தாவிற்காகவும் என்ன வேண்டுமானாலும் பண்ணக்கூடியவனாயிற்றே அவன்? அவன் என் கூடப் பிறந்தவன் இல்லையென்று ஒரு கால் நான் அறிந்த போதிலும் எனக்கு அவன் மீதுள்ள அன்பு குறையாது. நீயே பார், பாட்டி! இப்போது, நீங்கள் அவன் கல்யாணத்திற்கு நிச்சயித்திருக்கிறீர்களே, விசுவத்துக்கு அந்தக் கல்யாணத்தில் இஷ்டமே இல்லை "

" இது என்ன கூத்து?" என்று ஆச்சரியம் தாங்காமல் கேட்டாள் பாட்டி.

" கூத்துமில்லை, நாடகமும் இல்லை. உண்மை. நல்ல வரதக்ஷிணையுடன் நீங்கள் ஓர் இடத்தில் பெண் பார்த்திருக்கையில் அவன் எப்படி அதை மறுதளிப்பான்? நான் மட்டும் அவனைக் கேட்டேன், 'இஷ்டமில்லாவிட்டால் சொல்லிவிடு. ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழ் படுத்திவிடாதே, அண்ணா!' என்று. 'ஊஹூம், பாட்டி, தாத்தாவிற்கு நான் கடமைப் பட்டவன்' என்றான்! இப்பொழுது நீ சொன்னதிலிருந்துதான் எனக்குக் கொஞ்சம் புரிகிறது. அவன் உன் பேரனில்லை, நீ அவனை வளர்த்ததற்கு அவன் தன் கடமை யுணர்ச்சியைக் காட்டுகிறானென்று. ஆனால், பாட்டி, அவனுக்கு இந்த விஷயம் முன்பே தெரிந்திருக்க, எனக்கு மட்டும் நீ ஏன் தெரிவிக்க வில்லை?"

" அடேயப்பா! பெரிய கேள்வியாகப் போடுகிறாயே, சரோஜா! அவனுக்கும், சில வருஷங்களுக்கு முன்புதான் தெரியும். உங்கள் தாத்தா வடக்கே வேலையாய் இருந்தாரோ இல்லையோ? அப்போது, இந்த விசுவின் தகப்பனார், தாத்தாவிற்கு ரொம்பச் சிநேகிதம், ஓர் உயிர்

சூடல் என்பார்களே, அதேமாதிரி. திடீரென்று அங்கே சுற்றுவட்டாரங்களில் 'பிளேக்' பரவிற்று. பிளேக் வந்தவர்களை அப்புறப் படுத்தியதோடு, எங்களை யெல்லாம் 'காம்புக்கு' அனுப்பி விட்டார்கள் சர்க்கார். அந்தப் 'பிளேக்'கில், உன் பெற்றோர், சகோதரன் எல்லாரும் இறந்து போனார்கள். விசுவின் பெற்றோர் சகோதரர் எல்லோரையும் ஆஸ்பத்திரிக்கு அப்புறப்படுத்தும்போது, விசுவின் தகப்பனார், விசுவை எங்களிடம் ஒப்புவித்தார் வெறுமனே கொடுக்கவில்லை. தாங்கள் இறந்து போய் விட்டால், அவன் சம்ரக்ஷணைக்காக வேண்டிய ரொக்கமும் கொடுத்தார். ஆஸ்பத்திரிக்குப் போனவர்கள் திரும்பவே யில்லை. மூன்றே வயதான நீ விசுவத்தை 'அண்ணா, அண்ணா!' என்று அழைக்க ஆரம்பித்தாய். ஏழு வயதான அவனும், தன் சகோதரி யென்றே உன்னை எண்ணி வந்தான்'' எனக்கூறி ஒரு பெருமூச்சு விட்டாள் பாட்டி.

பாட்டி சொல்வதெல்லாம் கதையாகவும், விசுவம் தன்னுடைய அண்ணா என்பதே உண்மையாகவும் பட்டது சரோஜாவின் மனத்திற்கு. வேறு புடவை கட்டிக் கொள்ள தன் அறைக்குச் சென்றவள், அங்கு மேஜை மீதிருந்த கடிதத்தைப் பார்த்தாள். அதில் பின் வருமாறு கண்டிருந்தது.

"சரோஜாவுக்கு,

ஆசீர்வாதம். எனக்கு மனது ஏனோ நிம்மதியில்லாம லிருக்கிறது. கொஞ்ச நாளைக்கு எங்காவது போய் வருகிறேன். எப்படியும் திரும்புவேன். கவலைவேண்டாம். தாத்தா, பாட்டிக்கு என் நமஸ்காரத்தைத் தெரிவி.

உன் அன்புள்ள அண்ணா.''

கடிதத்தைப் படித்து விட்டு தேம்பி தேம்பி அழுதாள் சரோஜா. விசு மறுபடியும் வருவா னென்பது என்ன

நிச்சயம்! 'ஒருகால் வராவிட்டால்'? என்று நினைக்கும் போது, துக்கம் பீறிட்டுக்கொண்டு வந்தது அவளுக்கு.

அம்மணியம்மாள் வீட்டை விட்டுப் போகும்போது ஜானகி வெறுமனே போகவில்லை. "இந்த விசுவத்திற்குக் கல்யாணமாவதைப் பார்த்து விடுகிறேன்!" என்று உள்ளூர உறுமிக்கொண்டேதான் போனாள். விசுவத்திற்கு எந்த ஊரில் பெண் பார்த்திருக்கிறார்கள் என்ற விவரம் அவளுக்கு நன்றாகத் தெரியுமாதலால் ஜானகி நேரே பெண் வீட்டாரின் ஜாகைக்குச் சென்றாள். கல்யாண வீட்டில், அதிகப்படி வேலைகளுக்கு வைத்துக்கொள்ளும் ஆட்களில் ஒருவளாக அமர்ந்து கொண்டாள். சமயம் நேர்ந்தபோது கல்யாணப்பெண் ராஜலக்ஷ்மியிடம் பேச்சுக் கொடுத்தாள். அவளுக்குத் தலைவாரி விடுதல், பூ கட்டிக் கொடுத்தல் முதலிய சில்லரைக் காரியங்களைச் செய்து, அவள் நட்பைப் பெற்றாள் தந்திரம் மிகுந்த ஜானகி.

ஒருநாள் தனியே உட்கார்ந்து ஜானகி, கல்யாணப் பெண்ணின் புடவைகளை மடித்துக் கொண்டிருக்கையில், ராஜலக்ஷ்மி அங்கே வந்து "ஜானகி மாமீ! நீங்கள் பட்டணத்திலிருந்தா வருகிறீர்கள்? நாராயணிப் பாட்டி சொல்லுகிறாளே? அதுவும் நீங்கள் அவர்கள் வீட்டிலே இருந்ததாகச் சொல்லுகிறாளே? ஏன் மாமீ, வந்து விட்டீர்கள்?" எனக் கேட்டவண்ணம் அவளருகே உட்கார்ந்தாள். "ராஜம்! அதெல்லாம் பெரிய கதை. விட்டுத் தள்ளு. வா, தலையைப் பின்னுகிறேன்" எனவும், ராஜம் "ஊஹூம்! நல்லதோ கெடுதலோ எதையும் எனக்குச் சொல்லித்தான் ஆக வேண்டும்" என்று கண்டிப்பாய்க் கூறினாள்.

"ராஜம்! நானோ கேவலம் வேலை செய்ய வந்தவள். அவர்களோ பெரிய மனுஷர்கள். உங்களுக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் வேறே நடக்கப் போகிறது. இப்படி

யிருக்க, நான் ஏதாவது சொல்லி வைத்தால், வீணாய் என் பெயர் அடிபடும்...''

இந்தச் சமயத்தில், "என்ன விஷயம் ஜானகி?'' என்று கேட்டவண்ணம் வந்து விட்டாள் ராஜத்தின் அத்தை. ராஜத்திற்குத் தாயார் இல்லை. தகப்பனார் வேறு கல்யாணம் செய்து கொண்டு விடவே, அத்தைதான் அவளை எடுத்து வளர்த்தாள். "ஒன்றுமில்லை யம்மா!...'' எனத் தயங்கினாள் ஜானகி. "கேட்டுக் கொண்டேதான் வந்தேன். என்னவோ சம்பந்தி வீட்டுப் பேச்சாகப் பட்டது. என்ன சங்கதி, சொல்லேன்...'' என்று அத்தை விடாமல் கேட்டாள். "என்னவோ, அம்மா! ராஜம் தாயில்லாப்பெண். எனக்கும் இந்த நாலைந்து நாள் பழக்கத்திலே அவளிடம் ஆசை பிறந்து விட்டது...'' என்று மெதுவாக ஆரம்பித்தாள் ஜானகி.

"ஊம்! சொல்லவந்ததைச் சொல்லி விடு'' என்று உத்தரவிடுவதுபோல் கூறினாள் அத்தை.

"நீங்கள்கூடக் கேள்வி பட்டிருப்பீர்கள். உங்கள் மாப்பிள்ளையாகப் போகும் விசுவம்...அவர்...நடத்தை கொஞ்சம் ஒருமாதிரி...''

"அப்படி என்றால்...?''

"அம்மா! நான் இதைச் சொல்வதே தப்பு! அவர்கள் வீட்டு உப்பைக் கொஞ்ச நாள் தின்றிருக்கிறேன், பாருங்கள். இருந்தாலும், ராஜத்தின் சமத்தையும், குணத்தையும், பார்க்கும்போது...''

'விஷயத்தைச் சொல்லித் தொலைக்காமல்,என்ன இது?' என்று கத்தினாள் கோபக்காரியான அத்தை. "நீங்கள் நாலு இடத்தில் விசாரித்துப் பாருங்கள். விசுவம், கமலு என்ற ஒரு பெண்ணை அழைத்து வீட்டில் வைத்திருக்கிறாரா இல்லையா என்று...ஆமாம் அந்த கண்றாவியை யெல்லாம் காணச் சகியாமல்தான் நான் வந்துவிட்டேன். நமக்

...தேன் பாடு என்றுதான் இருந்தேன். அப்புறம் வரவர அங்கு நடக்கும் அட்டகாசம், வீட்டு எஜமானியே கமலு என்கிறமாதிரி ஆகிவிட்டது. தலையெழுத்து, வேலை செய்து தான் சாப்பிட வேண்டும் என்று இருக்கும்போது நமக்கு இங்கே என்ன என்று கிளம்பிவிட்டேன். ஊரெல்லாம் இந்த விஷயம் தெரிந்திருக்க, உன்னால் தான் வெளியே தெரிந்தது, உன்னைத் தவிர மற்றவர்கள இதை எப்படி அறிந்தார்கள்? என்றெல்லாம் என்னைக் கேட்டு, கையைக் கூட ஓங்கிவிட்டார் விசுவம். இந்தப் பாழும் நாக்கால் இன்றைக்குத்தான் இந்த விஷயத்தை வெளியில் சொன்னேன்...'' எனக் கூறிக் கண்ணைத் துடைத்துக் கொண்டாள் ஜானகி. 'ஊம்,' என்று முனகிவிட்டுச் சிந்தனையிலாழ்ந்தாள் அத்தை. அன்றே சென்னையிலுள்ள தன் உறவினர்களுக்கு இந்த விஷயத்தைத் தீர விசாரிக்கும்படி ஓர் கடிதமும் எழுதிவிட்டாள்.

## அத்தியாயம் 12

விசு மறுபடியும் வருகிறானோ இல்லையோ என்று சரோஜா பயந்தது உண்மையாயிற்று. நாட்கள் வாரங்களாயின. கல்யாணத் தேதிக்கு இன்னும் பதினைந்து தினங்களே பாக்கி. அச்சமயம் பெண் வீட்டாரிடமிருந்து வந்த கடிதம், அம்மணியம்மாளையும், பரமசிவ அய்யரையும் தூக்கிவாரிப் போட்டது.

"பலவிதக் காரணங்களை முன்னிட்டு, தங்கள் பேரனுக்கு ராஜலக்ஷ்மியைக் கொடுப்பதென்பதை நிறுத்தும்படியாக இருக்கிறது. இதற்கு மேல் நான் காரணங்கள் எழுதினால் நன்றாய் இருக்காது.

இப்படிக்கு
ரகுராமன்"

என்று ராஜலக்ஷ்மியின் மாமா எழுதியிருந்தார். கல்யாணம் நிச்சயமாகி யிருக்கையில், விசு காணாமற் போனது ஒரு பக்கம் இருக்க, நல்ல இடத்துச் சம்பந்தம் கை நழுவிப் போகிறது. நாளை மறுநாள் இருக்கிற முகூர்த்தத்தைத் தள்ளி வைக்கவும் வகையின்றி நின்றது. பிள்ளை வீட்டுக்காரர்கள் கல்யாணத்தை நிறுத்துவதுதான் வழக்கம். பெண் வீட்டார் பார்த்து வேண்டாமென்றால்! "ராஸ்கல்! நேற்றுப் பயல் ரகுராமன்! கல்யாணப் பேச்சுப் பேசுகையில் அறிவில்லையா அவனுக்கு! என்னடா காரணம் என்று எழுதுகிறேன் பாரு" என்று உறுமினார் பரமசிவம். ஆமாம்! அந்தச் சமயம் அவர் ருத்ர மூர்த்தியாகத்தான் விளங்கினார்.

"இதோ பாருங்கள்! முதலாவது, நம் வீட்டுக் குழந்தையையே காணோம். ஒரு நாள் வெளிச் சாப்பாடு, சாப்பிட்டு வழக்க மில்லாதவன். கல்யாணம் நிச்சயமானால் மட்டும், பிள்ளையைக் காணோ மென்றால் அவமான மில்லையா? அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள இவனுக்கு இஷ்டமே யில்லையாம், சரோஜா சொல்லுகிறாள். ரகுராமன் சொல்லியா நம் பெயர் கெட்டு விடப் போகிறது? மேலும், அந்த ராஜலக்ஷ்மியின் பெயரை எடுக்கும்போதே, நமக்குச் சகுனம் சரியாக இல்லை. தள்ளுங்கள் சனியனை!" என்று அவரைச் சமாதானம் செய்தாள் அம்மணியம்மாள். ராமுவுக்கு விடுமுறை நாட்கள் கழிந்துவிட்டன. ஏற்கெனவே கல்பகத்தைப் போய்ப் பார்த்து அவள் தன்னை உதாசீனமாகப் பேசி விட்டாளே என்று அவமான மடைந்து கிடந்தான் அவன். கல்யாணம் நடக்கும், சிறிது குஷியாகப் பொழுதைக் கழிக்கலா மென்று எதிர் பார்த்ததும் வீணாயிற்று. வேறு வழியின்றி, சரோஜாவும் கணவனுடன் பெங்களூருக்குக் கிளம்பினாள். அம்மணியம்மாளின் உடைந்த மனத்திற்குச் சரோஜா எவ்வளவோ தேறுதல்கள் சொன்னாள். சரோஜா ஊருக்குக் கிளம்புகிற அன்று ஒரு சமையற்காரப் பாட்டியும் வந்து சேர்ந்தாள்..........

விசுவுக்குக் கல்யாணம் என்று கேள்விப் பட்டது முதற் கொண்டு கமலுவிற்குமன நிம்மதியே இல்லை. வனஜாக்ஷியின் வீட்டிற்கு, சினிமா விஷயமாகப் பேசுவதற்கு எவ்வளவோ ஆடவர்கள் வருவார்களே; திரை மறைவிலிருந்து அவர்களைக்கமலு பார்த்துத்தான் இருக்கிறாள். அவர்கள் ஒருவரிடமும் அவள் மனம் சென்றதில்லை. முதல் முதல் விசுவைக் கண்டபோதே, அவள் மனம் அவன்பால் சென்றது. எவ்வளவோ மனத்தையடக்கிப் பார்த்தும், இப்பொழுதும், அவனுக்கு வேறொரு

வாழ்க்கைத் துணைவி வரச் சித்தமாய் இருக்கிறு ளென்று தெரிந்தும், கட்டுக்கடங்காது போகும் மனோ வேகத்தை யடக்க அவளால் முடியவில்லை. தன்னை யறியாமல் 'விசுவம்' 'விசுவம்' என்ற நாமஸ்மரணையைச் செய்துகொண்டிருந்தாள் அவள். தன்னுடைய பிறப்பு வளர்ப்பைப் பற்றி ஒன்றும் அவளுக்குத் தெரியாது. தான் வனஜாக்ஷியின் வளர்ப்புப் பெண்ணென்றும், பிராமணகுல மென்றும் மட்டும் அறிவாள் அவள். வனஜாக்ஷியின் வீட்டில், விமலா வென்ற பிராமணப் பெண்ணைச் சமையலுக்கு அமர்த்தினது கமலுவிற்காகத்தான். தற்சமயம் சரோஜா தன் மீது மிகக் கோபமாய் இருக்கிறு ளென்பது அன்று சரோஜா விசுவத்தின் கல்யாணத்திற்குத் தன்னை யழைக்ககாம லிருந்ததி லிருந்து கண்டுகொண்டாள் கமலு. "சரோஜாவின் கணவனை ஒரு பைத்தியக்காரனுக்குத் தான் ஒப்பிட வேண்டும்! எவளோ ஒருவளைப் பார்த்து நீதான் என் மனைவி என்பதாம், அவள் ஒப்புக்கொள்ளா விட்டால் கோபித்துக் கொள்ளுவதாம்! வெகு அழகு! நான் செய்த பாபம்தான், அவன் மனைவிக்கும் எனக்கும் முகஜாடை ஒன்று யிருக்கிறது. இது இவ்வளவு தூரம் வருமென் றறிந்தால், ஒருகாலும் அன்று என் பெயரை மாற்றிக் கூறி யிருக்கமாட்டேன். வனஜாக்ஷியிடம் அகப்பட்டுக் கொள்ளாம லிருக்க வேண்டி, நான் ஒரு பொய் சொல்லப்போக, அதைவிடப் பெரிய இக்கட்டில் அல்லவா இது என்னை இப்போது மாட்டிவிட்டது? உண்மையான கல்பகம் அகப்படும் வரையில், சரோஜா—என் விசுவம்கூட—என்னைப் பற்றித் தப்பாகத் தானே எண்ண ஹேதுவாகும்" என்று ஏதேதோ எண்ணினுள் அவள். அவர்கள் வீட்டில் இருக்கையில், விசுவம் பேசிய சில வார்த்தைகளை எண்ணி எண்ணிப் பார்த்தாள் கமலு. ஸேவாஸதனத்தில் கமலுவைக்

கொண்டு விடுவதற்கு முதல்நாள் "கமலு! உன்னை அங்கே விடுவதற்கு எனக்கிஷ்டமே இல்லை. கை ஒடிந் தாற்போல் இருக்கிறது இப்போது என் நிலைமை. கமலு ஒரு நிமிஷமும் உன்னை மறக்க மாட்டேன் நான்" என்று விசு சொன்னதை எண்ணி சதா அதுவே தியானமாய் இருந்தாள் கமலு.

பாழாய்ப் போன கல்பகம் என்னு மொருவளால், சரோஜா, விசு, இவர்களின் அரிய நட்பை அவள் இழந்து விட்டாள். "ஆம்! கட்டாயம் சரோஜாவும், அவள் கணவனும், விசுவிடம் கமலுதான் கல்பகம் என்று கூறி யிருப்பார்கள். விசுவிற்குக் கல்யாண மாகிவிட்டபோதி லும், இதன் மூலம் அவனுக்கு நம்மிட மிருந்த மதிப்பு அவ னுக்குப் போய்விடும். கல்யாணம் கட்டாயம் ஆகத்தான் போகிறது. அப்படி யிருக்க அவனுடைய மதிப்பு நமக் கெதற்கு என்று எண்ண இந்தப் பாழும் மனம் இடங் கொடுக்கல்லையே? எந்த வேளையில் வனஜாக்ஷியைப் பிரிந் தேனோ தெரியவில்லை. ஏதோ சினிமா முதலிய தொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும், நம்மிடம் மிக வாஞ்சையாக இருந்தாள். பாவம், விசுவிடம் அன்பு வைத்து அந்த அன்பிற்குப் பங்கம் ஏற்படுகையில்தானே தெரிகிறது, நம் மிடம் பிரியம் வைத்த வனஜாக்ஷியின் மனம் எப்பாடு படு மென்று? என்னுடைய நன்றிகெட்ட தனத்திற்கு இது வேண்டும். அன்று நான் உயிர்தப்பச் செய்த அதே விசுவத்தின் பொருட்டு இனி நான் இறக்கவும் தயார். ஆனால், அவருக்கு நான் உண்மையில்கல்யாண மாகாதவ ளென்பதையும், கல்பகம் என்பவளைப் பற்றித் தனக்கு ஒன்றுமே தெரியாதென்பதையும், எப்படியாவது ருசுப் பித்து விடவேண்டும்" என்று பலவிதச் சிந்தனையில் இரவை நித்திரையின்றிக் கழித்தாள் கமலு. தன்னைக் கல்பக மென்று சரோஜாவின் கணவன் கூறியதால்,

சரோஜா, விசு, இவர்களின் நட்பை இழந்தது மட்டு மில்லாமல், கமலு தன் தலைவியின் அன்பையும் சிறிது இழக்க வேண்டி வந்தது. இதை எண்ணி எண்ணி வருந்தி னாள் அவள். சே! ஸேவாஸதனத்திற்கு அவள் வந்த புதிதில் அவளுக்கு ஏற்பட்ட மதிப்பென்ன? தற்சமயம் அங்குள்ள மாணவிகளும், ஏன் உபாத்தியாயினிகளும் கூட, அவளை ஒரு விதமாகப் பார்க்கும்படி அல்லவா ஆகி விட்டது? அன்று கல்பக மென்ற பெயருடன் வந்த நான்கு மாணவிகளும் விஷயத்தைப் பலரிடம் சொல்ல. அங்கு மூலைக்கு மூலை இவளைப்பற்றி குசுகுசு வென்று பேச..., 'சரி, சரி, இனித் தலைவியிடம் உள்ளதைக் கூறி விடவேண்டும். என்ன ஆனாலும் ஆகட்டும்!' எனத் தீர்மானித்தவளாய்க் கமலு தலைவியின் அறைக்குச் சென் றாள். தலைவி தனியே இருந்ததால், ஒரு விஷயம் பாக்கி யின்றித் தான் வனஜாக்ஷியுடன் வசித்தது முதற்கொண்டு எல்லாவற்றையும் விவரமாகக் கூறினாள். திருச்சியில் தன் வீட்டு விலாசத்தையும் கூறினாள்.

தலைவி நல்ல புத்திசாலி. "கமலு வருத்தப்படாதே யம்மா! சில சமயங்களில், நாம் எவ்வளவோ சரியான பாதையில் நடந்தும், நம்மைப் பிறர் பழி கூறும்படி ஆகி விடுகிறது. எதற்கும் இனி நாம் சும்மா இருக்கக் கூடாது. ஒருகால் வனஜாக்ஷி உன்னைத் தேடி வந்தாலும், அதற்குத் தகுந்த பதில் நான் சொல்லுகிறேன். நாளைக்கு நம் ஸேவாஸதனப் பெண்கள் ரேடியோவில் பாடப் போகி றார்கள். அதில் நீயும் கலந்துகொள். ஆமாம். தயக்கம் வேண்டாம். வனஜாக்ஷியிடம் ரேடியோ இருக்கிற தல்லவா? உன் பாட்டைக் கேட்கட்டும அவள்" என் றாள் அவள். சிறிது யோசித்து விட்டு', ஆகட்டும் அம்மா!'' என்றாள் கமலு. அப்படியே, அவள் பாடிய தைத்தான் வனஜாக்ஷி இறப்பதற்கு முன்பு கேட்டாள்.

ஸேவாஸதனத் தலைவி தங்கம்மாள் இதற்குப் பிறகு சும்மா யிருக்கவில்லை. சரோஜாவிற்கு ஒரு கடிதம் எழுதினாள். அதில் கமலு கல்பகம் அல்ல என்பது நிச்சயமென்றும், அவள் யார் என்பதை இப்பொழுது அறிவிப்பது உசிதமல்ல வென்றும் எழுதியிருந்தாள். அதற்குச் சரோஜா எழுதிய பதிலில், "விசுவின் கல்யாணம் நின்று போனது, விசு ஊரைவிட்டுப் போனது எல்லாவற்றையும் எழுதிவிட்டு, கமலுவைத் தான் சந்தேகித்ததற்குத் தன் வருத்தத்தையும் தெரிவித்திருந்தாள். சரோஜா ஊருக்கு கிளம்பிப் போகுமுன் தான் அவசரமாக ஊருக்குக் கிளம்புவதாகச் சொல்லியனுப்பி யிருக்கவேதான் தங்கம்மாளுக்கு அவள் ஊரில் இல்லாதது தெரியும்' கல்யாணத் தேதியை ஒத்தி வைத்திருப்பார்க ளென்று அப்பொழுது அவள் எண்ணினாள். விசு எங்கோ போய்விட்டா னென்று அறிந்ததும் கமலுவின் மனது பின்னும் குழம்பிற்று. விசுவிற்கு இந்த விஷயங்கள் முழுவதும் தெரியாதென்பது அவளுக்கு எப்படித் தெரியும்?

## அத்தியாயம் 13

வீட்டை விட்டுக் கிளம்பிய விசுவத்திற்கு, முதலில் எங்கு போவது என்ற யோசனையே இல்லை. ரயிலடிக்குச் சென்றான். டிக்கட் வாங்குமிடத்தில், கூட்டத்தோடு கூட்டமாக நின்று கொண்டு ஏதோ சிந்தனையில் மனத்தைச் சிதறவிட்டுக் கொண் டிருக்கையில் "ஸார்! எந்த ஊருக்கு டிக்கட்" என்று அதட்டும் குரலில் கேட்டான் டிக்கட் கொடுக்கும் குமாஸ்தா. அதேசமயம் யாரோ விசுவத்தை இடித்துத் தள்ளிக் கொண்டு "ஸார்! திருச்சிக்கு இரண்டு டிக்கெட் என்று கத்தவே விசுவமும், "திருச்சிக்கு ஒரு டிக்கெட்!" என்று கூறி வைத்தான். ரயிலில் உட்கார்ந்த பின்பே அவன் தான் ஏன் இப்படி ஓடுகிறோம் தனக்குப் புத்தி ஸ்வாதீனமில்லையா என்ன என்றெல்லாம்' எண்ணமிடத் தொடங்கினான். பாட்டி அம்மணியம்மாள் தன்னைப்பற்றி என்ன எண்ணுவாள்? "ஸேவாஸதனத்தில் நடந்த விஷயங்களைப் பற்றிச் சரோஜா பாட்டியிடம் கூறினாளோ, இல்லையோ? நல்ல வேளை! கடிதம் எழுதிவைத்து விட்டு வந்தேனே? முன்பே கமலுவின் குணத்தில் சந்தேகப் பட்டேன். அந்தக் கமலுவுடன் நட்புப் பாராட்டும் கண்ணன், ராமுவோடு வந்திருப்பது நல்ல வேடிக்கையாகத்தான் இருக்கிறது! மொத்தத்தில், அவள் கமலுவோ கல்பகமோ, யாராயிருந்தாலும், நடத்தை சுத்தமில்லையென்றுதான் எண்ணவேண்டும். ஆனால், தன் கணவன் வந்து கூப்பிடுகையில் அவள் போகாத காரணம் என்ன? ராமுவிற்குத் தன் மனைவியை அடையாளம் தெரியாது. ஏற்கெனவே தனக்கு விவாகமாகி யிருப்பதை அவள் ஏன் என்னிடம் கூறவில்லை? நானும் கேட்காமல்

போனேன். பேசாமல் நாலு நாட்களில் ஊருக்குப்போய், ராஜத்தை மணந்துகொள்ள வேண்டியதுதான். அப்போது, பாட்டியின் மனமாவது குளிரும். ஹும்! ராமுவைக் குற்றம் சொல்லி என்ன பயன்? உண்மையில், அவள் நடத்தையில் சந்தேகப்பட்டுத்தானே அவன் சரோஜாவை மணந்தது? அந்த நிலைமையில் நான் இருந்தாலும் அப்படித்தான் செய்திருப்பேன். கமலு பார்ப்பதற்கு எவ்வளவு நல்லவளாய்க் காணப்படுகிருள்! அப்பா! விஷஸர்ப்பம்! அவளைப்பற்றி என்னதான் கெடுதலாக எண்ணினபோதும், அவள் முகம் கண்ணெதிரே வந்து நிற்கிறதே! அந்த எண்ணத்தைப் போக்கடித்தாலல்லாது நான் ராமுவிற்குத் துரோகம் செய்தவன் ஆவேன்? தெய்வமே! ஏன் அப் பெண்ணை எங்களிடம் சேர்ப்பித்தாய்? இப்பாழும் மனத்தால், அவளை ஏன் நினைக்கச் செய்தாய்? என்று பலவிதமாய் நினைத்தவாறு கண்ணயர்ந்தான் விசு.

விழித்திருக்கையில் யாரை மறக்க முயல்கிருேமோ, அவர்களைக் கட்டாயம் சொப்பனத்தில் சந்திப்பது சகஜம். கண்ணை மூடிய விசுவிற்கு, அருகாமையிலேயே இருந்தாள் கமலு. அச்சமயம் அவளே கல்பகம் என்ற எண்ணம் ஒன்றும் அவனுக்கில்லை. திடுக்கிட்டு எழுந்திருக்கையில், ரயில் திருச்சி ஜங்ஷனில் நின்றது. இறங்கி, பேசாது நடந்தான். ஆமாம், கால்போன போக்கில்தான் 'பூம், பூம்!' என்று மோட்டார் ஹாரன் அடித்ததுகூட அவன் காதில் விழவில்லை.

அடுத்த நிமிஷம் மோட்டார் அவன் மீது மோதியது.

விசுவம் கண்ணைத் திறந்தபோது, "காயம் ஒன்றுமில்லை வெறும் அதிர்ச்சிதான்!" என்று யாரோ சொல்வது அவன் காதில் விழுந்தது. எதையோ நினைவிற்குக் கொண்டு வர முயற்சித்தான். முடியவில்லை. மறுபடியும் மயக்கத்தில் ஆழ்ந்தான்.

ராஜம் விசுவத்தை நேரில் பார்த்திராவிட்டாலும் படத்தில் பார்த்திருக்கிருள். நல்ல களை பொருந்திய கம்பீரமான முகம் அது என்பது ராஜத்தின் அபிப்பிராயம். ஜானகி சொன்னதை நம்பிக்கொண்டு தன் வீட்டார் விசுவின் வீட்டாருக்குக் கடிதமெழுதியது அவளுக்குப் பிடிக்கவில்லை. பல காரணங்களினுல், ஜானகி வம்புக்காரி யென்பதை அவள் அறிந்துவிட்டாள். ராஜத்தின் அத்தையோ "ஜானகி சொன்னது சரியாய்ப்" போயிற்று! சென்னையில் பலபேருக்கு எழுதிக் கேட்டேன். அவள் சொன்னபடிதான் சொல்கிருர்கள். நல்ல வேளை கழுத்திலே தாலி ஏறுவதற்கு முன்பே சொன்னுளே, ஜானகி" என்று ஜானகியைப் புகழ்ந்தாள். ராஜத்திற்கு மட்டும் உள்ளூர ஜானகியின் மீது வெறுப்புத் தட்டியது. ராஜத்தின் அத்தை தற்சமயம் திருச்சியில் இருந்தபடியால், ராஜமும் அங்கேதான் இருந்தாள். கல்யாணம் நின்றுவிட்டபடியால், சில புடவைகளைக் கடையில் திருப்பிக் கொடுத்துவிட ராஜத்துடன் ஜானகியைக் கூட்டி அனுப்பினுள் அத்தை. ராஜத்திற்கு இது இஷ்டமில்லை. வேறு வழியின்றி நடந்தாள் அவளுடன். அப்பொழுது திடீரென ஜானகி "அதோ பார்! அந்த வீட்டு மாடியில்! அவன்தான் விசுவம்" என்ருள். விசுவம் இவர்களைக் கவனிக்கவில்லை. "இந்த ஊருக்கு எதற்கு வந்தானே தெரியவில்லை" எனத் தானுகவே கூறிக்கொண்டாள் ஜானகி.

மறுநாள் மறுபடி அதே கடைக்குச் சென்றபோதும், ஜானகியின் திருஷ்டி மாடிமீது விழுந்தது. அப்போது அவள் உடம்பைக் குலுக்கிக்கொண்டு, ராஜம்! நான் உன் கல்யாணத்தை நிறுத்தினதில் உனக்கு என்மீது கொஞ்சம் மனஸ்தாபம் தானென்று எனக்குத் தெரியும். நல்ல வேளை சுவாமியாக இதையெல்லாம் உனக்கு காட்டு

கிருர். நேற்று விசுவம் நின்ற இடத்தில் இன்றைக்கு யார் நிற்கிருர், பார்! அவள்தான் கமலு'' எனவும் பெண் களுக் குரிய ஆவலால் தூண்டப்பட்ட ராஜம் நிமிர்ந்து நோக்கினள். மறு நிமிஷம் ஆச்சர்யத்தால் வாயடைத் துப் போய்விட்டாள் அவள். எந்தக் கல்பகத்தைக் கற்பிற் சிறந்த உத்தமி என்று அவள் எண்ணியிருந் தாளோ, அவளேயே அங்கு கண்டாள். அப்படியாயின், கல்பகம் இவ்வளவு கீழ்மையான ஸ்திதிக்கா வந்துவிட் டாள்? 'கல்பக மாமீ!' என்று இரைந்து கத்த ஆசைதான் அவளுக்கு. ஜானகி வீட்டில் போய் ஏதாவது உளறிஞல் என்ன செய்வது என்று பயப்பட்டாள். கல்பகத்தின் திருஷ்டி வேறெங்கோ இருந்தது. அவள் இவர்களேப் பார்க்கவே யில்லே.

* * *

விசுவத்தின் மீது மோட்டார் நன்ருக மோதியிருக்கு மாஞல், அவன் உயிர் தப்பியிராது. டிரைவரின் சாமர்த்தி யத்திஞல், காயம்கூட இல்லாது அவன் தப்பிஞன். ஆயி னும் அதிர்ச்சி அதிகமாய் இருந்தது. "வெறுமனே மயக்கத்தில் இருக்கிருர். ஆஸ்பத்திரிக்கு ஏன் போக வேண்டும்? நம் வீட்டிற்கே கொண்டுபோய், நாளேக்குத் திருப்பி அனுப்பிவிட்டால் என்ன, கமலு அம்மா?'' என்று வண்டிக்குள் திகைத்து உட்கார்ந்திருந்த எஜமானி யம்மாளேக் கேட்டான் டிரைவர். "எப்படி உசிதமோ செய்!'' என்று எஜமானி கீழே இறங்கிஞள். "நல்ல வேளே தெருவில் நடமாட்டமில்லாம லிருக்கிறது. இவ் வழியே அதிகமாய் யாரும் வருவதில்லே என்னவோ ஹார்ன் போடப் போடக் கவனியாது வந்தார் இவர்!'' எனக் கூறியவண்ணம் விசுவத்தைத் தூக்கிக் காரின் பின் ஸீட்டில் படுக்க வைத்தான் டிரைவர். "நீங்கள் எப்படி அம்மா வருவீர்கள்?'' என்று கேட்டதற்கு

எஜமானி, "நான் மெள்ள நடந்து வந்துவிடுவேன், இல்லாவிடில், வண்டி ஏதாவது வராதா? ஏறிக்கொள்கிறேன்" என்றாள். "இல்லையம்மா!" எனத் தயங்கினான் மோட்டாரோட்டி. "நீ பயப்படாதே, துரைசாமி! மறுபடி பழையபடி ஓடிவிடமாட்டேன்!" என்றாள் அவள்.

டிரைவர் மோட்டாரை வீட்டிற்குத் திருப்பினான். "இந்தச் சனியன் பிடித்த மோட்டார் பிரயாணம் போதும் நமக்கு! விற்றுத் தொலைத்துவிட வேண்டியதுதான் இதை" என முணுமுணுத்தவாறு நடந்தாள் எஜமானி மோட்டார் காரி.

* * *

துரைசாமி சொன்னதுபோல் அடுத்த நாளே விசுவத்திற்கு உடம்பு குணமாகிவிடவில்லை. அவனுக்கு வேண்டியதை விமலா ரொம்ப அக்கரையாய்ச் செய்துகொண்டிருந்தாள். வீட்டு எஜமானி கல்பகம் அவ்வப்பொழுது "எப்படியிருக்கிறார்?" என்று கேட்பதோடு சரி. "பாவம்! யார் வீட்டுப் பிள்ளையோ, என்னவோ?" எனக் கல்பகம் வருந்தினாள். விமலாவின் விஷயம் வேறு விதமாக இருந்தது. விசுவம் கண்ணயர்ந்திருக்கையில், பக்கத்தில் உட்கார்ந்து அவனையே கவனிக்கலானாள் அவள். ஆகவே, முதல் முதலாய் விசுவம் நல்ல நிலைமையில் பேச ஆரம்பிக்கையில் விமலாவைத்தான் கண்டான். "அம்மா! நீங்கள் யார்?" எனக் கேட்டான் அவளை. "ஐயா நான் இந்த வீட்டு எஜமானியின் தோழி. இது கமலு அம்மாளின் வீடு..." என்றாள் விமலா. "என்ன?" என்று திடுக்கிட்டுக் கேட்டான் விசுவம். அவனுக்கிருந்த மன அதிர்ச்சியில், 'கமலு' என்றாலே, அவனுடைய பழைய காதலி கமலுவாகத்தான் தோன்றிற்று. "அவளை விட்டுவிட்டு இவ்வளவு தூரம் வந்தும், கனவிலும், நனவிலும் தன்னை இம்சிக்கும் அந்தக் கமலு என்ன பேயா பிசாசா? பெண்

உருவம் தாங்கி வந்த பிசாசாகத்தான் அவள் இருக்க வேண்டும். இல்லாவிடில் சென்னையிலும் இங்கும் ஒரே சமயத்தில் இருப்பாளா ?'' என்ற நினைப்பு எழவே மறுபடி மூர்ச்சையானான்.

அடுத்த தடவை அவன் கண் விழிக்கும்போது, எதிரில் மாட்டியிருந்தது, கமலுவின் புகைப்படம்! அதே பெயருள்ள வேறு யாரோ என்று அவன் சந்தேகிக்கக் கூட இடமில்லை. சாக்ஷாத் அவள்தான்! ஹூம்! இந்த இடத்தைவிட்டுக் கிளம்ப வேண்டியதுதான் என்று எழுந்தான். பலஹீனத்தால், மறுபடி படுக்கையில் சாய்ந்துவிட்டான்.

இதேமாதிரி நிலைமையில் ஒரு வாரமாயிற்று, அவன் சற்று எழுந்து நடமாட. இந்த ஒரு வாரத்தில், விமலு அவன்மேல் காதல் கனிந்த அன்பைக் கொட்டத் தொடங்கி விட்டாள். அப் பெண் தனக்குச் செய்யும் பணிவிடையைக் கண்டு ஆனந்தம் கொண்ட விசுவம் ''அம்மா! உன் பெயரென்ன? விமலுவா! நல்ல அழகான பெயர். உண்மையில் நீ எனக்காக வெகு கஷ்டப்பட்டிருப்பாய். என்னால் கூடுமானால் அதற்குப் பிரதியுபகாரமாய்...'' என்று முடிக்குமுன்,

''அப்படி எல்லாம் சொல்லாதீர்கள்'' என்று தலையைக் குனிந்தவாறு கூறினாள் அவள்.

''என் கையில் இப்போது இந்த மோதிரம்தான் இருக்கிறது.''

விமலுவுக்கோ ஓர் ஆசை பிறந்தது. அவரது ஞாபகார்த்தமாய் அந்த மோதிரத்தை வாங்கிக்கொண்டால் என்ன? "இதோ! இதைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கழற்றி வைத்தான் விசுவம். அப்போதே மாடியறைக்கு வந்த கல்பகம் தூரத்திலிருந்து இதைப்பார்த்தும், பாராதவள்போல் இறங்கிப் போய்விட்டாள்.

மறுநாள் விசுவம் வெளித் தாழ்வாரத்தில், ஈஸிசேரில் சாய்ந்திருந்தவன், எழுந்து சிறிது நடமாடத் தொடங்கினன். அச்சமயம்தான் ஜானகி அவனைப் பார்த்து, ராஜத்திற்கும் காட்டியது. அதற்கடுத்த நாள் விசுவம் அங்கிருந்து கிளம்பிவிட்டான். பின்பே கல்பகம் தைரியமாய் மாடி அறைக்கு வரத்தொடங்கினுள். ஆகவே ராஜம் கல்பகத்தை மாடியில் கண்டதில் ஆச்சரியமில்லை.

விசுவம் அங்கிருந்தவரையில் எவ்வளவு முயன்றும், வீட்டு எஜமானியைக் காண முடியவில்லை. "எஜமானி எல்லார் எதிரிலும் வரமாட்டார்கள்" என்று விமலு கூறும்போது விசுவத்திற்குச் சிரிப்புத்தான் வந்தது. "அடேயப்பா! எப்படிப்பட்ட பதிவிரதை!" என்று ஏளனமாய் எண்ணிக்கொண்டான். அவனுக்குக் கமலு இங்கே வந்து இருப்பது, மோட்டார் முதலிய தர்பாருடன் மோட்டி வேஷம் போடுவது, இவை யெல்லாம் என்ன வென்று புரியவில்லை. "இருக்கட்டும் நேரே ஊருக்குப் போவோம். அங்கே ஸேவாஸதனத்தில் கமலு இருக்கிருளா யில்லையா என்று பார்த்து, அந்தக் கமலுவுடன் நேரே இங்கே வந்தால், விஷயம் தெரிந்துவிடும். ஆமாம், அப்படியாஞல் யார் கமலு, யார் கல்பகம்? இரண்டு பேரும் ஒன்ரு? இல்லை, ஏதாவது மாய மந்திரமா" என்றெல்லாம் சிந்தித்தவாறு சென்னைக்கு ரயில் ஏறினன் விசுவம்.

# அத்தியாயம் 14

கல்பகத்தைக் கண்டு பேசினாலொழிய மனம் நிம்மதி யடையாதென்று தோன்றியது ராஜத்திற்கு. ஜானகி இவளைப் போய் கமலு என்கிறாளே? அப்படியானால் கல்பக மாமி பெயரை மாற்றிக்கொண்டுவிட்டாளா? பாவம்! அவளைப் பற்றி அப்படியெல்லாம் எண்ண மனம் துணியவில்லை. "சிறிசு! உனக்கென்ன தெரியும்?" என்கிறாள் அத்தை. "எது எப்படி ஆனாலும் இன்றைக்கு அவள் வீட்டுக்குப் போய் வந்துவிட வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டு "அத்தை! தெருக் கோடியிலே பத்மா அகத்திற்குப் போய் வருகிறேன்" எனத் தனியே கிளம்பினாள் ராஜம். "ஏண்டி! துணைக்கு வேண்டுமானால், ஜானகியை அழைத்துப் போயேன்!" என்றாள் அத்தை. "ஊஹூம்! ஜானகி மாமி வெளியே போயிருக்கிறாள். இந்தக் கோடிவரையிலும் போக என்ன துணை, அத்தை!" என்று அத்தைக்குப் போக்குக் காட்டிவிட்டு நடந்தாள் ராஜம்.

ஒரு மைலுக் கப்பாலுள்ள கல்பகத்தின் வீட்டை எப்படித்தான் அவ்வளவு சீக்கிரம் போய் அடைந்தாளோ? அவர்கள் வீட்டிற்குச் சென்று படபடவெனக் கதவை யிடித்தாள். விமலு வந்து கதவைத் திறக்கவும், "இங்கே மாடியில் யார் குடியிருக்கிறார்கள்?" எனக் கேட்டாள் அவளை. "குடி ஒருத்தருமில்லை. இது எங்கள் சொந்த வீடு" என்று பெருமையாய்க் கூறினாள் விமலு. ராஜத்திற்குச் சந்தேகம் வந்துவிட்டது, எங்கேயாவது வீடு தப்பி வீடு நுழைந்துவிட்டோமா என்று. அச்சமயம் கல்பகமே மாடி இறங்கி வந்தவள், ராஜத்தைக் கண்டதும் "ராஜம்! வா, வா! உன்னை எங்கெங்கோ தேடினேன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது!" என்று

சந்தோஷத்துடன் கூறிய வண்ணம் ராஜத்தைக் கையைப் பிடித்திழுத்துக்கொண்டு மாடிக்குச் சென்றாள்.

படி ஏறுகையில் ராஜம், " ஊஹூம்! மாமி! யாராவது புருஷர்கள் இருப்பார்கள் நான் வரவில்லை" எனப் பிணங்கினாள்.

"புருஷர் யார் இங்கே? பைத்தியம்! கனாக் கண்டாயா?" என்று கேட்டாள் கல்பகம். "அட! நேற்றுப் பார்த்த மனுஷன் எங்கே, பின்னே?" என்று எண்ணிக்கொண்டே மாடியறையை அடைந்தாள் ராஜம். சந்தேகத்துடன் ஒவ்வொரு அறையாகச் சுற்றிப்பார்த்த பின், "என் கல்பக மாமி! எப்போது இந்த ஊருக்கு வந்தீர்கள்? எனக்கு எழுதவேயில்லையே" என்றாள்.

"ராஜம்! நீ எந்த ஊரில் இருக்கிறாயென்று எனக் கெப்படித் தெரியும். உங்க மாமாவுக்கோ ஊரூராய் மாற்றலாகும் வேலையென்று நீ முன்பே சொல்லியிருக் கிறாய் நீ இந்த ஊர் வந்து எத்தனை நாளாயிற்று?" என்று கேட்டாள் கல்பகம்.

"இப்போதுதான் ஒரு மாசம் ஆகிறது." என்று சொல்லிவிட்டு ஏதோ எண்ணியவள் போல் "மாமி! பெரிய மாமி எங்கே?" எனக் கேட்டாள் ராஜம்.

"ராஜம்! நீ ஊரைவிட்டுப் போனது முதற்கொண்டு நடந்ததையெல்லாம் சொன்னால்தான் உனக்கு விளங்கும்" என்று கூறித் தனது விருத்தாந்தங்களை முழுவதும் உரைத்தாள். "நேற்று இந்த மாடியில் யாரோ புருஷர் நின்றிருந்தாரே..." என்று சந்தேகம் தணியாமலேயே கேட்டாள் ராஜம். கல்பகம் அந்த விஷயங்களைப் பற்றியும் ஒளியாது கூறிவிடவே, ராஜம் கண்களில் நீர் ததும்ப "மாமி! என்னை மன்னிப்பீர்களா?" என்று நாத் தழுதழுக் கக் கேட்டுக் கல்பகத்தின் கைகளைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டாள்.

கல்பகத்திற்கு ஒன்றும் புரியடவில்லே. "என் ராஜம்? நீ என்ன தப்புச் செய்தாய்?" என்று கேட்டாள். ராஜம் தனக்கு ஜானகி சொன்ன விஷயங்களேச் சவிஸ்தாரமாய்க் கூறினுள். இதையெல்லாம் கேட்ட கல்பகம் புன்சிரிப்புடன் "சரி! இனிக் கமலுவைக் கண்டுபிடிப்பதற்கு அதிகச் சிரமப்படவேண்டியதில்லே. இந்த விஷயம் நேற்றே தெரிந்திருந்தால், இங்கு படுக்கையோடு கிடந்த அந்த மனுஷன் மூலமே நாம் கமலுவை யடைந்திருக்கலாம். ஆனுல் ஒரு விஷயம். உனக்கு அந்த மனுஷன் கமலுவிடம் நேசமாய் இருந்ததும், அவர் பெயர் விசுவம் என்பதும் எப்படித் தெரியும்?" என்ருள். ராஜம் வெட்கத்தால் சிறிது தயங்கிப் பின், தனக்கும் அவருக்கும் கல்யாணம் நிச்சயமாகி யிருந்ததும், கமலு விஷயம் கேள்விப்பட்டு அதைத் தன் வீட்டார் நிறுத்தினதுமாகிய விஷயங்களேக் கூறினுள். "பாவம்! அப்போது என்னேப் பற்றி நீ என்ன எண்ணி யிருப்பாய்? வெட்கக்கேடு. ராஜம்! நான் சொல்வதைக் கேள். உனக்கு விசுவத்தின் விலாசம் தெரியு மல்லவா? நாம் அங்கு சென்ருல் கமலுவைக் கண்டுபிடிப்பதோடு இவ்வளவு சந்தேகமும் தீர எல்லோருக்கும் வழிகாட்டியாவோம்" என்ருள் கல்பகம்.

"அத்தை என்ன சொல்வாளோ? வாசலிலே போய் எட்டிப் பார்க்கக்கூட அந்தச் சனி ஜானகிதான் துணை வருகிறது. அதிருக்கட்டும், மாமீ! எனக்கு ஒரு சந்தேகம்? அந்தக் கமலுவுக்கும் உங்களுக்கும் ஜாடை எப்படி வந்தது...?

"ராஜம்! உன்னிடம் மறைக்கக் கூடிய ரகசியம் என்னிடம் ஏது! கதவைச் சாத்தித் தாழ்ப்பாளிடு. இது விஷயமாய் வனஜாக்ஷி பெட்டியிலுள்ள கடிதங்களேப் படி. பிறகு சொல்லு!" என்ருள் கல்பகம். அதே மாதிரிச்

செய்த ராஜம் அக் கடிதங்களைப் படித்ததும், ஆச்சரியம் தாங்காது மூக்கில் விரலை வைத்தாள். "இந்த விஷயங்களை யாரிடமும் வெளியிடாதே, தற்சமயத்திற்கு" என்று ராஜத்திடம் பரிவுடன் கூறினாள் கல்பகம். "ஆகட்டும்", எனத் தலையசைத்தாள் அப் பெண்.

*　　　*　　　*

ஸேவாஸதனத் தலைவி எழுதின கடிதத்தைக் கண்டதி லிருந்து சரோஜாவிற்கு மன நிம்மதியில்லை. "கமலு யாரோ ஒரு கல்யாண மாகாத பெண். அவளைப் போய் நம் கணவன் தன் மனைவி என்க, தானும் யோசியாமல் அவளிடம் கோபங்கொண்டோமே...யென்றெண்ணி எண்ணி வருந்தினாள் அவள். இவர்கள் இப்படியெல்லாம் செய்யப்போக, கடைசியில் அவை விசுவத்தின் தலையிலா விழவேண்டும்? கமலுதான் கல்பகமென்று நினைத்து, மனக் கிலேசத்தில் அவன் ஊரைவிட்டே போய்விட் டானே! அவன் சங்கதியே தெரியவில்லை. கமலுவின் பிரச்னை தீரவாவது கல்பகத்தைக் கண்டு பிடித்துத்தான் ஆகவேண்டும் போலிருக்கிறது. போதும், போதும். இவர் கல்யாணம் பண்ணிக்கொண்டு, அந்தப் பெண்ணைக் கவனிக்காமல் விட்டதும் போதும், அவளைத் தேடப் போய், வந்துசேர்ந்த தொல்லைகளும் போதும்!" என்று சரோஜாவிற்குக் கல்பகத்தின் மீதும், தன் கணவனின் மீதும் கோபம் உண்டாயிற்று. ராமகிருஷ்ணனுக்கோ கமலுவைப் போய் "நீதான் என் மனைவி!" என்று முட் டாள் தனமாகக் கூறினோமே யென்று வெட்கமும், அவமானமும் பிடுங்கித் தின்றது. ஒரு விஷயம் என்னவோ நிச்சயம்; அவள் கல்பகத்தின் அச்சாகவே யிருக்கிறாளென் பதில் சந்தேகமே கிடையாது. பின்......?

சில சமயங்களில் இது விஷயமாய் யோசிக்கையில், தான் தூங்குகிறோமா, விழித்திருக்கிறோமா என்று

அவனுக்கே சந்தேகம் வந்துவிடும். இவர்கள் அவஸ்தை இப்படி யிருக்கையில், யாரோ ஒரு பணக்காரி வந்து தேடிப் போனதைப் பற்றிப் பக்கத்து வீட்டுப் பெண் சொன்ன விஷயம், சரோஜா காதில் ஏறவே யில்லை. ஏனோதானோ வென்றே அதைக் காதில் போட்டுக் கொண்டாள். இச் சமயம்தான் விசு திரும்பி வந்துவிட்டதாக சரோஜாவின் தாத்தா கடிதம் போட்டிருந்தார். "விசுவிற்குச் சொல்ல வேண்டிய சங்கதிகள் அநேகம் இருக்கின்றன. அவன் உடனே இங்கு கிளம்பி வந்தால் தேவலை" என்று உடனே தாத்தாவிற்கு எழுதி விட்டாள் பேத்தி.

ராமு, கண்ணனிடம் எல்லா விஷயங்களையும் கூறினான். ஏற்கெனவே கமலு அப்படிப் பொய் சொல்லக் கூடியவளா? அப்படிப் புளுகுவதில் அவளுக்கு என்ன லாபம்? கண்ணன் யோசனை செய்து பார்த்தான். ராமு சொன்ன வரலாறு அவனுக்குத் திருப்தியாக இருந்தது. அவன் ஸேவாஸதனத் தலைவிக்கு "உடனே கமலுவுடன் புறப்பட்டு வரும்படி கடிதம் போட்டு விட்டான். ஸேவாஸதனத் தலைவி பெங்களூரில் தங்குமிடம் கண்ணனுக்குத் தெரியும். விசுவிற்கு ஏதோ காரணத்தால் கண்ணனிடம் மனத்தாங்கல் என்பதை யறிந்த ராமு, விசுவிடம் அதை நேரில் விசாரித்தான்.

அவன் கூறியதும் "பைத்தியம்! நான்தானே கண்ணனை விட்டுக் கல்பகத்தைப் பற்றி விசாரிக்கச் சொன்னேன். அது காரணமாகத்தான் அவன் அலைந்து கொண்டிருந்தான். அன்று இந்த விஷயங்களைப் பற்றி நாங்கள் பேசுகையில் நீ எழுந்து ஓடிவிட்டாய். கண்ணன் மிகக் கண்யமானவன். அவனைப் பற்றித் தவறுதலாகக் கூடத் தவருக எண்ணதே!" என்ருன் ராமு.

அன்று மாலையில் கண்ணனைக் கண்டதும் சகஜமாகப் பேசினன் விசுவம். மெள்ள மெள்ளத் தான் திருச்சி

சென்றதும், அங்கே கமலு என்ற ஒரு பெண்ணின் வீட்டில் தங்கினதும், அப் பெண்ணைத் தான் பார்க்க முடியாமல் படத்தை மட்டும் பார்த்ததையும், படம் கமலுவின் படம்தானென்பதையும். பிறகு சென்னையில் விசாரித்ததில், அதே தினம் கமலு ஸேவாஸதனத்தில் இருந்ததாகத் தெரிய வந்ததையும் விவரமாகக் கூறினான்.

இந்த வரலாறு ஆச்சரியமாகவும், புதுமையாகவுமிருந்தது என்று மட்டும் தெரியவந்தது. "கமலு என்பவள் ஏதோ மந்திரவாதியாய் இருக்க வேண்டும். இல்லாவிடில் அவர்களைப் போல் இருவரைக் கடவுள் சிருஷ்டித்து நம்மை வேடிக்கை பார்ப்பதாக இருக்க வேண்டும்" என்று எல்லாரும் தீர்மானித்தனர். இருவரும் கமலுவேதானு? அப்படியானுல் கல்பகம் எங்கே! தேடிப் பார்த்து பிரயோசனமின்றி மற்ருேர் கமலு கிடைத்தால் என்ன செய்வது? "அட ஈசுவரா!" என்று சொல்லிவிட்டுப் படுத்தான் ராமு. விசுவத்திற்கோ, "அப்பாடா! எப்படியோ, நம் கமலு புனிதமானவள், கல்யாணமாகாதவள் என்று தெரிந்துவிட்டது. திரிச்சிக்குச் சென்று பார்த்தால் மற்ற விஷயங்கள் புலப்படுவது பிரமாதமல்ல" என்ற ஒரே எண்ணம் மேலோங்கி நின்றது.

மறுநாள், திருச்சி செல்லும் ரயில், முதல் முறையாக ராமு, விசு, சரோஜா ஆகியவர்களையும் மறு முறையாகத் தங்கம்மாள், கண்ணன், கமலு இவர்களையும் தாங்கிப் போயிற்று. அவர்கள் செல்லும் காரியம், உத்வேகம், இவைகளைப் பற்றி ரயிலில் போகும் மற்றவர்களுக்கோ, ரயிலுக்கே என்ன கவலை?

* * *

கல்பகத்தைக் கண்டு பேசிவிட்டு வீட்டிற்கு வந்த ராஜத்திற்கு மனச்சாந்தியே இல்லை. பாவம்! எந்த வழி போனுலும், கல்பக மாமிக்குச் சுகம் இல்லையே?

ஆமாம்! இப்பொழுது இருக்க இடம் இருக்கிறது அவ ளுக்கு. அந்தக் கடிதங்களைப் பார்க்கையில், எவ்வளவு விஷயம் வெளிப்படுகிறது! ரங்கையன், கல்பகத்தின் வீட் டாருக்கே ஓர் துரோகியாய்த்தான் இருந்திருக்கிறான். மனித உருவெடுத்திருக்கும் பிசாசுதான் அவன். அப்பா! என்ன துணிச்சல்! அந்தக் கமலு கல்பகத்தைப் போலவே இருந்தால் பார்க்க வேடிக்கையாகத்தான் இருக்கும். தானும் கல்பக மாமியோடு கூடச் சென்னைக்குப் போக அத்தை விடமாட்டாரளே! "ஹூம்! என்ன இருந்தா லும் பெண் ஜன்மம்தானே? பெண்ணாய்ப் பிறந்த தோஷம் தானே, ஒரு குற்றமு மறியாத கல்பகத்திற்கு இவ்வளவு கெட்ட பெயர்? நானே அவளைத் தப்பிதமாக எண்ணும் படி நேர்ந்து விட்டதே? எல்லாம் ஜானகி செய்த வம்பு. இனி இவளுடன் பேசவே கூடாது" என்றெல்லாம் தன் புத்தியைக் குழப்பிக்கொண் டிருந்தாள் ராஜம்.

ஜானகி வலுவில் வந்து பேசிப்பார்த்தாள். ராஜம் கேட்ட கேள்விக்குப் பதில் கூறிவிட்டுப் போய்விட் டாள். சிறு வயது முதலே ராஜத்திற்கு வம்பு என்றால் பிடிக்காது. ஜானகிக்கும் அவர்கள் வீட்டில் அலுப்புத் தட்டியது. பம்பாயில் யாரோ அதிகச் சம்பளத்திற்கு கூப்பிடவே அவள் கிளம்பிப் போய்விட்டாள். 'நச்சு' ஒழிந்தது என்று இருந்தாள் ராஜம். ராஜத்தின் மனதுப் படி தற்செயலாய் அவள் மாமா விற்குச் சென்னைக்கே மாற்றலாகியது.

* * *

ராஜம் சென்னைக்குச் செல்வதை யறிந்து கல்பகமும் விமலாவுடன் கிளம்பினாள். ராஜத்தின் யோசனைப்படி வனஜாக்ஷியின் பெட்டியில் அகப்பட்ட கடிதங்களைக் கல் பகம் கூடவே கொணர்ந்தாள். ராஜத்தின் அத்தைக்குக் கல்பகத்தைத் தெரியும். ஆனால், அதிகப் பரிச்சயமில்லை.

சென்னைக்குக் கல்பகம் வந்ததில் விமலாவிற்குத்தான் அதிகச் சந்தோஷம். விசு சென்னையில் இருப்பதை அவன் மூலமே அறிந்திருந்தாள் அவள். ராஜத்திற்கும் அவனுக்கும் கல்யாணம் நிச்சயமானதோ, கமலுவின் விஷயமோ ஒன்றையும் விமலா அறியாள். அவள் மட்டில் கல்பகம் தான் கமலு. விசு தனக்கு மோதிரம் கொடுத்ததிலிருந்து அவனையே இரவு பகலாய் எண்ணி உருகினாள் அப் பெண் "என்று காண்போம் அவரை?" என்ற நினைப்பிலேயே, சதா சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். கல்பகத்திடம் அவள் இதைப்பற்றி ஒன்றும் கூறவில்லை.

விசு இவளுக்கு எதையோ கொடுத்ததைக் கல்பகம் நேரில் பார்த்தாளல்லவா? அதன் பிறகு புதிதான ஒரு மோதிரம் அவள் கையில் தென்படவே, "ஏது, விமலா! மோதிரம் பண்ணிக் கொண்டாயா?" என வினவினாள் அவளை. விமலா கூச்சப்பட்டுக் கொண்டு ஒன்றும் பதில் கூறவில்லை. விஷயத்தை ஒருவாறு புரிந்துகொண்ட கல்பகமும் பேசாமல் இருந்து விட்டாள். ராஜம், பிறகு விசுவின் சங்கதிகளையெல்லாம் கூறவே, கல்பகத்திற்குச் சந்தேகம் தட்டியது. "ஓ! அந்த விசு திடமனது, உள்ளவனல்ல போல் இருக்கிறது. கமலுவைக் காதலித்து, ராஜத்தை மணக்கச் சம்மதித்து, பின் விமலாவுக்கு மோதிரம் கொடுப்ப தென்றால்? நல்ல வேளை ராஜம் தப்பினாள்! விமலா நம் கூடவேயிருப்பதால், அவளைக் கவனித்துக் கொள்வது பிரமாதமல்ல. ஆம்! கமலு அகப்பட்டுக் கொள்ளாமல் இருக்க வேண்டுமே? இது வரை அவளது கற்புக்குப் பங்கம் நேர்ந்திரா திருக்க வேண்டுமே? ஈசுவரா!" என்று வருந்தினாள் கல்பகம். ரங்கய்யனிடம் அகப்படாதிருக்கத் தான் ஓடிப்போனது ஞாபகம் வந்தது அவளுக்கு. ஆனால், வனஜாக்ஷி சொன்ன விஷயங்களிலிருந்து, கமலு மிகுந்த ரோஸக்காரி, மானி,

வனஜாக்ஷியிடம் அவளுக்குச் சில விஷயங்களில், ஒற்றுமை யில்லாததினாலேயே வீட்டை விட்டுப் போய் விட்டாள் என்ற சங்கதிகளை அறிந்திருந்தாள் கல்பகம். தன்னையே கமலு என்றெண்ணி "அப்படிச் செய்தேனே, இப்படிச் செய்தேனே!" என்று வனஜாக்ஷி பிரலாபிக்கை யில் பல விஷயங்களைக் கல்பகம் அறிய நேர்ந்தது. ஆகவே, அவ்வளவு கெட்டிக்காரியான கமலு விசுவத்தினிடம் ஏமாந்திருக்க முடியுமா! ஆனால் அப் பெண் உண்மை யிலேயே அவனை நேசித்தாளோ என்னவோ?...இருக்கட் டும்; அவன் மட்டும் கமலுவை ஏமாற்றப் பார்த்தா னென்று தெரிந்தால்...சே, சே! கமலுவிடம் நமக்கென்ன அவ்வளவு நம்பிக்கை! அவள் நம்மைப்பற்றி என்ன அபிப் பிராயங் கொள்வாளோ? என்று பலவிதச் சிந்தனைகள் ஓடிற்று அவள் மனத்தில்.

சென்னைக்குச் சென்ற மறுநாளே, விமலையுடன் விசு வத்தின் வீட்டிற்குச் சென்றாள். வெளியே யிருந்து "அம்மா! அம்மா!" என்று அழைத்தாள். உள்ளே யிருந்து ஓர் குரல்... ஆம், பழகின குரல்தான் அது!... "யார் அங்கே, அம்மா வெளியே போயிருக்கிறார்" என்றது.

"விசு இல்லையா?" எனக் கேட்டாள் கல்பகம்.

"இல்லை என்று தான் சொல்லுகிறேனே!" என்று சொன்ன வண்ணம் வெளியே வந்தாள் ஒரு கிழவி. அக் கிழவியைக் கண்டு திகைத்து நின்றாள் கல்பகம். கிழவியோ, "என்னம்மா! கல்பகமா? எப்போது எங்கே வந்தாய்? உன்னைப் பார்த்து எத்தனையோ நாட்களாயிற்று. பாவி நான் செய்த தப்புக்கெல்லாம் நன்றாய் அனுபவிக்கிறேன். உன்னைப் பார்த்து, உன் வாயால் நீ என்னை மன்னித்தாய் என்று சொல்லிக் கேட்க வேண்டும் என்ற ஆசை எனக்கு. அந்தப் பாதகன் ரங்கய்யன் 'உனக்கும்

பெப்பே' என்று என்னை ஊரை விட்டே ஓட்டிவிட்டான். ஏன் பேசமாட்டேனென்கிருய்? என்னை மன்னிக்க மாட்டாயா?" என்று கத்திய வண்ணம் கல்பகத்தின் காலில் விழப் போனுள்.

அவள் தன் காலில் விழாதவாறு கல்பகம் அவளைத் தடுத்து விட்டு "பாட்டி! நீங்கள் என்ன செய்வீர்கள்? என் வினை கிடக்கிறது, தப்புச் செய்தாலும், கடைசியில் அதை உணர்ந்து கொண்டீர்களே, அதே போதும்; உங்களை மன்னிக்க நான் யார்? சரி, நான் போய் வரட்டுமா? ஆமாம், விசு வந்தால், இந்தக் கடிதத்தைக் கொடுத்து விடுங்கள்" என்று கூறி ஒரு கவரைக் கொடுத்தாள். "என்னை நம்பியா கொடுக்கிருய்?" என்றுள் கிழவி. "சே, சே! ஒருவரை ஒருவர் நம்பாவிட்டால் பிறகு என்ன இருக்கிறது? மேலும், நீங்களே பச்சாதாபத்தால் வருந்தும்போது..." என்று புன்முறுவலுடன் கூறினுள் கல்பகம்.

பாட்டி அவள் போன திக்கையே பார்த்து நின்று விட்டாள் அயர்ந்து. "புண்ணியவதி" என்று அவள் வாய் தன்னை யறியாமல் முணுமுணுத்தது.

* * *

அம்மணியம்மாள் வீட்டுக்குப் புதியதோர் சமையற்காரி வந்ததாக முந்திய அத்தியாயத்தில் கூறினேமல்லவா? அந்தச் சமையற்காரி குப்பிப் பாட்டிதான். 'கெட்டும் பட்டணம் சேர்' என்றபடி, சென்னைக்கு வந்துவிட்டாள் அவள். நாலு நாள், கையிலுள்ள காசை வைத்துக் கொண்டு ஊரைச் சுற்றினுள். பட்டணத்தில் வெறும் வம்பில் காலந்தள்ள வசதி யில்லை யென்பதை அறிந்து கொண்டாள். தான் எவ்வளவோ நம்பிய ரங்கய்யன் மூலமே தான் ஊரை விட்டு ஓட நேர்ந்ததை எண்ணி எண்ணிப் பாட்டியின் மனம் புழுங்கியது. நேரே கபாலீசு

வார் கோவிலுக்குப் போனாள். தன்னை யறியாது தான் செய்த பாபமெல்லாம் ஞாபகம் வந்தது அவளுக்கு. அன்று ஒருநாள்தான் பாட்டி மனதார ஈசனை எண்ணி உண்மையான ஜபம் செய்தாள்.

"பாட்டி! சமையலுக்கு யாராவது கிடைப்பாளோ?" என்று யாரோ, எங்கிருந்தோ இன்னொரு பாட்டியைக் கேட்டார்கள். சடாரென்று, குப்பிப் பாட்டியின் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. பாட்டி வேலையில் ரொம்பக் கெட்டிக்காரி. அந்த இடத்தில் போய் நின்று பேச்சைக் கேட்டாள். "பதினைந்து ரூபாய் தருகிறோம். யாராவது இருந்தால் சொல்லுங்கள்" என்று ஒரு புரோகிதர் விசாரித்துக் கொண்டிருந்தார்.

"யார் அகத்திற்கு?" என்று விசாரித்தாள் பாட்டி. "பரமசிவய்யர் அகத்திற்கு. ஏன், யாராவது இருக்கிறாளா?" என மீண்டும் விசாரித்தார் புரோகிதர். "நான் வேணுமானால் வருகிறேன்" என்றாள் பாட்டி.

புரோகிதர் ஏற இறங்க ஒரு முறை பாட்டியைப் பார்த்தபின் "வாருங்கள்" என்று அழைத்துப் போனார். தன்னூரில் பாட்டி பிறரை வைத்த கண் வாங்காது பார்ப்பாள். இங்கோ, எவரோ புரோகிதர் பாட்டியைக் கேட்டுப் பார்த்து அழைத்துப் போக நேர்ந்தது. பாட்டி பாவம், அசலூருக்குப் பூனையானாள்! குப்பிப் பாட்டி, அம்மணியம்மாளிடம் சமையற்காரியாக அமர்ந்த வரலாறு இது தான்.

இங்கு, சமையல் வேலை போக, பாக்கி வேலை பாட்டிக்கு ஒழிவுதான். வம்புக்குக் குளக்கரை, ஆற்றங்கரையெல்லாம் சென்னையில் ஏது? 'இனிது இனிது ஏகாந்தமினிது' என்று தெரியாமலா கூறியிருக்கிறார்கள் பெரியோர். தனிமையில் உட்கார்ந்துகொண் டிருக்கையில், பாட்டி தான், முன்பு நடத்திய வாழ்க்கையைப் பற்றிச்

சிந்திப்பாள். கடைசியாக அந்த ஊரை விட்டு வருமுன், தன்னைப்போலவே ஊரை விட்டுப்போன கல்பகத்தின் ஞாபகம் அடிக்கடி பாட்டிக்கு வராமல் இருக்காது. "நான்தான் வயதானவள். எங்காவது சமையல் வேலை செய்தாவது வயிற்றை வளர்த்து விடுவேன். பாவம், கல்பகம் என்ன செய்வாள்?" என்று எண்ணுகையில் "அடி, பாவி!" என்று எங்கிருந்தோ கல்பகம் கூவுவது போல் பாட்டியின் காதில் விழும்.

ஆக, ஊரைவிட்டு வந்தது முதலே பாட்டியின் குணத்தில் மாறுதல் ஏற்பட்டது. இப்பொழுது இந்தத் தனிமை பாட்டிக்கு ஒரு குருமந்திரமே உபதேசித்தது எனலாம். கல்பகத்தைக் கண்டு அவள் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று எண்ணும் நிலைமைக்கு இப்பொழுது பாட்டி வந்து விட்டாள். இதுவரைக்கும் வீணாகத்தான் பொழுது போக்கியதை எண்ணி உண்மையில் பச்சாத்தாபப்பட்டாள் பாட்டி.

மறுபடி கல்பகத்தைப் பார்ப்போமென அவள் கனவிலும் எண்ணவில்லை. நாம் எண்ணுகிற விஷயங்கள்தான் உலகில் நடப்பதில்லையே! அன்று தற்செயலாய் வீட்டில் ஒருவருமில்லாமற் போகவே, வாசலில் யாரோ கூப்பிட்டதற்குப் பாட்டி பதில் கூறவந்தாள். கல்பகத்தை அங்கு கண்டு அவள் திகைத்ததில் வியப்பென்ன? மாலையில் அம்மணியம்மாளிடம் யாரோ கடிதம் கொடுத்ததைக் கூற எண்ணிக் கவரை சமயலறை பிறைக்குள் வைத்தாள். மாலையில் வீட்டில் நேர்ந்த அமர்க்களத்தில், கடிதத்தையே மறந்து விட்டாள் பாட்டி.

## அத்தியாயம் 15

கண்ணன் கூறிய பிறகுதான், தங்கம்மாள், கமலு முதலியவர்கள் திருச்சி வந்திருக்கிறார்களென்று விசுவத்திற்குத் தெரியும். தன்னைப் போலவே இன்னொரு பெண் இருக்கிறாளென்பதை அறிந்தால், கமலு ஆச்சரியப்படுவதோடு, இந்த முக ஜாடையினால் ஏமாறிய ராமுவையும் நிந்திக்கமாட்டாளல்லவா என்பது சரோஜாவின் எண்ணம். "நல்லதாய்ப் போயிற்று! அவளும் வரட்டும்! எல்லாருமாகப் போய் அந்த இன்னொரு கமலுவையோ, கல்பகத்தையோ, பிடிப்போம்" என்றாள் அவள். விசுவிற்குத்தானே தெரியும், விமலாவின் வீடு? ஒரு வண்டியில் சரோஜா, அவள் கணவன், விசு ஆகியோரும் இன்னொரு வண்டியில் தங்கம்மாளும் கமலுவும் ஏறிக்கொண்டு சென்றனர்.

கமலுவுக் கென்னவோ விசுவைப் பார்க்கவே கூசிற்று. விசுவிற்கோ அவமானம் தாங்கவில்லை. "தப்புச் செய்யாதவர்கள்மீது குற்றங் கண்டோமே!" என்று தன்னையே நொந்துகொண்டான் அவன்.

முதல் முதல் திருச்சி ஸ்டேஷனைக் கண்டதுமே கமலுவிற்குப் 'பகீர்' என்றது. தெருவோடு வண்டியில் போகும்போது, எங்கு வனஜாக்ஷியைக் கண்டு விடுவோமோ என்ற திகில்! "பார்க்கட்டுமே? என்ன செய்வாள் நம்மை அவள்?" என்று எவ்வளவோ மனத்தைத் திடப் படுத்திக்கொண்டும் அவளுக்கு உள்ளூர ஏதோ கலக்கம். வண்டி எங்கே போகிறது என்பதைக்கூடக் கவனியாமல், தலையைக் கவிழ்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் அவள். "சிந்தனை செய்வதில் பயனேது?"

என்று, பிச்சைக்காரக் கும்பலொன்று அச் சமயம் தெரு வில் பாடிக்கொண்டே வந்தது. அப்பா! அந்தப் பைய னின் குரலில்தான் என்ன உருக்கம்! கமலு ஒரு நிமிஷம் நிமிர்ந்து பார்த்தாள் அவர்களை. தனக்காகவே அந்தப் பாட்டு பாடப்பட்டதுபோல் தோன்றியது அவளுக்கு.

ஒரு குலுங்குக் குலுங்கி வண்டி நின்றது. விசு முதலியவர்கள் கீழே இறங்கினர். தங்கம்மாளின் பின் னால் இறங்கிய கமலு, "ஆ! இங்கே ஏன் வந்தீர்கள்?" என்று கத்த வாயைத் திறந்தவள் தன்னை அடக்கிக் கொண்டு, "அம்மா! இது வனஜாக்ஷி அம்மாளின் வீடல்லவா? உங்களுக்கு விலாசம்கூடச் சொன்னேனே, மறந்து விட்டீர்களா?" என மெதுவாகக் கேட்டு விட்டு, மறுபடி வண்டிக்குள் ஒளிந்தாற்போல் ஏறி உட்கார்ந்து கொண்டாள். "எல்லாருமாகச் சேர்ந்து நம்மை வன ஜாக்ஷியிடம் விட்டுவிடச் செய்த சதியோ இது? தங்கம்மா ளிடம் விஷய மெல்லாம் கூறினதின் விளைவோ?" என் றெல்லாம் பயந்தாள் அவள். தங்கம்மாளோ, "கமலு! உனக்குக் கெடுதலானதையோ, நீ விரும்பாததையோ நான் ஒருகாலும் செய்யேன். போன மாதம் விசு இந்த வீட்டிற்கு வந்தானாம். இங்கு வனஜாக்ஷியென்ற பெய ருள்ளவர்கள் யாரும் இல்லையாம். கமலு என்ற பெண் ணொருவள் — உன்னைப் போலவே ஜாடையுள்ளவள்— இருக்கிறாளாம். அதைக் கண்டுபிடிக்கத்தான் நாம் வந் திருக்கிறோம். நீ கொஞ்சங்கூடப் பயப்பட வேண்டிய தில்லை" என்று தைரியம் சொன்னாள்.

கமலுவின் மார்பு படபட வென்று அடித்துக் கொண்டுதான் இருந்தது. இதற்குள் விசு, கண்ணன், ராமு எல்லாரும் உள்ளேபோய்விட்டு வந்துவிட்டார் கள். வீட்டில் ஓர் அறையைத் தவிர மற்றவை யெல்லாம் பூட்டப்பட்டுக் கிடந்தது. அங்கு காவல் இருந்த கிழவி

ஒருத்தி "கமலு அம்மா பட்டணம் போயிருக்காங்க. இப்போதான் முந்தாநாள் போனாங்க. எப்போ வருவாங்களோ, நம்மகிட்ட சொல்லிட்டாப் போனாங்க?" என்று தொடங்கினாள். எங்கு இறங்கியிருக்கிறாள் என்று ஒன்றும் கிழவியின் மூலம் அறிய முடியவில்லை அவர்களுக்கு. "தலை விதிதான் இது! நாம் இங்கு வரும் சமயம் பார்த்து அவள் அங்கு தொலைவானேன்? என முணுமுணுத்துக் கொண்டனர் அம் மூவரும்.

விஷயத்தைக் கேட்ட கமலுவிற்கோ ஆச்சரியம் தாங்கவில்லை. கல்பகம் என்பவளைத் தேடி இவர்கள் அலைய இன்னுமொரு கமலுவா? அதுவும் வனஜாக்ஷி வீட்டிலா? என்ன வேடிக்கை! வனஜாக்ஷி வீட்டை விற்று விட்டாளா? ஒரே சந்தேகமும் குழப்பமுமாய்த் திணறினாள் கமலு. வண்டி சிறிது தூரம் சென்றதும், தங்கம்மாளிடம் "அம்மா! அந்த மூலைக் கடையில் இறங்கி விசாரிக்கச் சொல்லுங்கள், வனஜாக்ஷி என்ன ஆனாள் என்று" என்றுரைத்தாள் கமலு. தங்கம்மாள் கண்ணனிடம் கூறவே கண்ணன் இறங்கி விசாரித்தான். கடைக்காரன் மூலம் வனஜாக்ஷி இறந்துபோனது தெரியவந்தது.

"என்னைப் பிரிந்து இருக்க முடியாமல் இறந்துவிட்டாள் போலும்! கட்டாயம், இப்பொழுது அங்கிருப்பவள் யாரோ ஒரு போலி வேஷதாரியே. சும்மா விட்டு விடக்கூடாது அந்த வேஷதாரிக் கமலுவை!" என்று ஆத்திரத்துடன் கூறினாள் கமலு. தங்கம்மாள் யோசனையில் ஆழ்ந்து விட்டாள்.

வீட்டிற்குச் சென்ற விசுவுக்கு ஒரு தந்தி காத்திருந்தது. "தாத்தாவின் நிலைமை அபாயம். உடனே வரவும்..."

ஒன்றும் புரியாமல் நின்றான் விசு. "நல்ல வேளையாய், இந்த ஊருக்கு இந்த இடத்தில் வந்து தங்கியிருக்

கிறுே மென்று பாட்டிக்கு எழுதினேமே! இல்லாவிடில் தந்தி பெங்களூரில் கிடக்க வேண்டியதுதானே!" என்றுன் ராமு. "ஆம்! எங்கு போனாலும் அண்ணு முன் கூட்டிச் சொல்லாமல் போக மாட்டான். என்னவோ ஒரு முறை முன்பு போனுன்......ஆமாம்......இனி இந்தச் சன்னையைப் பார்த்திருக்க முடியாது. எல்லாரும் கிளம்ப வேண்டியதுதான் சென்னைக்கு!" என்றுள் சரோஜா. "எத்தனை செலவு! எவ்வளவு ஹிம்சை! என்று முணு முணுத்தான் ராமு. அச் சமயம் அங்கு வந்த கண்ணனுக்கும் விஷயத்தைத் தெரிவித்தார்கள்.

"நம் காரியத்தைப் பற்றி நாம் அலையவே சிணுங்குகிறுேமே, பிறருக்காக உடம்பை அலட்டிக் கொள்ளும் இந்தக் கண்ணன் மட்டும் முகம் சுணுங்கவில்லையே? இவன் என்ன சாக்ஷாத் கண்ணப்பிரானு?" என்று எண்ணிக் கொண்டான் விசு. ஆரம்பத்தில், கண்ணனிடம் எவ்வளவுக் கெவ்வளவு வெறுப்புக் கொண்டாஞே அவ்வளவுக் கவ்வளவு அவனிடம் மதிப் புண்டாயிற்று விசுவிற்கு.

* * *

வழக்கமாக உலாவப்போவது போல்தான் அன்றும் போனுர் பரமசிவய்யர். என்னவோ தெரியவில்லை திரும்பி வரும் போதே, மயக்கமாய் இருக்கிற தென்று சொல்லிக் கொண்டு வந்தார். உடனே டாக்டர் வந்தார். "இருதயம் பலஹீனமாய் இருக்கிறது. ஒரு நாள் பூரா இந்த மருந்தைக் கொடுங்கள். எதற்கும் விசுவைத் தந்தியடித்து வர வழையுங்கள்! எனக் கூறிச் சென்றுர். குடும்ப வைத்தியர் அவர். அவர் சொன்னுல், உண்மையில் அதில் ஏதாவது ஆபத்து இருக்கும் என்று பயந்து அம்மணியம்மாள் விசுவிற்குத் தந்தி கொடுத்துவிட்டாள்.

விசு சமயத்தில் இல்லாமற் போனது அவளுக்கு மிகுந்த விசாரமாய் இருந்தது. கல்பகத்தைத் தேட எல்

லாரும் போகிறார்கள் என்ற விஷயமே அம்மணியம்மா ளுக்குத் தெரியாது. எப்படித் தெரியும்? தெரிந்தால் விடு வாளா? எந்த அசட்டுப் பெண்ணாவது சக்களத்தியைத் தேடி அழைக்குமோ? சரோஜா, விசு முதலானவர்கள் வந்து இறங்கியதும் "தாத்தாவிற்கு என்னவோ வந்து விட்டதடா, விசு!" என்று பெரிதாக அழ ஆரம்பித்து விட்டாள் பாட்டி. நல்லவேளையாய் மறுநாளே தாத்தா வின் நிலைமை சிறிது குணத்திற்கு வந்தது.

இந்த அமர்க்களங்களையெல்லாம் கண்டு, கடிதத் தையே மறந்திருந்த குப்பிப் பாட்டி, கிழவருக்குச் சிறிது தேவலை யென்றதும், குடுகுடு வென்று ஓடிப்போய் கடி தத்தை எடுத்து வந்து விசுவிடம் கொடுத்தாள். கடிதத் தைப் படித்த விசு, "சரோஜா! சரோஜா!" எனக் கூவி அவளிடம் கடிதத்தைக் கொடுத்தான். "அப்பாடா! நாளைய தினம் வருகிறாளாமே? தேடிப் போன மருந்து காலிலேயே சிக்கியது!" என்று கூவினாள் சரோஜா.

ஸேவாஸதனத்திற்கும் இந்த விஷயம் பறந்தது. கடி தத்தில் சில வரிகளே காணப்பட்டன. "ஒரு முக்கிய மான விஷயம் குறித்து எங்கள் எஜமானி கமலு தங்களைக் காண வேண்டுமாம்.—1ம் தேதி வர செளகரியப்படுமா? விமலா." விமலையைப் பற்றி ஏற்கெனவே விசு சரோஜா விடம் கூறியிருந்தான். "ஆனால், விமலை தன் எஜமானி யைக் கமலு என்பானேன்? கமலுதான் ஏதோ வேடிக் கைக்காகத் தன்னைக் கல்பகம் என்று கூறிக்கொண்டாள். அதே மாதிரிக் கல்பகமும் தன்னைக் கமலு என்று கூறிக் கொள்ளக் காரணம்? இவர்கள் இருவரும் முன்பே அறி முகமாகி, ஏதோ உடன்படிக்கை செய்து கொண்டவர்கள் போல் அல்லவா நடந்திருக்கிறார்கள்? இருக்கட்டும் எல்லா ரகசியமும் வெளிவரும் நாள் வந்துவிட்டது" என்று ராமு விசு, சரோஜா மூவருமாய்ப் பேசிக்கொண்டனர்.

கண்ணன் வாயைத் திறக்கவில்லை. இந்தமாதிரி நெருக்கடியான சமயங்களில் மௌனத்திற்குச் சமானம் கிடையாது என்பது அவனுடைய அபிப்பிராயம். குப்பிப் பாட்டியை "யார் வந்தார்கள்?" என்று ஒருவரும் கேட்கவில்லை. அவள் புதிய சமையற்காரி. குப்பிப் பாட்டிக்கும் இவர்கள் கல்பகத்தைத் தேடும் விவரம் தெரியாது. ராமுவை மாயவரத்தில் ஒரு நிமிஷம் பார்த்தது. அவளுக்கு அவனை ஞாபகம் வரவில்லை. இந்த வீட்டாருக்கும் கல்பகத்திற்கும் சம்பந்தம் இருக்குமென்று அவள் நினைக்கவேயில்லை. "மறுநாள் பொழுது எப்போது விடியப்போகிறது?" என்று காத்திருந்தனர் எல்லாரும். "கீழே கொஞ்சம் வேடிக்கை நடக்கும் பாட்டி! நீ மாடியை விட்டு வரக்கூடாது" என்று முன்பாகவே அம்மணியம்மாளுக்கு எச்சரிக்கை செய்து வைத்தாள் சரோஜா. "ஏண்டியம்மா! நானும் அந்த வேடிக்கையைப் பார்க்கிறேனே!" எனக் கேட்டாள் பாட்டி. "பாட்டி! உன்னிடம் சொல்லாமல் நாங்கள் சில காரியங்கள் செய்தோம். அதன் பலன்கள் எத்தனையோ" என்று இழுத்தாள் சரோஜா.

"என்னடி புதிர் போடுகிறாய்?" என்று அதட்டினாள் பாட்டி.

"கெடுதலாக ஒன்றுமில்லை, நல்ல முடிவுதான். நாங்கள் எல்லாருமாகச் சேர்ந்து என் மூத்தாளைத் தேடினதில்......" என்றதும், பாட்டி "இதென்ன, புதிய விஷயமாயிருக்கிறது?" என்று கேட்டாள். சரோஜா விவரமாய் எல்லாவற்றையும் சொன்னாள். "அழகு, அழகு! இத்தனை கஷ்டப்பட்டா உன் சக்களத்தியைத் தேடுகிறாய்? சமத்து வழிகிறது, போ!" என்று கடிந்தாள் அம்மணியம்மாள். தான் சக்களத்தியைத் தேடுவதை யறிந்தால் பாட்டி தடுத்து விடுவாள் என்று தெரிந்துதான் சரோஜாவும் இது

வரையில் அதைக் கூறவில்லை. திடீரென இரு கமலு, இரு கல்பகம், என்று கேட்டுப் பாட்டியின் மூளை அதிர்ச்சி யடையாமல் இருக்கவே, இப்பொழுது விஷயங்களைக் கூறினுள் அவள்.

குறிப்பிட்ட சமயத்தில் ஓர் அறையில் தங்கம்மாளும், கமலுவும் அமர, இன்னொரு அறையில், ராமு, சரோஜா, கண்ணன் மூவரும் காத்திருந்தனர், கல்பகத்தின் வரவை எதிர் பார்த்து. கமலுவுக்கு வரப்போகிறவளின் எதிரில் வர இஷ்ட மில்லை. அவள் தன்னைப்பற்றி என்ன சொல்லிக் கொள்கிருள் என்று மறைவில் இருந்தே பார்க்கத் தீர் மானித்தாள் அவள். 'டாங், டாங், டாங்' என மணி நான்கு அடித்தது. வாசலில் கார் ஒன்று வந்து நின்றது. மறு நிமிஷம் விமலா முன்வர, பின்னுல் அவள் எஜமானி வந்தாள். சரோஜா "வாருங்கள்" என்று அவர்களை அழைத்தாள். அங்கு அமர்ந்திருந்த ஆண்பிள்ளைகள் ஒருவரையும் ஏறிட்டுப் பார்க்கவில்லை கல்பகம். உங்கள் பெயர் சரோஜா அல்லவா எனக் கேட்டாள்."

"ஆமாம்! தங்கள் பெயர்?"

"என் பெயர் தற்சமயம் கமலு. ஆனுல், என் தாய் தந்தையர் இட்ட பெயர் கல்பகம்.

"ஆ! கல்பகம்!" எனக் கத்தினுன் ராமு. நிமிர்ந்து அவனை நோக்கினுள் கல்பகம். ஆனுல் அவள் கண்களில் ஒரு வித உணர்ச்சியும் இல்லை.

ஆம், உணர்ச்சி வற்றிப் போயிருந்தது அக் கண் களில்!—

இச் சமயம் கமலு தன்னறைப் படுதா வழியே நோக்கினுள். என்ன ஆச்சரியம்! அவளுடைய பிரதிபிம் பம்தானு இந்தக் கல்பகம்? பார்க்கலாம், என்ன சொல்லு கிருளென்று. "அம்மா! உங்களை நான் தேடிவரக் காரணமில்லாம லில்லை. முதலாவது, உங்கள் வீட்டில்

கமலு என்னும் ஒரு பெண் இருப்பதாக அறிந்தேன்...''

ஓ! இவளைப் பற்றி நாம் கேள்விப் பட்டது போலவே நம்மைப் பற்றி இவளும் கேள்விப்பட் டிருக்கிறாள் போலும்'' என்று எண்ணிக் கொண்டாள் கமலு.

''அவளை நான் பார்க்க வேண்டும். அவளுடைய முக ஜாடையும் என் முக ஜாடையை ஒத்திருந்ததால், நான் சொல்லச் சொல்லக் கேட்காமல், கமலுவின் வளர்ப்புத் தாய் வனஜாக்ஷி என்னை அழைத்துப் போய்விட்டாள். அந்தக் கமலுவின் இருப்பிடம் தற்செயலாய் என் சிநேகிதி ராஜலக்ஷ்மியின் மூலம் தெரிந்தது. ஆம், உங்கள் அண்ணா விசுவத்திற்குக் கொடுப்பதாகத் தீர்மானித்து நிறுத்தப்பட்ட அதே ராஜலக்ஷ்மி மூலம்தான். வண்டியோசை கேட்கிறது. அவளும் இந்த ஊரில்தான் இருக்கிறாள். இதோ வருகிறாள் பாருங்கள்...''

ராஜலக்ஷ்மி அச் சமயம் தன் அத்தையுடன் வந்து சேர்ந்தாள். சரோஜா ஆச்சரியத்துடன் வரவேற்றாள் அவர்களை. ''கமலு! ஏன் உள்ளேயே இருக்கிறாய்? வாயேன் வெளியில்!'' என்று சரோஜா கூப்பிடக் கமலு வெளியே வந்தாள். ஆம்! புடவையின் நிறபேதம் தவிர வேறு பேதம் இல்லை, கமலுவுக்கும் கல்பகத்துக்கும்!

கமலுவைச் சிறிது நேரம் அன்பு ததும்பப் பார்த்தாள் கல்பகம். மறு நிமிஷம் எழுந்து ''உன்னுடைய வளர்ப்புத் தாய் என்னை நீ என்று எண்ணி இந்தச் சில கடிதங்களைத் தான் இறப்பதற்கு முன் என்னிடம் அளித்தாள். இதோ அவைகள்'' என்று அவளிடம் கொடுத்தாள். எல்லாரையும் பேச விட்டு விட்டுக் கடிதங்களைத் தனக்குள் படித்துக் கொண்ட கமலு, திடீரென்று ஐயோ! அக்கா!'' என்று உரக்கக் கூவிக்கொண்டே வந்து கட்டிக் கொண்டாள் கல்பகத்தை. ஹாலில் இருந்த அனை

வரும் ஒன்றும் தோன்றாது பார்த்து மலைத்தனர் இக் காட்சியை.

"அக்காவா? இது என்ன? ரகசியத்திற்குமேல் ரகசியமா?" என்ற குரல்கள் சரோஜா முதலானவர்களிடமிருந்து எழும்பிற்று. கல்பகம் ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். பேசவே முடியவில்லை அவளுக்கு. கமலுவோ, "ஆம்! என் கூடப்பிறந்த சகோதரி கல்பகம். எனது பெயரைத் தாங்கி, வனஜாக்ஷியின் சொத்தை அநியாயமாக அனுபவிக்கும் வேஷதாரி என்று நான் சந்தேகித்தவள் எனதருமை சகோதரியாக மாறினாள். இதற்கு அத்தாக்ஷியான கடிதங்கள் இதோ! இனி நான் அனாதையில்லை. உங்களுக்கெல்லாம் இருப்பதுபோல் எனக்கும் ஓர் உடன் பிறப்பு இருக்கிறது!" என்று கூறி விசுவத்தை விஷமமாக நோக்கினாள்.

அப்பொழுதே தனது பிறப்பை எண்ணியவன்போல் விசுவம் "கமலு! நீ எண்ணியது தப்பு! சரோஜாவை என் தங்கைக்கு மேலாகவே நான் கருதுகிறபோதிலும், உடன் பிறந்த சகோதரி எனக்குக் கிடையாது." கமலுவிடம் இவ்வளவு நாள் கழித்து இன்றே நேரிடப் பேசினான் விசு.

"அப்படியானால், நீங்கள் பரமசிவய்யரின் பேரன் இல்லையா? பின்?"

"சொல்லட்டுமா, சரோஜ்?"

"ஓ! பேஷாகச் சொல் அண்ணா! எது எப்படியானாலும் எனக்கு நீ அண்ணாதான். இதைவிட உயர்ந்த குணமுள்ள அண்ணா, கூடப் பிறந்தவனானாலும் இருக்க முடியாது" என்று பெருமையுடன் கூறினாள் சரோஜா.

விசு தொடங்கினான்: "எனக்கே சில வருஷங்களுக்கு முன்புதான் தெரியும். எனது தகப்பனார் 'அக்கௌண்டண்ட் ஜெனரல்' ஆத்மநாதய்யர் பம்பாயில் ப்ளேக் பரவியபோது இறந்தாராம்.

"எந்த ஆத்மநாதய்யர்? ஆர். வி. ஆத்மநாதய்யரா?" எனக் கத்தினள் இதுவரையிலும் பேசாதிருந்த ராஜலக்ஷ்மியின் அத்தை. "ஆம்! ஆம்!" என்று உரைத்தான் விசு.

ஏற்கெனவே கல்யாணம் நிச்சயமாகி முறிந்துபோன வீட்டிற்கு, முக்கியமான காரணங்காட்டி, கல்பகம் அழைத்திருந்ததால், எண் சாண் உடம்பையும் ஒரு சாண் ஆக்கிக்கொண்டு வந்திருந்தாள். ராஜலக்ஷ்மியின் அத்தை. ஆகவே, இதுவரையிலும் வாயைத் திறக்காமல், வெட்கத்தால் தலை குனிந்திருந்தவள், நேரே விசுவத்தையே கேள்வி கேட்கவும், எல்லாரும் அவளையே பார்த்தனர். ஈசுவரனின் திருவிளையாடல்தான் இது. ஆத்மநாதய்யரின் மைத்துனிதான் ராஜத்தின் தாயார். ஆத்மநாதய்யர் ப்ளேக்கில் இறந்த விஷயம் கேட்டு அவள் ரொம்பவும் மனக்கிலேசப் பட்டாள். 'அவருக்கு ஒரு பெண்ணும், பிள்ளையும் இருந்தார்களே! என்னவாயிற்றோ?' என்று அழுதாள். ஹூம்! கடைசியில், ராஜத்திற்கு நீ ஒன்று விட்ட சகோதரனடா, அப்பா, விசு! பெரிய பாவத்திலிருந்து தப்பினோம். முறைப்படி ராஜம் உனக்குத் தங்கையாக வேண்டும்."

ராஜத்திற்கு ஆனந்தம் தாங்கவில்லை. தன்னையறியாது விசுவத்தின் மீது அவளுக்கு நம்பிக்கை விழுந்ததன் காரணத்தை இப்பொழுதே யறிந்தாள் அவள். அவளும் நமக்குக் கல்யாணத்திற்கு நிச்சயம் செய்தவனாயிற்றே இவன், என்ற எண்ணத்தால் இதுவரையிலும் அவனைப் பாராது உட்கார்ந்திருந்தவள், நிமிர்ந்து அவனை நோக்கினள். விசு அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்தான். "உனக்கென்ன அண்ணா இனிமேல் குறை! புதிதாய் ஒரு தங்கை அகப்பட்டாள்..........." என்று பரிகாசம் செய்தாள் சரோஜா.

"புதிய சக்களத்தியைக்கண்டே வயிற்றெரிச்சல்படாத நீ தங்கையைக் கண்டா ஆத்திரப் படுகிருய்?" எனக் கேட்டான் விசு. எல்லாரும் கைத்தட்டிச் சிரித்தனர்.

"சரி! மர்மம் எல்லாம்தான் வெளியாகிவிட்டதே! வாயேன் கமலு, போவோம்! வனஜாக்ஷி உனக்கு வைத்த சொத்துக்களை ஒப்புக்கொள்! எனக்கு வேறு ஜோலி இருக்கிறது!" என்று அழைத்தாள் கல்பகம்.

"ஆம், அக்கா! கமலுவுக்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்தபின் வந்துவிடுங்கள் இங்கே! நாமெல்லாரும் பெங்களூருக்குப் போவோம்" என்றழைத்தாள் சரோஜா. ராமுவோ, "கல்பகம்! என் மேல் ஆயிரம் தப்பு இருக்கலாம்! அவைகளை யெல்லாம் மறந்து......" என்று ஆரம்பித்தான். கல்பகம் பேசாமல் தலை குனிந்தாள்; பதில் ஒன்றும் பகரவில்லை. ஒவ்வொருவராய் வாங்கிப் பார்த்தனர் வனஜாக்ஷியின் கடிதங்களை. இதுதான் அதில் கண்ட முக்கியமான விஷயம்:

"கமலு! உனது பிறப்பு வளர்ப்பைப்பற்றி அறிய நீ ஆசைப்படுவது சகஜம். உன்னை என்னிடம் கொண்டு வந்து விற்றவன் மூலமே அதை நான் அறிந்தேன். அவன் அதை லேசில் கூற இசையவில்லை. நல்ல தொகையளித்த பின்பு, நான் உன்னிடம் இதைக் கூறுவதில்லை என்ற வாக் குறுதி பெற்றே இதை எனக்குக் கூறினன். ஆயினும் நான் இறப்பதற்கு முன்பு இதை உனக்குச் சொல்லி விடுவதென்றே நான் தீர்மானித்தேன். உயர் குடியில் பிறந்த உனக்குத் தகப்பனர் மாயவரம் கிருஷ்ணய்யர்; தாயார் அலமேலு அம்மாள். உன்னுடன் பிறந்த இரட் டைச் சகோதரி கல்பகம் என்பவள் இருக்கிருளாம். இந்தமட்டிலுமே நான் அறிந்தது. உனது மூன்ருவது வயதில் உன்னைக் கொண்டுவந்து விற்றவன், மாயவரம் ரங்கய்யன் என்பவன்."

"அந்தப் பாவி ரங்கய்யனா?" என்று, கடிதத்தில் இந்த விஷயத்தைப் படிக்கையில் ராஜலக்ஷ்மி சீறினாள். பிறகு, எல்லாருக்கும் கல்பகம் சிறு வயதிலேயே தன்னிடம் அன்பு காட்டியதை ராஜம் கூறினாள். "என் சகோதரி கமலுவை நீங்கள் காப்பாற்றினது போல், உங்கள் சகோதரி ராஜம் என்னைக் காப்பாற்றினாள், பலமுறை அந்தக் கொடிய கூட்டத்தாரிடமிருந்து" என்று விசுவை நோக்கிக் கூறினாள் கல்பகம். அவள் குரலில் என்றுமில்லாத சாந்தியும் வைராக்கியமும் தொனித்தது. இருபது வயது மங்கைதான் அவள் என்றாலும், இந்தச் சில கால அனுபவத்தில் ஓர் முதியவளைப் போன்ற அறிவு பெற்றுவிட்டாள். "போய் வருகிறேன் மற்றொருநாள் சந்திப்போம்!" என்று கல்பகம் கிளம்புகையில், அதுவரையில் பக்கத்து அறையில் விஷயங்களை கேட்டுக்கொண்டிருந்த குப்பிப் பாட்டி ஓடோடியும் வந்து அவள் தடுப்பதற்குமுன் காலில் விழுந்துவிட்டாள். "பாட்டி! இதென்ன பைத்தியக்காரத்தனம்! தாங்கள் பெரியவர்கள் இல்லையா?" என்று பாட்டியைப் பிடித்துத் தூக்கினாள் கல்பகம். பாட்டியின் கண்களில் நீர் ஆறாய்ப் பெருகிற்று.

"ஐயோ! பாட்டி இங்கும் வந்துவிட்டாளா?" என்றாள் ராஜம். பாட்டிமீது இருந்த வெறுப்பு அவளுக்குக் குறையவில்லை. "ராஜம்! குற்றம் செய்வது சகஜம்! அதை அவர் உணர்ந்ததே போதும்!" என்றாள் கல்பகம்.

"நல்ல சகஜம்! இவள் உணரவில்லை யென்று யார் அழுதார்கள்? அதன் பலனை அனுபவித்தவர்களுக் கல்லவா கஷ்டம்?"

"இருக்கட்டும்! இதற்குக் காரணம் அவள் மட்டுமல்ல, நமது வினையும் ஒரு காரணம்தான், ராஜம்!"

ராஜத்திற்குக் கல்பகத்தின் மனநிலை புரியவில்லை. பாட்டியை முறைத்துப் பார்த்துவிட்டு வண்டியில் ஏறினாள்

அவள். "அகத்திற்கு வராமல் இருக்காதே அண்ணு!" என்ருள் விசுவத்திடம். "கட்டாயம்! உனக்கு ஒரு மாப்பிள்ளையையும் தேடிக்கொண்டு வருகிறேன்!" என்ருன் அவன்.

இத்தனை அமர்க்களத்திலும் கமலு தங்கம்மாளை மறக்கவில்லை. அவளை ஸேவாஸதனத்தில் விட்டுவிட்டுக் கல்பகத்துடன் அவள் இறங்கியிருந்த விடுதிக்குப் போனுள் கமலு. இரவு முழுவதும் ஓயாமல் பேசினர் சோதரிக ளிருவரும்.

"அக்கா! இனிமேல் என்ன 'பிளான்' சொல்லு!" என்று அவசரப்பட்டாள் கமலு.

"முன்பே அதைப் பற்றியோசித் தாயிற்று கமலு!"

"ஹூம்! அத்திம்பேருடனும், சரோஜாவுடனும் போகப்போகிருய்! அதுதானே?"......

உன் அக்காவை நீ அறிந்தது அவ்வளவுதான்; என்னைக் கேட்டாயே, உன் சொத்துக்களை நீ என்ன செய்யப் போகிருய்?" எனப் பதில் கேள்வி போட்டாள் கல்பகம்.

"எனக்கென்ன தெரியும்? உன் உத்திரவு."

அழகுதான்! "நீதான் கமலு என்றுதானே அதை வனஜாக்ஷி உனக்களித்தாள்? வாய் பிராணன் போகும் போதுகூட நான் வளர்த்தவளுக்கு அருகில் இல்லாது போனேனே? அந்தச் சொத்தை எடுத்தால் பாவம் எனக்கு!"

"கமலு! எனக்கு எதற்கடி சொத்து? உனக்குத் தான் கல்யாணமாக வேண்டும். ஆமாம் உன்னை ஒரு நல்ல இடத்தில் பிடித்துக்கொடுக்க வேண்டுமே?"

"போரும்! நான் என்ன மாடா நீ பிடித்துக் கொடுப்பதற்கு?"

"எனக்குப் பதினைந்து வயதில் கல்யாணம் நடந்தது தெரியுமா உனக்கு?"

"அப்படிச் செய்துகொண்ட கல்யாணத்தின் பலன் எப்படியாயிற்று, பார்த்தாயா? இவ்வளவு பேச்சு

இப்போது பேசுகிருயே, அக்கா! அப்போது பேசத் தெரியாமல் போனதினுல்தானே......

"சீ! பேசாமலிரு! அப்படியெல்லாம் என் வாழ்க்கை திரும்பியதும் ஒரு நன்மைக்கே!"

"நன்மைக்கா?" என்று ஆச்சரியம் ததும்பக் கேட்டாள் கமலு. ஆனுல், கல்பகம் பதில் கூறவில்லை.

சிறிது நேரத்தில் கமலு அயர்ந்து தூங்கிவிட்டாள். கல்பகத்திற்கு மட்டும் தூக்கம் வரவில்லை. ஏதேதோ சிந்தனைகள் மனத்தைக் கலக்கின. அவள் மனத்தைத் திடம் செய்துகொண்டு ஒரு தீர்மானத்திற்கு வர இரவு வெகுநேரமாயிற்று.

## அத்தியாயம் 16

மிருந்த பிரயாசையின் மீதே ஸேவாஸதனத்தை நடத்தி வந்தாள் தங்கம்மாள். அனாதைப் பெண்களின் வரவு அதிகரித்தது. ஆனால், அதற்கேற்ற வருவாய் வரவில்லை. கண்ணன் போன்ற தொண்டர்கள் பலர் நிதி சேகரித்துக் கொடுத்தும் ஸேவாஸதனத்தின் செலவை ஒப்பேற்ற முடியவில்லை. பாவம், தங்கம்மாள் தன் கையிருப்பையும் அதில் போட்டுவிட்டாள். இனி ஒன்று வெளியில் இருந்து வருபவர்களை ஏற்க மறுக்கவேண்டும், அல்லது பெரும் நிதி திரட்டவேண்டும்! எங்குபோவது? தங்கம்மாளின் உடல் நிலையும் வரவர நன்றாக இல்லை.

இதே ஏக்கத்தில் ஒருநாள் தங்கம்மாள் தனியே உட்கார்ந்து மேஜைமீது கை ஊன்றி நெற்றியை அதன் மீது அழுத்திப் பிடித்தவளாய் அமர்ந்திருந்தாள். "அம்மா!" என்று அழைத்தவண்ணம் கமலு முன்னால் வரப் பின்னால் கல்பகமும் நுழைந்தாள். இரு பெண்மணிகளையும் அன்புடன் அழைத்தாள் தலைவி.

"அம்மா! ஒரு விண்ணப்பம்!" என்றாள் கமலு.

"ஊம்! சொல்லேன்!" "இப்பொழுது நமது ஸேவாஸதனத்திற்குச் சிறிது பணம் தேவையாக இருப்பதை நானறிவேன். என் சகோதரி, வனஜாக்ஷியின் பணத்தை நல்ல விதத்தில் செலவழிக்க விரும்புகிறாள். ஆகவே நீங்கள் உத்தரவு அளிக்கும் பக்ஷத்தில் தங்களுக்கு உதவியாக நின்று, இந்த ஸேவாஸதனத்திற்கு கை கொடுத்து உதவலாமென்று, கல்பகம் திட்டம் போட்டிருக்கிறாள்......"

தங்கம்மாளின் முகம் மலர்ந்தது. எதைப்பற்றி அவள் சிந்தித்து மனதை வாட்டிக்கொண் டிருந்தாளோ, அதே

விஷயமாக வந்திருக்கிருளே இப் பெண்! பெண்களுக்கு ஒத்தாசை செய்யப் பெண்களே வருவது மிக மிகச் சிலாக்கியமே! இதுவரையில் நன்கொடை அளித்தோர் யாவரும் ஆண்கள்!" ஒரு கை என்ன? நான் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். கல்பகமே நடத்தட்டும் இந்த ஸ்தாபனத்தை!" என்ருள்.

ஆனல்! இந்தச் சென்னையில் அதை நடத்த அக்கா விரும்பவில்லை. ஸேவாஸதனம் வேண்டுமானல், இங்கே ஒரு கிளை ஸ்தாபனமாக இருக்கட்டும். வனஜாக்ஷி வசித்த திருச்சிக்குப் பக்கத்திலேயே கிராமாந்திரமான இடத்தில், ஒரு பெரிய கட்டடம் கட்டி, சித்திரம், கைத் தொழில், சிற்பம், தையல், பாட்டு ஆகிய சகலவிதமான கலைகளும்......"

"பேஷ்! அற்புதமான எண்ணம்!" என்று சொல்லிக் கை தட்டினுள் தங்கம்மாள். பெண் மக்களின் உயர்வைக் கேட்டாலே பூரித்துவிடுவாள் அவள்!

"ஆனல் ஒரு சந்தேகம்!" என்று சிறிது சிந்தனைக்குப்பின் கூறினுள் தலைவி. "என்ன என்ன?" என்று கேட்டனர் சகோதரிகள் இருவரும்.

"ஒன்றுமில்லை! கல்பகம் அவள் கணவனுடன் போய்விட்டால்?"

"அதைப்பற்றி நான் தீர்மானம் செய்தாகிவிட்டது. கமலு தன் சொத்து விஷயத்தில் இவ்வளவு தாராளமாய் இருப்பாளென்று நான் நினைக்கவேயில்லை. அவள் அதைப் பூராவும் தர்ம கைங்கரியத்திற்கென்று என்னிடம் அளித்துவிட்டாள். நானும் கமலுவும், அனுதையாகப் பல கஷ்டங்களுக்கு உட்பட்டோம். அனுதையான அவளை வனஜாக்ஷி வளர்த்தாள். அந்தப் பணத்தை அனுதைகளுக்காகச் செலவழிப்பதே சரியான மார்க்கமாகும். என் விஷயம் கேட்டீர்கள். இனி, கணவருடன் போய்

நான் குடித்தனம் செய்யப் போவதில்லை. அதைப்பற்றி முடிவு செய்துவிட்டேன். என் தங்கைக்கு இடமளித்துக் காத்த சரோஜாவைச் சக்களத்தியாக எண்ணக்கூட என்னால் முடியாது......"

"சக்களத்தியாக ஏன் எண்ணவேண்டும்? இன்னொரு தங்கையாக நினைக்கக்கூடாதா?" என்று கேட்ட வண்ணம் அச் சமயம் உள்ளே நுழைந்தாள் சரோஜா. கூட விசுவமும் வந்திருந்தான். "வா, வா, விசு! வா, சரோஜா!" என்று அழைத்தாள் தலைவி.

விசுவத்தைக் கண்டதும் கமலுவிற்கு வெட்கம் வந்து மூண்டுகொண்டது. கல்பகத்திற்குமட்டும் விசுவத்தின் மீது சிறிது கோபம். எப்படி அவன் தன் தங்கையின்மீது காதல் கொண்டதாக நடித்து, விமலாவிற்கு மோதிரங் கொடுக்கலாம் என்பதே அது. ராஜத்தின் கல்யாணத்துக் காவது 'வற்புறுத்தல்' என்று சாக்குச் சொல்லலாம். மேலும், தற்சமயம் அவள் விசுவத்தின் தங்கையாகி விட்டாள்! பாவம், கமலு அவன் பால் கொண்ட அன்பு அவள் அவனைப் பார்க்கும் பார்வையிலேயே தெரிகிறதே! துரோகி! விசுவத்தைப் பார்த்து கமலு புன்னகை புரிந் தாள். கல்பகமோ முகத்தைத் திருப்பிக் கொண்டாள். தங்கையிடம் தனியாக விமலாவைப் பற்றிக் கூறிவிட வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது அவள் மனத்தில்.

கல்பகத்தின் முகத்தில் கோபக்குறியைக் கண்ட விசுவிற்கு ஒன்றும் புரியவில்லை. என்ன தப்புச் செய் தோம் நாம், என்ற சந்தேகம் வலுத்தது அவன் உள் ளத்தில்.

* * *

விமலாவிற்குத் துக்கம் பொங்கிக்கொண்டு வந்தது. விசுவைக் காண எவ்வளவு ஆவலுடன் வந்தாள் அவள். அவனைப்பற்றி எத்தனை விஷயங்கள் தெரிகிறது இப்போது! கல்பகத்தின் பக்கத்தில் தான் நிற்கையில், அவன் கமலு

ளையே ஊடுருவிப் பார்க்கிறனே? அவ்வளவு சொத்தும் அழகும் நிறைந்த அவளை விட்டு விட்டுக் கேவலம் ஒரு பணிப் பெண்ணை மணப்பாஞ அவன்? ஹூம்! இப்படிப் பட்டவன் தனக்கு ஏன் மோதிர மளிக்க வேண்டும்? ஏன் தன் பேதை உள்ளத்தில் அன்புப் பெருக்கை உண்டாக்க வேண்டும்? "இருக்கட்டும்; இவனுக்குப் பணம் இருந்தால் எனக்கென்ன? கமலுவை அவன் மணக்கப் போவது மட்டும் நிச்சயமாகட்டும், மோதிர விஷயத்தை அம்பலப்படுத்தி விடுகிறேன்!" என்றெல்லாம் தனியே சிந்தித்துக்கொண் டிருந்தாள் அவள்.

வாசல் கதவு தட்டும் சப்தம் கேட்டது. கல்பகமும், கமலுவும் 'பீச்சு'க்குப் போயிருந்தார்கள். "அதற்குள் வரமாட்டார்களே!" என்ற எண்ணத்தோடு போய்க் கதவைத் திறந்தாள். கும்பிடப்போன தெய்வம் மாதிரி விசுவம் நிலைப்படியில் நின்றான்.

"ஒருத்தரும் இல்லையா?" எனக் கேட்டான் அவன். ஒரு நிமிஷம் யோசித்த பிறகு, "இருக்கிறார்கள், வாருங்கள்!" என்று உள்ளே அழைத்தாள். விசு மாடி ஏறிப் போனான். மெள்ள, மெள்ள, வெற்றிக் குறியுடன் பின்னாலேயே சென்றாள் விமலா.

"காப்பி சாப்பிடுகிறீர்களா?"

"வேண்டாம்! அவர்கள் இல்லை?"

"அடேயப்பா! என்ன துடிப்பு அவர்களைப் பார்க்க!"

"விமலா! என்ன இது? இந்த வீட்டு எஜமானிகள் எங்கே என்று கேட்கிறேன்?"

ஏற்கெனவே விமலாவின் மனத்தில் குமுறிக்கொண் டிருந்த துக்கமும், ரோஷமும் பீறிக்கொண்டு கிளம்பிற்று. "கேட்பது புரியாமல் இல்லை. இந்த விமலாவின்மீது மோகப்பட்டு மோதிரம் அளித்தீர்களே, அதன் கதி என்னவென்று நான் கேட்கிறேன்!" என்றாள்.

பாவம்! விசு அவளுக்கு மோதிரம் கொடுத்ததையே மறந்து விட்டான்! "மோதிரமா?" என்றான் ஆச்சரியத்துடன்.

"ஆமாம்! மோதிரமேதான்! இதோ பாருங்கள்! உங்கள் பெயர்கூடச் செதுக்கி யிருக்கிறது இதில்!"

"விமலா! உனக்கிது அழகல்ல! இப்போதுதான் ஞாபகம் வருகிறது! நீ எனக்குப் புரிந்த பணிவிடையின் பரிசு அது. இனி அதற்குத் தரவேண்டிய பணத்தைத் தந்து விடுகிறேன். தயவு செய்து மோதிரத்தைக் கொடுத்து விடு."

விமலா விகாரமான சிரிப்பு ஒன்று சிரித்தாள். "தேவலை! வெகு நன்றாய் இருக்கிறது! பணம்! பணத்தில் புரள்பவர்களுக்கு அது பிரமாதமாய்த் தோன்றலாம். எனக்கு அப்படி அல்ல. ஓர் ஆடவன் கல்யாணமாகாத ஒரு பெண்ணிற்கு மோதிரம் ஏன் அளிக்க வேண்டும்! இதை எல்லாரும் அறிவார்கள்...ஒரு வார்த்தை!—என்னையே மணம் புரிவதாகக் கூறுங்கள்! போதும்!" என்றாள்.

"என்ன தைரியம்! உனக்கு வெட்கமில்லையா?"

"வெட்கம் யாருக்கு இல்லை யென்பதை நான் நிரூபிப்பேன். உங்கள் காதலி கமலுவிடம் இதைக் காட்டி, 'இம் மோதிரம் விசுவால் எனக்கு அளிக்கப்பட்டது!' என்று ஒரு வார்த்தை கூறினால் போதும்."

"சே! நீ ஒரு பெண்ணா! கற்புக் கரசி கல்பகத்துடன் பழகியும் உனக்கு இந்தப் புத்தி போகவில்லையே? உன்னை மணப்பதைக் காட்டிலும், உயிரையே விட்டு விடலாம்!"

இதைக் கேட்டதும் பாம்புபோல் சீறினாள் விமலா. "என்னை மணக்காதவர் வேறு எவரையும் மணக்காதிருக்கச் செய்யும் முறை எனக்குத் தெரியும்!" என்று கத்தினாள். மாடிப் படியில் நின்று ஒரு வார்த்தை பாக்கி

யில்லாமல் கேட்டுக் கொண்டிருந்த கல்பகமும், கமலுவும், "என்ன பெரிய நாடகம் நடக்கிறது இங்கே!" எனக் கூறிக்கொண்டே அவ் வறையில் நுழைந்தார்கள். விசு ஏதோ கூறத் தொடங்கினான். கல்பகம் "எல்லாம் கேட்டுக் கொண்டேதான் இருந்தேன். நல்ல வேளை பர்ஸை மறந்துவிட்டபடியால் திரும்பினேன். போகிறது, விமலா! ஒரு விஷயம் சொல்கிறேன். உன்மீது ஆசையில்லாதவரைக் கட்டாய மணம் புரிவதில் உனக்கென்ன லாபம்? நான் உன் ஹிருதயத்தை நாடுபவள். என்னிடம் சொல் இவர் உன்னிடம் ஆசைப்பட்டு மோதிரங் கொடுத்தாரா? அல்லது அவர் சொல்வதுபோல், உன் பணிக்குப் பரிசா?'' என்று கேட்டாள். ஆனால் விமலா குனிந்த, தலை நிமிரவில்லை.

"விமலா! என் னறைக்கு வா! என்னிடம் கூறு! நீ கல்யாண மாகாதவள் அல்ல, கணவனால் புறக்கணிக்கப் பட்டவள். உன் கணவன் இருக்கு மிடத்தை வனஜாக்ஷி அறிந்திருந்ததும் எனக்குத் தெரியும்! அவள் இறப்பதற்குச் சில நாட்கள் முன்பு பேசிய வார்த்தைகள் மூலம் இவ் விஷயங்களை நான் அறிந்தேன்'' என்றாள் கல்பகம்.

"அம்மா! போதும், என் மானத்தை வாங்காதீர்கள்!'' என்று அழுதாள் விமலு. "சிறிது நேரத்துக்கு முன் துள்ளிக் குதித்த அதே விமலாவா இவள்?'' என்று அதிசயித்தார்கள் கமலுவும், விசுவும். விமலா தானே மரியாதையாக மோதிரத்தைக் கழற்றி விசுவிடம் அளித்தாள். விசு கல்பகத்தை நன்றியறிதலுடன் நோக்கினான்.

* * *

விசுவிற்குக் கமலுவின்மேல் உள்ள அன்பை நன்றாக அறிந்திருந்தவள் சரோஜாதான் எனலாம். அவன் பொருட்டுப் பாட்டியிடம் தர்க்கம் செய்தாள் அவள். "நீ என்னதான் சொல்லு! தேவடியாள் வீட்டில் வளர்ந்த

பெண்தானே கமலு? நமக்கு அது தாழ்வு இல்லையா? விசு என் பேரனென்றுதான் உலகம் பூராவாய் நினைத்திருக்கிறது. இப்போதுதானே ராஜலக்ஷ்மி வீட்டாரே அறிந்தார்கள்? இல்லை, பிறத்தியார் பிள்ளை என்றறிந்தவர்கள் கூட என்ன சொல்லுவார்கள்? 'தன் பேரனானல், அம்மணி இப்படிப் பெண் பார்ப்பாளா, பிறத்தியார் வீட்டுப் பையன் ஆனதினுல்தானே 'ஏனோதானோ' என்று பண்ணிவிட்டாள்?' என்றுதான் ஏசுவார்கள்.''

"பாட்டி! பிறத்தியார், பிறத்தியார் என்று ஏன் அடித்துக்கொள்கிறாய்? நாம் வாழ்வதே பிறத்தியாரின் பேச்சுக்காகத்தானே? உன் மட்டில் கமலுவின் குணம் உனக்கு பிடித்திருக்கிறதா, இல்லையா? மலர்ந்த முகம்; அடங்கிய சுபாவம், பாட்டு, படிப்பு; நல்ல குலம்; வேறென்ன வேண்டும்? விசுவுக்கோ அவள் மீது பிராணன். இந்தக் காலத்து ரீதியையும் பார்க்கவேண்டும். பிறத்தியாரைப் பற்றி இவ்வளவு பயப்படுகிறாயே? விசு என்ன எண்ணுவான் என்று நீ நினைக்கவேயில்லையே பாட்டி! ஒருதரம், உனக்குச் செய்யவேண்டிய கடமைக்காகத் தனக்குப் பிடிக்காத பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள ஒத்துக் கொண்டானே? என்னவாயிற்று? சுவாமியே பார்த்து நிறுத்தினது போல் நின்றது அந்தக் கல்யாணம். ஒருவருக்காக யோசனை செய்யாதே! உனக்கு இந்த வயசுக்குமேல் யார் என்ன சொன்னால் என்ன? விசுவின் சந்தோஷம்தானே உனக்குப் பெரிது?''

பாட்டியின் மனம் இளகிக்கொண்டே வந்தது. சரோஜாவிற்கு இவ்வளவு அழகாய்ப் பேசத் தெரியுமென்று அவள் நினைக்கவேயில்லை! "ஆகட்டுமடி கண்ணே! நீ சொல்லும்போது நான் மறுப்பேனா'' என்று கூறி, பேத்தியின் நெற்றிமீது கைவைத்துத் திருஷ்டி கழித்தாள் பாட்டி.

நல்ல முகூர்த்தத்தில், சிரஞ்சீவி விசுவநாதனுக்கும் சௌபாக்கியவதி கமலுவுக்கும் விவாகம் நடந்தேறியது. கல்பகம் விசுவை நோக்கி "இப்பொழுது கூறுங்கள் கமலு தன் சொத்தை தர்மத்திற்கு அர்ப்பணஞ் செய்ததில் உங்களுக்கு இஷ்டம் இருக்கிறதா, இல்லையா என்று" எனக் கேட்டாள் விசுவம் "ஓஹோ! என் மனத்தை யறியப் பார்க்கிறீர்களா! கமலு ஊர் பேர் தெரியாத அனாதை என்று கேட்டபொழுதே அவளை விரும்பினவன்தானே நான். இப்பொழுது மட்டும் என்ன? என்றான். "சரி கமலு தன் சொத்தை யெல்லாம் எனக்குக் கொடுத்து விட்டாள். இனி அது என்னுடையது. ஆகவே, அதில் கால்பாகத்தை நான் ஸ்திரீ தனமாக அவளுக்கு அளிக்கிறேன்" என்று கூறி நகைத்தாள் கல்பகம்.

ஐந்தாறு நாட்கள் வெகு வேடிக்கையாகக் கழிந்தன. கடைசியில் சரோஜா ஊர் கிளம்பும் நாளும் வந்தது. காலில் விழ மாட்டாக் குறையாய் கல்பகத்தைத் தன்னுடன் வரும்படி சரோஜா வேண்டினாள். "இது விஷயத்தில் தயவு செய்து என் இஷ்டத்திற்கு விட்டு விடுங்கள்" என்று ஒரேயடியாய் மறுத்து விட்டாள் அவள்.

அவள் அப்படி மறுக்கும் காரணம் என்னவென்று கமலுவைக் கேட்டாள் சரோஜா. 'கல்பகத்திற்கு ஒரு விதத்தில் வாழ்க்கையே வெறுத்து விட்டதாகவும், அனாதைப் பெண்களுக்குத் தன்னாலான சேவை செய்து, தன் வாழ்க்கையை கழிப்பதற்கே அவள் விரும்புவதாகவும் கூறினாள் கமலு. "சரி, கொஞ்சநாள் விட்டுப் பிடிக்கலாம்' என்ற எண்ணத்துடன், பெங்களூருக்குப் பிரிய மனமில்லாது பிரிந்து சென்றாள் சரோஜா.

* * *

இவை யெல்லாம் நடந்து ஒரு வருஷமாயிற்று. தற்சமயம், திருச்சினாப்பள்ளிக் கருகே ஸ்ரீமதி கல்பகவல்லி

யால் நடத்தப்படும் 'வனிதாலய'த்தை அறியாதார் கிடையா தெனலாம். ஆலயத்தின் முன் ஹாலில் வன ஜாக்ஷியின் பெரிய படம். அதற்குப் பக்கத்தில் அலமேலு அம்மாள்.

கண்ணன் இன்றும் தொண்டனே! ஆனல் கல்பகத் தின் முயற்சியால் கால் கட்டு ஒன்றும் ஏற்பட்டு விட்டது அவனுக்கு. ஆம்! ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி தேவிதான் அவள். விமலாவின் கணவன் எங்கெங்கோ போய், சீரழிந்து விட்டு வந்து சேர்ந்தான். கல்பகம் அளித்த பண உதவி யைக் கொண்டு கணவனுடன் குடித்தனம் செய்கிருள் அவள்.

ஊரெல்லாம் புகழ வனிதாலயத்தை நடத்தினுள் கல்ப கம். ஆனல், பிறர் புகழுவதினுல், அவளுக்கு கொஞ்ச மேனும் சந்தோஷம் ஏற்பட்டதா? இல்லை யென்றுதான் கூற வேண்டும். உள்ளூர ஓர் ஏக்கம், ஒரு குறை இருக் கத்தான் செய்தது. கமலு, சரோஜா எல்லோரும் அடிக் கடி வருகிருர்கள். நாளுக்கு நாள் விருத்தியடைந்து வரும் வனிதாலயத்தைக் கண்டு களிக்கிருர்கள். ஸ்தாப னத்தின் பாதி வேலை ராஜலக்ஷ்மி செய்கிருள். தொண் டனை மணந்தவள் அல்லவா அவள்?

ஓர் நாள் வனிதாலயத்தின் தோட்டத்தில், ராஜலக்ஷ்மி, கமலு, சரோஜா, கல்பகம் எல்லாருமாகக் கூடிப் பேசி யிருந்தனர். "அக்கா! சரோஜாவிற்கு ஒரு சந்தேகம்!" என்றுள் கமலு.

"என்ன அம்மா அது!" என வினவினுள் கல்பகம்.

"உங்கள் தங்கை கமலுவை மூன்ருவது வயதில், மாயவரத்தில் துலா ஸ்தானத்தன்று, கூட்டத்தில் திருடி, விற்ற அந்த ரங்கய்யனை நீங்கள் அறிவீர்கள் என்று ராஜம் சொல்கிருள். அப்படி யிருக்க அப் பாபியைத் தேடி நீங்கள் ஏன் தண்டிக்கலாகாது? அவன்தான் இவ

ரிடமும் உங்களைப் பற்றி அவதூறாகச் சொன்னாளும்'' என்று உணர்ச்சி ததும்பக் கேட்டாள் சரோஜா.

கல்பகம் அதற்குப் பதில் சொல்வதற்குள் "ஐயோ! பைத்தியம்! பைத்தியம்!!" என்று கூவிக் கொண்டே சில சிறுமிகள் ஓடி வந்தனர். "என்னடி அது?" என்று கேட்ட வண்ணம் அந்தப் பக்கம் பார்த்தனர் பெண்மணிகள் நால்வரும். "ஐயோ பாவம்! ஆள் உரு தெரியாமல் போய் விட்டானே!" என்றாள் அந்த கிழிசல் உடையணிந்த மனிதனைப் பார்த்துக் கல்பகம்.

"அடாடா! அது ரங்கய்யன் அல்லவா? நூறு வயசு தான் அவனுக்கு. பேர் சொல்லும் போதே வந்து விடுகிறானே!" என்று சிரித்தாள் ராஜம். "என் கிழிசல் துணியைப் பார்த்து பைத்தியம் என்கிறார்கள். ஐயோ! நான் பைத்தியம் இல்லை. பஞ்சம், பட்டினி இவைகளால் உருமாறிவிட்டேன்!" என்று கத்திக் கொண்டே வந்து விழுந்தான் அவன்.

ஹூம்! வினைக்குப் பலன்! யாரையாவது கூப்பிட்டு இந்த ஆளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போகச் சொல்லுங்கள்!" என்றாள் கமலு. வனிதாலயத்தில் புருஷர்களுக்கு இடமேது? இருந்தால், அவன் துஷ்டனாயினும் பராமரித்திருப்பாள் கல்பகம். ஆஸ்பத்திரியில் அவனைப் போய் பார்த்தார்கள். கல்பகத்தை அங்கு அடையாளம் கண்டு கொண்டான் அவன். "அம்மா! கல்பகம்! என் கெடுமதியே என்னை இக்கதி வரையிலும் கொண்டு வந்து தள்ளி விட்டது. ஒரு விஷயம்...உனக்கு ஒரு தங்கை..." என்றான்.


"எல்லாம் அறிவேன்! இதோ அவள்!"

"அம்மாடி" என்றான் ரங்கய்யன்.

பெண்மணிகள் நால்வரும் மாலை பூஜைக்காக ஆலயத்தில் நுழைந்தனர். வனிதாலயத்தில் 'டிங்! டிங்! டிங்!' என ஆறு மணி அடித்தது.

## வனிதாலயம்

வாழ்க பெண் குலமே! வனிதாலயம் வாழியர், மகோன்னதமே! என்று, பாட்டின் கடை ஓசை காற்றினூடே மிதந்து வந்தது.



Shanti Press Ltd., P.I.C. No. MS. 23
apettah, Madras—10-12-'46

# பவானி பிரசுரம்

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| சுந்தரி | வ. ரா. | 5 | 0 | 0 |
| சஞ்சீவி | 'துகப்பிரியை' | 3 | 4 | 0 |
| பவானி | 'லக்ஷ்மி' | 2 | 8 | 0 |
| மஞ்சி விரட்டு | கொத்தமங்கலம் சுப்பு | 3 | 8 | 0 |
| காதல் | வாண்டா வாஸிலெவ்ஸ்கா | 3 | 12 | 0 |
| ஜெயகாதல் கீதம் | துர்கனேவ் | 0 | 8 | 0 |
| வனிதாலயம் | சகுந்தலா ராஜன் | 2 | 0 | 0 |

## தயாராகின்றன

அசோக மௌர்யன் — 'துகப்பிரியை'

பெண் மனம் — 'லக்ஷ்மி'

வாழ்க்கைச் சித்திரம் — 'வ. ரா.'

அன்னா கரினினா — டால்ஸ்டாய்

வானவில் (2-ம் பதிப்பு) — வாண்டா வாஸிலெவ்ஸ்கா

ராயவரம், புதுக்கோட்டை ஸ்டேட்.